மூன்றாண்டு நிலைமை அறிக்கை

2021-2023

வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்கள்

உள்ளடக்கம்

			பக்க இல.
	நிறைவேற்று பொழிப்புரை		6
	வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்களின் அவதானிப்புகள்		9
1	விவசாய மற்றும் பெருந்தோட்ட பிரிவு		
	1.1	தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம்	9
	1.2	விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01	13
	1.3	விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01	18
	1.4	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்	24
	1.5	சிறியளவிலான விவசாய வணிகங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்கும் செயற்திட்டம்	35
	1.6	சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்	39
2	நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் பிரிவு		
	2.1	நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்	47
	2.2	நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்- மேலதிக நிதியம்	60
	2.3	களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம்	65
	2.4	நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முன்முயற்சி செயற்திட்டம்	68
	2.5	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்	71
	2.6	யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்	78
	2.7	இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் - பிரிவு 01 கட்டம் - 02 செயற்திட்டம்	84
	2.8	மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம்	86
	2.9	அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2	88
	2.10	அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டக் கட்டம் I	91
	2.11	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 3	97

	2.12	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 2	104
	2.13	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 1	113
	2.14	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் - 02 (அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் எரிசக்தி சேமிப்பு செயற்திட்டம்)	119
	2.15	கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்	130
	2.16	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டுநிகழ்சித் திட்டம் - 02	136
	2.17	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டுநிகழ்சித் திட்டம் - 03	144
3	நெடுஞ்சாலைகள் துறை		
	3.1	ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்	150
	3.2	இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்	155
	3.3	ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்	159
	3.4	பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம்	162
	3.5	சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம்	165
	3.6	பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம்	168
	3.7	களனி ஆற்றிற்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டம்	174
	3.8	25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம்	176
	3.9	கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம்	178
	3.10	போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்டம்	182
	3.11	கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண செயற்திட்டம்	185
	3.12	சீனாவின் எக்ஸிம் வங்கி (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம	188
	3.13	மண்சரிவு விபரீதங்களிலிருந்து பாதுகாத்தல் செயற்திட்டம்	192
	3.14	கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் (OFID II)	195
	3.15	துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டம	200
	3.16	ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ - 017 வீதி நடைபாதையின் புனரமைப்பு செயற்திட்டம் (றக்வான – சூரியகந்த)	205
	3.17	போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம்	210

	3.18	மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் (OFID III)	214
4	சமூக போக்குவரத்து பிரிவு		
	4.1	கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றக் கருத்திட்டம்	220
	4.2	கொழும்பு அண்டிய புகையிரதக் கருத்திட்டம்	229
5	கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி பிரிவு		
	5.1	பொது கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டடம் - கூறு II	236
	5.2	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் - கூறு II	243
	5.3	உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (நிகழ்ச்சித்திட்டக் கூறு)	248
	5.4	உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (செயற்திட்டக் கூறு)	254
	5.5	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம்	256
	5.6	இலங்கையில் தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் (வுஏநுவு) தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை ஏற்படுத்தும் செயற்திட்டம் (திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மானியம்)	260
	5.7	திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கடன்)	269
6	வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி பிரிவு		
	6.1	அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம்	283
	6.2	கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம்	294
	6.3	நகர செயற்திட்ட தயார்படுத்தல் வசதி செயற்திட்டம்	302
7	நீர்பாசனப் பிரிவு		
	7.1	மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1	306
	7.2	மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 2	314
	7.3	ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம	330
	7.4	காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பல-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை செயற்திட்டம்	337
	7.5	காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (CRIWMP)	341
8	உள்ளூராட்சி விரிவாக்கல் பிரிவு		
	8.1	முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் (RIDEP)	347
	8.2	போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (PRDP)	351
	8.3	உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் (LDSP)	357
	8.4	உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (டுபுநுளீ)	365

	8.5	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் - (கூறு 1 – மாகாண பகுதி) (GEM)	368
9	திறைசேரி மற்றும் அரச கடன் பிரிவு		
	9.1	பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான செயற்திட்டம்	374
	9.2	உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டம்	382
	9.3	நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம்	393
	9.4	உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டுச் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு ஆக்கக்கூறு	396
	9.5	சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம்	399
10	இடர் முகாமைத்துவ பிரிவு		
	10.1	தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்கான செயற்திட்டம்	403
11	வனம், வனவிலங்குகள் மற்றும் சுற்றாடல் பிரிவு		
	11.1	சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்	405
12	மின்வலுத் துறை		
	12.1	நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம்	412
	12.2	மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம்	419
	12.3	பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் -1)	422
	12.4	பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் II)	433
13	**சுகதார துறை**		
	13.1	கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம்	437
	13.2	சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டம்	440
	13.3	சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பு	444
	13.4	சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம்	451
	13.5	சுகாதார முறைமையினை பொறுப்பேற்றல் செயற்திட்டம் - (HSRP)	456
	13.6	ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I	460
	13.7	ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II	465
	13.8	கொவிட்-19 தடுப்பூசி பொறுப்பேற்றலுடனான மீட்பு செயற்திட்டம்	468
	13.9	கொவிட்-19 அவசரகால பொறுப்பேற்றல் மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும்	470

		கொவிட்-19 அவசரகால பொறுப்பேற்றல் மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம்	
	13.10	கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார் நிலைசெயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பு	475

நிறைவேற்று பொழிப்புரை

வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்கள் தொடர்பான மூன்றாண்டு அறிக்கை

1. இலங்கையில் வலுவான ஏற்றுமதி வருமானமொன்று காணப்படாதிருந்ததுடன் உள்நாட்டு சந்தையிலும், உள்நாட்டு கைத்தொழில்களில் இருந்தும் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக தேவையான கனிய வளங்கள் மற்றும் தரமான உற்பத்தி காணப்படாமையின் காரணமாக உலக சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிக்காக நெகிழ்வற்ற கேள்விகளும் இல்லை. மேலும் இலங்கை ஆடம்பர வாழ்க்கை முறைக்கு பழகிவிட்டது. அதனால் நாட்டில் நாளாந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக கணிசமான பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது.

2. இலங்கையின் பிரதான ஏற்றுமதி வருமானம் தேயிலை, ஆடைகள், வாசனைப் பொருட்கள் போன்ற உற்பத்திகள் மற்றும் பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் பெறப்படுகின்றது. எனினும் பல வருடங்களாக இந்த வருமானம் நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகள் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்காக போதியளவில் இல்லை. அதனால் பல வருட காலம் முதல் இலங்கையின் வர்த்தகக் கணக்குகளில் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதனால் நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வதற்குக் கூட நாட்டின் ஏற்றுமதி வருமானம் போதியளவில் காணப்படவில்லை.

3. எனினும் மூலதனச் செலவினம் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அத்தியவசியமான கூறாக இருந்தமையால் மக்களின் வாழ்வாதார நிலைமையைக் கட்டியெழுப்புவதற்காக நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளாக மின்சாரம், நீர், நெடுஞ்சாலைகள், சுகாதாரம், கல்வி போன்ற துறைகளின் அபிவிருத்தி முக்கியமானதாகக் காணப்பட்டது. அவ்வாறே நாட்டில் முதலீட்டாளர்களின் உற்பத்திக்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்ததுடன் அதற்காக தேவையான ஏனைய வசதிகளை வழங்கி நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்கு அவர்களின் பங்களிப்பை பெறுதல் வேண்டும். அதனால் நாட்டிற்கு தேவையான மூலதனம் வெளிநாட்டு கடனாக பெற்று நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்படல் வேண்டும். இந்த வெளிநாட்டு நிதியீட்டல் செயற்திட்டம் உரிய அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடையதாக அமுல்படுத்துகின்ற நிறுவனங்களின் பெயரில் செயற்படுத்தப்படுகின்றது. இந்த செயற்திட்டத்தின் மூலம் நாட்டின் மூலதனச் செலவினத்திற்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் மானியம் உரிய செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்வதற்காக உரிய பிரகாரம் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும்.

4. எனினும் இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றாமல் நாட்டில் வெளிநாட்டுக் கடன் வேகமாக அதிகரித்து செல்வதற்கு தொடர்ச்சியாக விவாதங்களுக்கு உட்படுவதுடன் அதற்கு காரணமாக உரிய அமைச்சுக்கள் மற்றும் அதனை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட மேற்பார்வை பரிவுகளின் நலிவாக இருந்தமையால் ஆகும்.

5. இதற்காக பிரதானமாக மேற்கூறப்பட்ட நிறுவனத்தால் உரிய செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தன.

i. செயற்திட்டத்திற்காக உரிய திட்டமிடல் காணப்படாமை.

ii. கடன் அல்லது மானியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.

iii. செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக அல்லது செயற்திட்டத்தை ஸ்தாபித்தல் தொடர்பாக அரச நிறுவனங்களுக்கிடையே தொடர்பொன்று காணப்படாமை.

iv. காணி கைப்பற்றல் போன்றவை தாமதமடைந்தமையினால் ஒப்பந்தகாரருக்கு நிர்மாணங்களை வழங்குதல் தாமதமடைந்தமை.

v. செயற்திட்டத்திற்காக தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை.

vi. கால நிலை மற்றும் தட்ப வெப்ப நிலைமைகள் தொடர்பான பிழையான எதிர்வு கூறலின் காரணமாக செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் வசதியீனமாக இருந்தமை.

6. மேற்கூறப்பட்ட காரணங்களினால் வெளிநாட்டு முதலீட்டு செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட தினங்களில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்களின் நிதியத்தை ஈடுபடுத்துதலில் விளைவற்று இருந்தது.

i. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் வெளிநாட்டு நிதி வழங்கப்படாமையின் காரணமாக மேலதிகக் கட்டணங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டமை.

ii. எதிர்பார்க்கப்பட்ட தினங்களில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற உள்ளீடுகளின் கிரயம் அதிகரித்துச் சென்றமையால் செயற்திட்டக் கிரயம் அதிகரித்தமை.

iii. செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் குறித்துரைத்த காலத்தில் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் மூலம் நலன்களை எதிர்பார்க்கின்ற மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை.

iv. உரிய செயற்திட்டங்களின் மூலம் அரசு எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை.

v. உரிய செயற்திட்டங்கள் குறித்த நேரத்தில் பூர்த்தி செய்யாமையின் காரணமாக உற்பத்தி அல்லது வழங்கல் அல்லது சேவைகள் வீழ்ச்சியடைந்தமை.

vi. செயற்திட்டம் தாமதத்தின் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் அல்லது பாதிப்புக்கள் அதிகரித்தமை.

vii. செயற்திட்ட தாமதத்தின் காரணமாக செயற்திட்ட மேற்பார்வை அலகை பேணிச்செல்வதற்கு மேலதிக தொகையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை.

viii. ஒப்பந்தகாரர்களுக்காக மேலதிக தொகையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டமை.

ix. அந்நியச் செலாவணி விகிதம் மாற்றமடைந்தமையினால் செயற்திட்டக் கிரயம் கணிசமான அளவில் அதிகரித்தமை.

x. நாட்டின் மீதான நம்பிக்கை இழந்தமையினால் வெளிநாட்டு கடன் வழங்குகின்ற நிறுவனங்கள் நாட்டில் முதலீடு செய்வதிலிருந்து விலகிச் சென்றமை.

7. நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு நிதி வழங்குகின்ற நிறுவனங்களினால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 351,623 மில்லியன், ரூபா 783,326 மில்லியன் மற்றும் ரூபா 831,952 மில்லியன் வெளிநாட்டுக் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

8. இந்த வெளிநாட்டு நிதி உதவியின் மூலம் செயற்திட்டங்கள் நாடு முழுவதும் 13 பிரதான பிரிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் இந்த செயற்திட்டங்களுக்கு உரிய ஆரம்ப தகவல்கள் செயற்திட்டத்தின் நிதிய செயற்பாடுகள் தொடர்பாக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக நிதிசார் செயலாற்றல், அந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள், அந்த அவதானிப்புக்களுக்காக செயற்திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை பின்வருமாறு.

வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்களின் அவதானிப்புகள்

01. விவசாய மற்றும் பெருந்தோட்ட பிரிவு

1.1. தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம்

2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்திற்காக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய கடன் உடன்படிக்கை இலக்கம் 2000001447 இன் கீழ் ரூபா 3,349 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 5,153 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 02 கட்டங்களில் நீடிக்கப்பட்டு 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021, 2022 மற்றும் 2023 என்ற 03 ஆண்டுகளுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்கத்தின் நிதியம்	521.60	575.66	253.97
வெளிநாட்டு நிதியம்	620.33	670.53	1,587.66
மொத்த சொத்துக்கள்	5,383	10,552	11,842
மொத்த பொறுப்புக்கள்	5,383	10,552	11,842
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	816.66	943.27	1,617.33
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	807.82	969.50	594.19

அந்த முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	2016 முதல் 2023 செப்தெம்பர் வரை தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில்	2023	திட்டமிட்ட பிரகாரம் அதன் செயற்பாடுக	2023.12.31 இல் உள்ளவாறு தேயிலை மீள் பயிரிடல் செயல்	மீள் பயிரிடல் இலக்கில் ஹெக்டெயர் 4131 மாத்திரம்

	5500 ஹெக்டெயர் தேயிலை காணிகளை புனரமைத்து மீள் பயிரிடுவதற்கு செயற்திட்டம் மூலம் திட்டமிட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் திட்டமிட்டவாறு 2016 இல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முடியாமையின் காரணமாக தேயிலை காணிகளை மறுசீரமைத்து மீள் பயிரிடும் இலக்கு 4,500 ஹெக்டெயர் வரை திருத்தப்பட்டிருந்தது.		ள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	முன்னேற்றம் ஹெக்டெயர் 4,500 கூட்டுமொத்த இலக்கில் ஹெக்டெயர் 4,131 ஆகும். அதன் பிரகாரம் தேயிலை மீள் பயிரிடல் ஹெக்டெயர் 369 அளவு இன்னும் பூர்த்தி செய்யப்பட வில்லை. அதன் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படும் போதும் தேயிலை மீள் பயிரிடலில் மொத்த செயல் முன்னேற்றம் 92 சதவீதமாக அறிக்கையிடப்படும்.	மீள் பயிரிடப்பட்டுள்ளது. 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி செயற்திட்டம் முடிவடைந்துள்ளது.
(ஆ)	மானியத் திட்டங்களின் கீழ், 2017 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் ஆறு மாவட்டங்களில் மொத்தமாக 242 ஹெக்டெயர் நிலப்பரப்பில் தேயிலையை மீள் பயிரிடுவதற்கான அனுமதியை பெற்றுள்ள 805 பயனாளிகளுக்கு ரூபா 36 மிலலியன் ஆரம்ப கொடுப்பனவுகள் பெற்று பல்வேறு காரணங்களின் அடிப்படையில் எந்த பணியையும் ஆரம்பித்திருக்கவில்லை.	2023	செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மேற்பார்வையில் நிதியத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.	இந்த தொகையை செலுத்தி தீர்த்துவைப்பதற்காக நியாய சபைக்கு அனுப்பப்பட்ட தொகை ரூபா 10.02 மில்லியன் (அமெரிக்க டொலர் 30,383) ஆக இருந்ததுடன் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ள தொகை ரூபா 25.91 மில்லியன் (அமெரிக்க டொலர் 78,501)	விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதியத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் 2023 இன் மூன்றாவது காலாண்டில் நியாயப்படுத்தப்பட்ட மொத்தத் தொகையில் US$ 108,884 அதாவது ரூபா 35.93 மில்லியன் குறைக்கப்பட்டதுடன் IFAD இன் அறிக்கைகளில்

				ஆகும்.	பொருத்தமற்ற செலவினங்கள் நீக்கப்பட்டிருந்தது.
(இ)	இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான அம்பாறை மாவட்டத்தில் பதியத்தலாவையில் அமைந்துள்ள நாற்றுமேடையில் இருந்து ஆண்டொன்றிற்கு 250,000 இறப்பர் நாற்றுக்களை விநியோகிக்கும் திறனை கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் மூலம் நாற்று மேடை அபிவிருத்திக்காக செயற்திட்டத்தால் ரூபா 45 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் மூலம் நாற்றுமேடை அபிவிருத்திக்காக ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டமானது அதன் நாற்று மேடையில் இருந்து 40,365 இறப்பர் நாற்றுக்களை மாத்திரமே பெற முடிந்ததுடன் மிகுதி தொகை ஏனைய நாற்று மேடைகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனால் நாற்றுக்களை போக்குவரத்து செய்வதற்காக மேலதிகமாக ரூபா 22	2021, 2022	தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்காக உரிய சகல நடவடிக்கைகளும் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.	2023.05.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 53.69 மில்லியன் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் பதியத்தலாவ நாற்றுமேடை மூலம் வழங்கப்பட்ட மொத்த மொட்டு இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை 40,365 ஆகும். எதிர்காலதத்ற்கு தேவையான 325,039 இல் RDD இன் ஏனைய நாற்று மேடைகள் மூலம் வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 312,417 மாத்திரம் ஆகும். 2022 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் நலனாளிகளின் காணிகளுக்கு கொள்வனவு	பதியத்தலாவ நாற்று மேடையில் நாற்றுக்களின் உற்பத்தி 2023 ஆம் ஆண்டில் 44,457 ஆக இருந்ததுடன் செயற்திட்டம் முடிவடையும் போது மொத்தமாக 83,451 நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

மில்லியன்
செலவிடப்பட்டிருந்தது.

செய்யப்பட்ட
மொட்டு இறப்பர்
நாற்றுக்களை
பகிர்ந்தளிப்பதற்க
ாக ரூபா
22,097,293
போக்குவரத்து
செலவினம்
செய்யப்பட்டுள்ள
து.

1.2 விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01

2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் உடன்படிக்கை இலக்கம் 5873–எல்கே இன் கீழ் ரூபா 11,700.61 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 8,451 மில்லியன் ஆகும். செயற்திட்டம் ஒரு கட்டத்தின் போது நீடிக்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆணடுகளுக்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2023 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	5,239	7,440	8,732
அரசாங்கத்தின் நிதியம்			
வெளிநாட்டு நிதியம்			
மொத்த சொத்துக்கள்	23,115	31,594	40,727
மொத்த பொறுப்புக்கள்	7,262	6,881	5,751
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	5,620	7,634	13,949
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	3,283	4,760	14,809

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	செயற்திட்ட நிதியத்திற்குரிய சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில்	2021 2022 2023	எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்டத்தி	குறிப்பிடப்பட்டுள்ள பீடீஓ நான்கின் செயல் முன்னேற்றம் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட உப செயற்திட்டங்களின்	எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 95.7 சதவீதம் ஆக இருந்த போதும் 2024 ஆகஸ்ட் மாதம் இறுதி

காண்பிக்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 55 சதவீதத்தைவிட குறைந்த சதவீதம் அடையப்பட்டிருந்த நான்கு இலக்குகள் 05 வருட செயற்திட்டக் காலத்தில் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்வரும் ஒன்றரை வருட காலத்தில் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமா என்பது தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது.

னால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரமாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்ட உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை 630 ஆகும். குறித்துரைத்த இலக்கைப் பூர்த்தி செய்வதற்குரிய மேற்கூறப்பட்ட குறிகாட்டிகள் (பீடீஓ) கணிப்பிடுவதற்கு ஒட்டுமொத்த உப செயற்திட்டங்களின் எண்ணிக்கையில் 55 சதவீதம் மீளாய்வு செய்வதற்கு உபசெயற்திட்டங்கள் 758 எஞ்சியிருந்தது. கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் அண்மைய காலங்களில் பொருளாதார நெருக்கடி மற்றும் ஆரம்பித்தலில் தாமதம் மற்றும் சவால்களின் காரணமாக அந்த 04 பீடீஓ குறிகாட்டிகள் பின்னடைவான நிலைமையைக் காண்பித்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் 2 ஆவது காலாண்டு முதல் ஒழுங்கு முறையாக அபிவிருத்தி ஒன்று காண்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 758 உப செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் போது மிகுதி 20

வரையில் கைப்பற்றப்பட்ட இலக்கு 76.8 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப் பட்டமையால் செயற்திட்ட காலம் முடிவடையும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

				மாதங்களில் இலக்கை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றத்தின் அடிப்படையில் பீடீஓ இன் இறுதி இலக்கை அடையக் கூடியதாக இருக்கும்.	
(ஆ)	செயற்திட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளின் பலவீனம் காரணமாக, முதலீட்டாளர்களுக்கு செயற்திட்டத்தின் மூலம் இணை மானியத்தின் முதல் தவணையாக வழங்கப்பட்ட 263 முதலீட்டாளர்களுக்கு இரண்டாவது தவணையாக ரூபா 1,023 மில்லியன் வழங்கப்படுதலானது செயற்திட்டம் தொடங்கப்பட்ட திலிருந்து 2022 திசெம்பர் 31 வரை தாமதமானது. மேலும், முதல் தவணை மற்றும் இரண்டாவது தவணை வழங்கப்பட்ட 249 முதலீட்டாளர் களுக்கு மூன்றாவது தவணையாக செலுத்த வேண்டிய ரூபா 389 மில்லியன் வழங்கப்படுதலானது செயற்திட்டம் தொடங்கப்பட்டதி லிருந்து 2022 திசெம்பர் 31 வரை தாமதமானது.	2021 2022	குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்பார்த்த இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும்.	இதற்குப் பிரதான காரணமாக முதலீட்டாளர் முகம் கொடுத்த பல்வேறு பிரச்சனைகள் ஆகும். 2 ஆவது தவணை விநியோகிக்கும் செயற்திட்டத்தின் 1 ஆவது தவணையின் செயல் முன்னேற்றத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டு இருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட சதவீதம் (மானியம் மற்றும் சுய பங்களிப்பு) பூர்த்தி செய்யப்படும் வரை மேலும் நிதியம் விநியோகிக்கப்படவில் லை.	எதிர்பார்க்கப்ப ட்ட இலக்கில் 95.7 சதவீதம் ஆக இருந்த போதும் 2024 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையில் கைப்பற்றப்பட்ட இலக்கு 76.8 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப் பட்டமையால் செயற்திட்ட காலம் முடிவடையும் போது எதிர்பார்க்கப்ப ட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த து.
(இ)	2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 85.72 மில்லியன் இணை மானியங்கள் சில நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவை தமது செயற்திட்டங்களை கைவிட்டிருந்தன. மானியங்கள் திரும்பப் பெறப்பட வேண்டிய	2021 2022	நிதி திறமையாக பயன்படுத்தப்ப ட வேண்டும்	மிகுதித் தொகையான ரூபா 36.997 மில்லியன் பெறுமதி முதலீட்டாளர்கள் 04 பேர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய மிகுதித் தொகை இது வரை அறவிடப்பட்டிரு க்கவில்லை.

	போதிலும், ரூபா 49.48 மில்லியன் மட்டுமே மீளாய்வாண்டின் இறுதியில் திரும்பப் பெறப்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 36.25 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் மீளப் பெறப்பட வேண்டியதாக இருந்தது.				
(ஈ)	செயற்திட்டத்தின் பகுதியளவான கடன் உத்தரவாத கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் 2022 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் விளக்கங்களின்படி, உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் பிரதிநிதிகளுடன் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் நிர்வாக ஏற்பாடுகளில் உள்ள சிக்கல்கள் காரணமாக அந்தந்த வங்கிகளால் நடவடிக்கை தொடங்கப்படவில்லை.	2021 2022	எதிர்பார்த்த இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும்.	செயற்திட்டத்தின் பகுதியாக கடனுக்கான பிணையின் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட அ.டொலர் 7.12 மில்லியன் பெறுமதி இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் முழுமையாக கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்யப்படுகின்றது. நிர்வாகப் பிரச்சனைகளின் காரணமாக வணிக வங்கி இந்த முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கவில்லை. அதனால் ஒதுக்கப்பட்ட தொகையை திருத்தப்பட்டுள்ளதுடன் மொத்த நிதியேற்பாடுகளில் அமெரிக்க டொலர் 1.00 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டு அமெரிக்க டொலர் 6.12 மில்லியன் சீராக்கல் படி முன்மொழிவுத் திட்டத்திற்கு	செயற்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு முடியாதிருந்ததாக அறிவித்து அந்த தொகையில் அமெரிக்க டொலர் 6.12 மில்லியன் சீராக்கல் மாணியத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

மாற்றப்பட்டுள்ளது.

(உ)	செயற்திட்டம் 2017 சனவரி 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதியப் பயன்பாட்டின் செயல் முன்னேற்றத்தைக் கவனத்திற்கொள்ளும் போது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் தொகுதியில் ஒதுக்கப்பட்டிருந்த அ.டொலர் 61.05 மில்லியனில் செயற் திட்டத்திற்காக அ.டொலர் 43.32 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனை சதவீதமாக எடுப்போமாயின் 70 சதவீதமாகும். அதனால் எஞ்சியுள்ள வருட காலத்தில் மிகுதி நிதியத்துடன் கவனதிற்கொள்ளும் போது நிதியத்தின் பயன்பாடு செயற்திறனற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.	2021 2022 2023	செயற்திட்டத்தில் இனங்காணப்பட்ட பணிகளை குறித்துரைத்த கால அட்டவணையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.	2023 யூலை மாதத்தின் போது செயற்திட்டம் மீள் கட்டமைக்கப் பட்டதுடன் மொத்த செயற்திட்ட பெறுமதி அ.டொலர் 48.620 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. புதிய செயற்திட்ட பெறுமதியின் பிரகாரம் நிதி செயல் முன்னேற்றத்தில் 80 சதவீத அளவு அடையப்பட்டுள்ளது.	2024 ஆகஸ்ட் மாதம் முடிவடையும் போது நிதியப் பயன்பாடு அமெரிக்க டொலர் 46.9 மில்லியன் ஆகும். 2024 திசெம்பர் 31 முடிவடையும் போது மொத்த கடன் தொகையும் பயன்படுத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

1.3 விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01

2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் உடன்படிக்கை இலக்கம் 5873–எல்கே இன் கீழ் ரூபா 9,175.88 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 191.75 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 01 கட்டத்தின் போது நீடிக்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்ர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயமும், 2022 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	1,317	2,164
அரசாங்கத்தின் நிதியம்		
வெளிநாட்டு நிதியம்		
மொத்த சொத்துக்கள்	6,839	10,228
மொத்த பொறுப்புக்கள்	712	728
மொத்த நிதியம்		
வெளிநாட்டு கடன் மூலம்	5,459	6,810
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	68	76

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 02 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	2023 யூன் 30 அளவில் 21 கம்பனிகள் முன்னோடி செயற்திட்டத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 18 கம்பனிகளில் வணிகச் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 4 கம்பனிகளுக்கு அலுவலக கட்டிங்கள் காணப்படவில்லை. அடுத்த ஒன்றரை வருடத்தில் அந்த நோக்கங்களை அடைந்துகொள்ள முடியுமா என்பது கணக்காய்வின் போது பிரச்சனையாக உள்ளது.	2022	செயற்திட்டத்தின் செயற்பாட்டு காலப்பகுதியினுள் தொடர்புடைய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரையுடன் இணங்குகின்றோம். சில கம்பனிகள் இதுவரையில் அவர்களின் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் ஏனைய கம்பனிகள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது.	2024 ஆகஸ்ட் வரையில் ஒரு கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	கம்பொல குருந்துவத்த பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உலர் மிளகாய் பயிர்செய்கின்ற 300 பயனாளிகள் கொண்ட குழுவிற்காக நடுகை பொருட்கள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு மத்திய மாகாண செயற்திட்ட அலுவலகம் ரூபா 168.2 மில்லியன் தொகை செலவிட்டுள்ளது. இச்செயற்திட்டத்தில்	2022	நிதியை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்த வேண்டும்.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரையுடன் இணங்குகின்றோம்.	விவசாயிகள் பயிற்சியில் இருந்து விலக்கப்பட்டதுள்ளதுடன் செயற் திட்டத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருட்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

	பங்கேற்கக்கூடிய விவசாயிகளின் எண்ணிக்கை 177 ஆக இருந்ததால், 123 பேருக்கு கொள்வனவு செய்த கருவிகள் விளைவற்ற செலவினமாகியிருந்தது.				
(இ)	மிளகாய் அதிகம் பயிரிடப்படும் வடமத்திய மாகாணம், கண்டி போன்ற மலைப்பாங்கான பகுதிகளில் சமவெளி நிலத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால், ஹெல்மலு முறையால் மிளகாய் மழைநீர் மற்றும் வெள்ளத்தால் அழிந்து பல இடங்களில் காணியின் அரை ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. மேலும், குழாய்களின் பயன்பாடு மற்றும் சொட்டுநீர் முறைமை முடக்கப்பட்டது. குருந்துவத்தை பிரதேசத்தில் மிளகாய் உலர்த்தும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும், மிளகாய் சுமந்து செல்லும் விவசாயிகள் பண்ணையில் இருந்து 13-40 கிலோமீற்றர் தூரம் பயணித்து உலர்த்தும் இயந்திரத்தை சென்றடைய வேண்டியிருந்தமையினால் உலர்த்தும் இயந்திரத்தின் பாவனையும்	2022	எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டும்.	இந்தப் பிரதேசம் மிளகாய் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமானதாகும். இந்த பயிர்ச் செய்கை தற்போது இரு தடவை விளைச்சல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. மிளகாய் பயிர் செய்கின்ற ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட இந்த பிரதேசம் மிளகாய்ப் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமானதாகும்.	சகல பொறிமுறைகளும் இது வரை பயன்படுத்தப்படாது இருந்ததுடன் நீர் துளி முறைமை செயலிழந்து காணப்பட்டது.

	தோல்வியடைந்திருந்தது.				
(ஈ)	விவசாயத்துறையை நவீனமயமாக்கல் செயற்திட்டம் 2017 சனவரி 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் கண்காணிப்பு தகவல் முறைமையை (MIS) உருவாக்குவதற்காக 2018 நவம்பர் 15 வரை சுமார் 22 மாதங்கள் எடுக்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 15 இல், ரூபா 8 மில்லியன் பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டத்திற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான கண்காணிப்பு தகவல் முறைமை (MIS) வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. இந்த தகவல் முறைமை 2022 திசெம்பர் வரை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததுடன் செலவிட்ட ரூபா 5 மில்லியன் தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது.	2022	உரிய காலப்பகுதியினுள் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்டம் பணியாற்ற வேண்டும்.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரையுடன் இணங்குகின்றோம்.	2024 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையில் இலக்கிடப்பட்ட நோக்கங்கள் அமுல்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.
(உ)	தகவல்களின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் விவசாயிகளின் பயிற்சி	2021 2022	செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு அமுல்படுத்தப்ப	விவசாயிகளின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக	குறித்துரைத்த செயற்திட்டங்களுக்காக கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட

	மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஐ.அ.டொலர் 6.2 மில்லியன் அல்லது ரூபா 904.89 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 132 மில்லியன் 2022 செப்தெம்பர் மாதத்திற்குள் செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் நோக்கம் விவசாயிகள் தொடர்பான உற்பத்திச் சங்கங்களை உருவாக்குவதாகும். பயிற்சியின் முடிவில், கொத்தணி செயற்திட்டங்களில் விவசாயிகளுடன் தொடர்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இருந்து செயற்திட்ட உத்தியோகத்தர்கள் விலகியிருந்தனர். இதனால், இச் செயற்திட்டத்தின் முன்னோடி குழுக்களில் இருந்து விவசாயிகள் விலகியிருந்ததுடன் விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 132 மில்லியன் விளைவற்ற செலவினமாகியிருந்தது.		ட வேண்டும்.	மேற்கொள்ளப்பட்டது. ISP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சில தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் குறித்துரைத்த செயற்திட்டத்திற்காக பொது பட்டியலில் இடப்படாத 21 கம்பனிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.	போதும் விவசாயிகளின் பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்பார்த்த இலக்கினை அடைந்திருக்க வில்லை.
(ஊ)	நாவலப்பிட்டி மிளகாய் பயிறர்ச்செய்கை செயற்திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு	2022	செயற்திட்டப் பணிகளை முறையாக திட்டமிட்டு செயற்படுத்த	முகாமைத்துவத்தால் கருத்துரை தெரிவிக்கப்பட வில்லை.	ரூபா 32.224 மில்லியன் பெறுமதியான பொலித்தீன் மேவுகை

முன்னர் 300 விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2022 செப்தெம்பர் இறுதியளவில், மூன்று விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாய நிலையங்களில் உபகரணங்களைப் பெற்றிருக்காத 86 பயனாளி விவசாயிகள் காணப்பட்டனர். மாத்தளையில் உள்ள பிரதி செயற்திட்ட அலுவலக வளாகத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விவசாயிகளை தெரிவு செய்யாமல் பொலித்தீன் கவர் ரோலை கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 32.224 மில்லியன் பெறுமதியான 380 பொலித்தீன் உறைகள் விளைவற்றிருந்தன.

வேண்டும்.

உருளைகள் 380 மாத்தளை மாவட்டத்தின் பல்லேஹெர பிரதேசத்தில் களஞ்சியத்தில் 2024 ஆகஸ்ட் மாதம் வரை விளைவற்றுக் காணப்பட்டது.

1.4 காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்

2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்திற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் உடன்படிக்கை இலக்கம் 6346–LK இன் கீழ் ரூபா 22,804.65 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 4,024.35 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 2024 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயமும், 2022 மற்றும் 2023 என்ற 02 ஆண்டுகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	1,382	3,838	7,900
அரசாங்கத்தின் நிதியம்	60	100	420
வெளிநாட்டு நிதியம்	1,322	3,738	7,480
மொத்த சொத்துக்கள்	3,733	7,426	20,020
மொத்த பொறுப்புக்கள்	46	163	8
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	3,391	6,210	17,451
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	248	419	1,515

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	2020 ஒக்தோபர் 28 இல் முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் மொனராகலை மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்க	2022	செயற்திட்டத்தின் பணிகள் சரியாக திட்டமிடப்பட்டு, அவை அந்து கொள்ளப்படக் கூடிய	முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களை நவீன மயப்படுத்துதல் பல்வேறு	2024 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையில் கமநல சேவை நிலையங்களை நவீன மயப்படுத்தும்

	ாக முற்பணத்தை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. எனினும், கமநல சேவை நிலையங்களின் நவீனமயமாக்கல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை		வகையில் முகாமை செய்யப்பட வேண்டும்.	காரணங்களால் தாமதம் அடைந்துள்ளது. மொனராகல மாவட்டத்தில் புத்தள, வெல்லவாய மற்றும் தெலுள்ள கமநல சேவை நிலையங்கள் 03 இற்காக தொகுதி ஒன்றாக ஒப்பந்தம் கையளிக்கப்பட் டுள்ளது. தெலுள்ள கமநல சேவை நிலையத்தில் உத்தேசிக்கப்பட் ட நிர்மாணிப்பதற் கு நுழைவு வீதி ஒன்று காணப்படாமை மற்றும் நிர்மாணிக்கும் நிலத்தில் மழை நீரினால் தாழ்கின்றமையி னால் மேற்கொள்ளப்ப டவில்லை.	நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக் கவில்லை.
(ஆ)	செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்காக 7020 சதுர அடியிலான ஒரு கட்டிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 மே 15 வரையில் அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையை மீறியமை மற்றும் சந்தை பெறுமதியை மீறியமை என்பவற்றால் செயற்திட்டத்தால் ரூபா	2022	சொத்துக்களைப் பெற்றுக்கொள் ளுதல் மற்றும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல் என்பன மிகவும் செயற்திறனாக வும், சரியாகவும் மற்றும் குறைந்தபட்ச போக்குவரத்து கிரயத்திலும் மேற்கொள்ளப்ப	10 வாகனங்கள் அளவில் நிறுத்தி வைப்பதற்கான வசதியுடன் இடவசதி ஒன்றை வைத்தல் மற்றும் சதுர அடி அளவினைக் கவனத்தில் கொண்டு உரிய கொடுப்பனவுக ள்	இந்த கட்டிடம் இன்னும் பயன்படுத்த படுவதுடன் அலுவலகத் தேவைகள் ஏனைய நிலையங்களுக் கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில் லை.

	960,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 32 ஊழியர்களிற்காக மாத்திரமே இக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டதால் ஒரு ஊழியருக்கு சுமார் 219 சதுர அடிகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே பொறளை - பத்தரமுல்ல பிரதான வீதியில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் இக்கட்டிடம் அமைந்துள்ளதாலும் போக்குவரத்திற்கு அதிக நேரமும் மேலதிக கிரயமும் செலவிடப்பட வேண்டியிருந்தது.		ட வேண்டும்.	மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூபா 660,000 என்ற கட்டிடத்தின் சதுர அடிக்குரிய பெறுமதி மாத்திரம் ஆகும். மேற்கூறப்பட்ட கூறுவிலைகள் மற்றும் வசதிகளுடன் அந்த கட்டிடம் பொரளை மற்றும் பத்தரமுல்லைக்கு அருகில் கண்டறிய முடியாதிருந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.	
(இ)	அனுராதபுரம் ரனோராவ, மஹாநிகவெ துரித விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஒரு விவசாயிக்கு ¼ ஏக்கர் காணியில் மிளகாய் பயிரிடுவதற்கு 19 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் செயற்திட்டத்திற்காக ரூபா 2.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இச்செயற்திட்டத்தை பௌதீக ரீதியாக பரீட்சித்த போது ஒரு விவசாயி மாத்திரமே மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டிருந்ததுடன் 18 விவசாயிகள் மிளகாய்ச் செய்கையில் இருந்து விலகியிருந்தனர். ஆதன் பிரகாரம்	2022	செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சரியான திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். பயனாளிகளுக்கு சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு முறையாக கண்காணிக்கப்பட வேண்டும்.	அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். முதன்மையாக 19 விவசாயிகளுக்கு மிளகாய் பயிர்ச் செய்கை தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர்கள் மிளகாய்ப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளை மிளகாய் பயிர்ச் செய்கைக்கு பாதிப்பு ஏற்படுகின்றமையினால்	2024 செப்தெம்பர் வரையில் விவசாயிகள் மிளகாய் பயிர் செய்கைகளைக் கைவிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

	ஏற்பட்டிருந்த செலவினம் பயனற்றதாகியிருந்தது.			பயிர்கள் அழிவடைந்திருந்தது. அதற்கு மேலதிகமாக பசளைப் பற்றாக்குறையினால் விவசாயிகளின் மிளகாய் பயிர்ச் செய்கை கைவிடப்பட்டு ஏனைய பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.	
(ஈ)	குருநாகல் மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக 15,762 தொகுதி மஞ்சள், இஞ்சி மற்றும் பழ நாற்றுக்களை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான பெறுகையை வழங்குவது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகள் இல்லாமல் ரூபா 12.9 மில்லியன் தொகையான குறைந்த விலைமனுவை நிராகரித்து ரூபா 20.5 மில்லியனிற்கு இரண்டு விலைமனுதாரர்களிற்கு வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 7.6 மில்லியன் நட்டம் ஏற்பட்டது. மேலும், பெறுகைக் குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் பெறுகையை வழங்குவதில் கையெழுத்திடுவதற்கு மறுத்திருந்தார். பெறுகைத் தீர்மானத்தில் கையொப்பமிடாத உறுப்பினரின் கையொப்பம் போலியானது என்றும், அமைச்சின் செயலாளர்	2022	பெறுகை வழிகாட்டல்களில் உள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த செயற்திட்டம் செயற்பட வேண்டியதுடன் அரசாங்கத்தின் வினைத்திறனை அதிகப்படுத்தி பொறுப்பான தரப்பினரிடமிருந்து சேததங்களை அறவிடும் விதத்தில் செய்யப்பட வேண்டும்.	பெறுகைக் குழு அங்கத்தவர் மூவரில் ஒருவர் இணங்காதிருப்பாராயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில், பெறுகைகளை முன்கொண்டு செல்ல முடியும். அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அந்த உத்தியோகத்தர் தனது பொறுப்பிலிருந்து விலகியிருந்தார். இது தொடர்பாக விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் விநியோகிக்கப்பட்டுள்ள அறிக்கையின் மூலம் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும	2024 செப்தெம்பர் வரையில் அந்த நட்டம் அறவிடப்படாதிருந்ததுடன் விவசாயிகள் அந்த பயிர் செய்கைகளைக் கைவிட்டிருந்தனர்.

	இந்த விடயம் தொடர்பாக எந்த விசாரணையையும் நடாத்தியிருக்கவில்லை என்றும் உறுப்பினர் 2021 நவம்பர் 21 இல் அமைச்சு செயலாளருக்கு எழுத்துமூலம் முறைப்பாடு செய்தார். பெறுகைத் தீர்மானம் போலியானது என செயலாளரிடம் தெரிவித்து இருவர் கையெழுத்துக்களை மாத்திரமே இட்டு பெறுகைத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது. நிதிப்பிரமாணம் 135(2) இற்கு முரணாக குருநாகல்லில் செயற்திட்டப் பணிப்பாளரினால் பெறுகைத் தீர்மானத்தில் ஒரு கையொப்பம் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.				ாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த பரிந்துரையின் அடிப்படையில் ஆரம்ப விசாரணைக் குழு நியமிக்கப்படும்.
(உ)	செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் வட மத்திய மாகாண விவசாய அமைச்சின் செலவினத் தலைப்பு 620 இன் மூலம் ரூபா 6.5 மில்லியன் பெறுமதியான அம்பஸ்வெவ தொட்டி நிர்மாணிப்பதற்காக 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி தனியார் கம்பனியொன்று டன் உடன்படிக்கை செய்வதற்கு முன் பெறுகை நிறுவனத்தினால் தொட்டி நிர்மாணிப்பதற்காக	2023	நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன் சரியான திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். செயற்திட்டத்தின் நிதியத்தை சிக்கனமாக பயன்படுத்துதல் வேண்டும்.	அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	2024 ஆகஸ்ட் வரையில் முற்பண பிணைமுறி கையேற்கப்பட்டிருக்க வில்லை.

	பொருத்தமான காணியொன்றை தெரிவு செய்து கைப்பெற்றப்பட்டிருக்கவில்லை. முற்பணக் காப்புதியின் அடிப்படையில் ஒப்பந்தப் பெறுதியில் 20 சதவீதம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஒக்டோபர் 30 ஆந் திகதி முற்பணக் காப்புதியின் காலம் முடிவடைந்திருந்தது. முற்பணக் காப்புறுதியை கையேற்காமல் 2023 திசம்பர் 28 ஆம் திகதி நீடிக்கப்பட்டிருந்தது.				
(ஊ)	செயற்திட்டத்தின் மூலம் புத்தளம் மாவட்டத்தில் 05 எல்லங்கா முறைமையின் கீழ் 80 குளங்கள் ரூபா 613 மில்லியன் மதிப்பீடொன்றின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 30 குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 475 மில்லியன் மதிப்பீடொன்றின் கீழ் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் 50 குளங்களை அபிவிருத்தி செய்தல் கைவிடப்பட்டிருந்தது. புத்தளம் மாவட்டத்தில் கமநல மாவட்ட அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த வலஸ்வெவ, தேவாலகந்தவெவ, சாலியவெவ, பண்சலவெவ, ஜயந்திவெவ மற்றும்	2023	05 எல்லங்கா முறைமையின் கீழ் உள்ள குளங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.	புத்தளம் மாவட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு குறித்துரைத்த குளங்களின் எண்ணிக்கை 30 குளங்கள் வரை குறைப்பதற்கும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட டொலர் அளவினை குறைவடைந்ததன் காரணமாக மிகுதி குள அபிவிருத்திகள் 02 சந்தர்ப்பங்களின் போது கைவிட வேண்டியும் ஏற்பட்டிருந்தது. புத்தளம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி	குறைக்கப்பட்ட டொலர் அளவினை மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் கைவிடப்பட்ட குள மறுசீரமைப்புக் கடன்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

	தம்மென்னாவவெ என்ற குளங்களில் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.			செய்யப்பட்ட 06 குளங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.	
(எ)	நாட்டில் 10 மாவட்டங்களில் 47 கமநல சேவை நிலையங்களுக்காக வேளாண்மை பயிர்ச் செய்கைக்கு மிகவும் பொருத்தமான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் ரூபா 215.43 மில்லியன் செலவில் இயந்திர நாற்றுக்கள் நடும் 189 இயந்திரங்கள், களை பிடுங்கும் 189 இயந்திரங்கள் மற்றும் விதை நடும் 95 இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. அதில் குருநாகல் மாவட்டத்தில் 08 கமநல சேவை நிலயங்களுக்காக கமநல சேவை நிலையங்களின் தேவை மற்றும் கோரிக்கையின் பிரகாரம் இராஜாங்கனை இடது அணைக்கட்டு, தமுத்த, கல்கமுவ, மஹாநான்ஜேரிய, ரம்பே, எஹட்டுவெவ, அம்பஸ்பொல, மொறகொல்லாகம போன்ற பிரதேசங்களுக்காக ரூபா 21 மில்லியன் செலவில் 35	2023	பயிர்ச் செய்யப்படுகின்ற நெல் வகைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விவசாயிகளின் தேவைகள், விவசாயிகளுக்கு பொருத்தமான முறையில் இயந்திர உபகரணங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டும். பயனற்ற இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	47 கமநல சேவை நிலையங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த மரநடுகை இயந்திரங்களின் எண்ணிக்கை (இயந்திரங்கள் 189) கவனத்தில் கொள்ளும் இடத்து 2023/24 பெரும் போகம் வரை நெற்பயிர்ச் செய்கையின் செயல் முன்னேற்றத்தில் 258 விவசாயிகளினால் 115 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு 495.6 ஏக்கர் ஆக இருந்ததுடன் அது மொத்த நடுகை இயந்திரங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 61 சதவீத பயன்பாடு ஆகும். அவ்வாறே	2024 ஆகஸ்ட் இறுதி வரையில் இந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

நாற்றுக்கள் நடும் இயந்திரங்கள், 32 களை பிடுங்கும் இயந்திரங்கள் மற்றும் 15 விதை நடும் இயந்திரமாக மொத்தமாக 82 இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது.

அந்த இயந்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் 03 போக பயிர்ச் செய்கைகளின் பின்னர் 2023 திசம்பர் வரையில் மூன்று போகப் பயிர்ச் செய்கைகளுக்காகவும் 182.73 ஏக்கரில் 118 விவசாயிகள் மாத்திரம் பயிர்ச் செய்திருந்தனர். விவசாய இயந்திரங்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக பொருத்தமில்லாதமையின் காரணமாக அவ்வாறு வழங்கப்பட்ட இயந்திரங்களில் நாற்றுக்கள் நடும் 35 இயந்தரங்களில் 14 இயந்திரங்கள் ஒரு தடவையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வழங்கப்பட்டிருந்த களை பிடுங்கும் இயந்திரங்கள் 32 இல் 13 இயந்திரங்கள் ஒரு தடவையும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் வழங்கப்பட்டிருந்த 15 நாற்றுக்கள் நடும் இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் ஒரு தடவையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்று அல்லது இரண்டு தடவை மாத்திரம் வடமேல் மாகாணத்தில் நாளது வரையாக்கப்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட செயல் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ளும் போது 162 விவசாயிகளினால் நடுகை இயந்திரங்கள் 27 பயன்படுத்தப்பட்டு 283.8 ஏக்கர் பயிர் செய்யப்பட்டிருந்தது.

அதனால் கன்று நடுகை இயந்திரம் மற்றும் புல் வெட்டும் இயந்திரம் பயன்படுத்தும் முறையினை அதிகரித்துக் காணப்பட்டதுடன் அதன் மூலம் நெல் அறுவடையை அதிகரித்து இருந்ததுடன் ஊழியர் கிரயம் மற்றும் விவசாய இரசாயணங்கள் கிரயம் எஞ்சியிருந்தது.

	பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவிடப்பட்ட கிரயம் பயனற்றதாக இருந்தது.				
(ஏ)	விவசாயிகளுக்கு பயிர்ந்தளிப்பதற்காக கூட்டுப்பசளை உற்பத்தி உபகரணங்கள் பெறுகைகளுக்காக செயற்திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 50 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த கூட்டுப்பசளை உற்பத்தி உபரகணங்கள் பெறப்பட்ட பறங்கியாவாடி, கோன்வெவ மற்றும் கலன்விந்துனுவெவ பிரதேசங்களின் 2847 நலனாளிகளிடமிருந்து ஒருவரிடமிருந்து மாத்திரம் 2023 திசம்பர் வரையில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுப்பசளை உற்பத்தி உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 50 மில்லியன் செலவினம் பயனற்றதாக இருந்தது.	2023	கூட்டுப்பசளை உற்பத்தி உபரகணங்கள் பயிர்ச் செய்கை தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்ப டல் வேண்டும். விநியோகிக்கப்ப ட்ட பொருட்கள் மற்றும் நாற்றுக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்து தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப் படல் வேண்டும்.	இந்த விவசாயிகளை தெரிவு செய்யும் அடிப்படையில் 2021/22 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தி கம்பனிகளின் அங்கத்தவர்கள் மற்றும் அது வரையில் பிரதான ரீதியில் கூட்டுப் பசளை உற்பத்தி செய்யப்படுகின் றது. விவசாயிகள் அவ்வப்போது கூட்டுப்பசளை உற்பத்தி வரையறுக்கப்ப ட்டமையால் விவசாயிகளுக் கு உற்பத்தியினை அதிகரித்துக் கொள்வதற்காக பயிற்சி நிகழ்சித் திட்ட பாடநெறி ஒன்று அமுல்படுத்தப்ப ட்டது. அவ்வாறே உங்களின் ஆலோசனையி ன் பிரகாரம் பயன்படுத்தப்பட ாத சகல பொருட்களையு ம் மீண்டும் அறவிடுவதற்கு	2024 ஆகஸ்ட் வரையில் விவசாயிகள் கூட்டுப் பசளை உற்பத்தியில் இருந்து தூரம் ஆகி இருந்தனர்.

				ம், ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் தேவையாக உள்ள ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் அந்த விவசாயிகளுக்கு நலன்கள் வழங்காதிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் தகவல்கள் சேகரித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	
(ஐ)	செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் கணக்கீட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு செயற்திட்டத்தின் பணிகளுக்காக பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் மென்பொருள் முறைமை கொள்வனவு செய்தல்/ வடிவமைத்தல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்களின் பின்னர் 2022 செப்டெம்பர் 22 மற்றும் 2022 ஒக்டோபர் 17 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ரூபா 13.65 மில்லியன் மற்றும் கணக்கீட்டு	2023	நேர் ஒப்பந்த அடிப்படையில் பெறுகைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டிய மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் கணக்கீட்டு முறைமை ஸ்தாபித்தல் தாமதமடைந்த வைகளை விசாரணை செய்து அதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று	முகாமைத்துவ தகவல் முறைமை விடயப்பரப்பின் தன்மை மற்றும் நியாயங்களைக் கவனத்தில் கொண்டு நேர் ஒப்பந்த முறையின் கீழ் பெறுகைகள் STEP தொடர்பு இலக்கம் LK-MOA-315134-CS-CDS ஊடாக மேற்கொள்வதற்கு உலக வங்கியினால் ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் GIS அடிப்படையாகக்	2024 ஆகஸ்ட் வரையில் எந்த ஒரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முறைமைக்காக ரூபா 3.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் கணக்கீட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	கொண்டு முகாமைத்துவ தகவல் முறைமையினை மாற்றுதல் மற்றும் ஸ்தாபித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பராமரித்தலுக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.5 சிறியளவிலான விவசாய வணிகங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்கும் செயற்திட்டம்

2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சிறியளவிலான விவசாய வணிகங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக சர்வதேச நிதியக் கடன் உடன்படிக்கை இலக்கம் 2000003227 இன் கீழ் ரூபா 7,698 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2,268 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 2027 யூன் 10 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயமும், 2023 ஆண்டிற்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	8	140
அரசாங்கத்தின் நிதியம்		
வெளிநாட்டு நிதியம்		
மொத்த சொத்துக்கள்	371	680
மொத்த பொறுப்புக்கள்	0.01	0.087
மொத்த நிதியம்		
வெளிநாட்டு கடன் மூலம்	363	687
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	8	28

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	2019 நவம்பர் 04 இல் வெளியிடப்பட்ட செயற்திட்ட வடிவமைப்பு அறிக்கையின்	2022 2023	முன்னரே தீர்மானிக்கப்பட்ட கால எல்லைக்குள் பணிகள் பூர்த்தி	2023.12.31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்தில் பங்களிப்பவர்களுக்கான நுழைவு	தற்போது வரையில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் அதிகரித்துக்

	பிரகாரம், செயற்திட்டத்தை 2020 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது, எனினும் நிதி உடன்படிக்கை 2021 யூன் 10 இல் கைச்சாத்திடப்பட்டது, மேலும் இந்த செயற்திட்டத்தின் காலம் 06 ஆண்டுகள் ஆகும். இந்த செயற்திட்டம் 2022 ஆகஸ்ட் முதல் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல உள்ளவாறு செயற்திட்டம் 05 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அறிக்கையிட்டுள்ளது		செய்யப்பட வேண்டும்.	மற்றும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காணப்படுகின்றது. 2024 செப்தெம்பர் வரையில் 10 வரையில் பௌதீக முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது.
(ஆ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியக் கடன் தொகையின் மொத்த நிதிஏற்பாடான ஐ.அ.டொலர் 41.70 மில்லியன் தொகையில் ஐ.அ.டொலர் 367,590 நிதியை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. சதவீதமொன்றாக, இது 1 சதவீதமாக இருந்தது. எனவே, மீதமுள்ள மூன்றரை ஆண்டு காலத்தை மிகுதி நிதியுடன் கருத்தில் கொள்ளும்	2023	நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும்.	முகாமைத்துவத்தால் கருத்துரை தெரிவிக்கப்படவில்லை.	தற்போது இந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 செப்தெம்பர் இறுதி வரையில் அ.டொலர் 9.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

	போது நிதிகளின் பயன்பாடு செயற்திறனற்றிருந்தது.				
(இ)	செயற்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தின் இணங்கப்பட்ட மொத்த பங்களிப்பு ஐ.அ.டொலர் 12.70 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளவாறான அரசாங்க நிதியின் ஒட்டுமொத்த பயன்பாடு ஐ.அ.டொலர் 0.08 மில்லியன் மாத்திரமே ஆகும். மேலும் இது இணங்கப்பட்ட தொகையின் 0.62 சதவீதத்திற்கு சமமானதாகும். இந்த செயற்திட்டம் 2027 யூன் 10 இல் முடிவடைய உள்ளதுடன் அடுத்த மூன்றரை ஆண்டுகளில் இணங்கப்பட்ட அரசாங்க நிதியில் மீதமுள்ள 99 சதவீதத்தை பயன்படுத்துவது நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.	2023	செயற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட்டு நிதிகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.	முகாமைத்துவத்தின் அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விளக்கமளித்தல்கள் வழங்கப்படவில்லை.	தற்போது இந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 செப்தெம்பர் இறுதி வரையில் அ.டொலர் 9.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(ஈ)	பேரேட்டு குறியீடுகள் இல்லாமல் பொதுப் பேரேடுகளைப் பேணுகின்ற பகுதிகளில் பொதுப் பேரேட்டை பேணுவது தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனம், பதிவுகள் தொகுதி வாரியாக மேற்கொண்டு அப் பதிவுகளின் சரியான தன்மை மற்றும்	2022 2023	முறையான உள்ளக கட்டுப்பாடுகள் பேணப்பட வேண்டும். மேலும் சரியான கணக்கீட்டு மென்பொருள் முறைமை பயன்படுத்தப்பட வேண்டும்.	எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சனைகள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்காக புதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று மற்றும் சரி செய்யும் நடவடிக்கைகளை	தற்போது வரையில் பொது பேரேடு நாள்தோறும் நாளது வரையாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுமைத்தன்மை வேறு எந்த உத்தியோகத்தராலும் சரிபார்க்கப்படாததால் தவறான பேரேட்டு பதிவுகள், காசுப் புத்தகத்தை பேணாமை போன்றன தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலைமையில் காணப்பட்டது.

அமுல்படுத்துவதற்கு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.6 சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்

2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்காக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியக் கடன் உடன்படிக்கை இலக்கம் 2000002639 மற்றம் 2000001984 இன் கீழ் ரூபா 8,892 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 8,278 மில்லியன் ஆகும். செயற்திட்டம் ஒரு கட்டத்தின் போது நீடிக்கப்பட்டு 2025 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2022 மற்றும் 2023 என்ற 02 ஆண்டுகளுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	2,744	2,034	4,658
அரசாங்கத்தின் நிதியம்			
வெளிநாட்டு நிதியம்			
மொத்த சொத்துக்கள்	7,036	14,677	17,652
மொத்த பொறுப்புக்கள்	5	8	11
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	4,396	10,444	11,294
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	734	1,244	2,654

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	மஞ்சள் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் ரூபா 37 மில்லியனாக	2021 2022	வெளிநாட்டு சந்தையை அடையாளம் காணுதல் வேண்டும்.	இந்த செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்ட போதும்	தற்போது செயற்திட்டத்தினால் இந்த மஞ்சள் செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ள

இருந்ததுடன் ஏற்பட்ட உண்மையான கிரயம் ரூபா 15.6 மில்லியனாக இருந்தது. மஞ்சள் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உயர்மட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை அடைந துகொள்ளுதல், மஞ்சள் விதை உற்பத்தியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மஞ்சள் விதை உற்பத்தி அலகுகளை நிறுவுதல், மஞ்சள் பயிர்ச்செய்கை மூலம் வருடாந்த மொத்த வருமானத்தை அதிகரித்தல் மற்றும் விவசாய அமைப்பின் திறனை அதிகரிப்பதன் மூலம் சந்தை சார்ந்த சமூக நிறுவனமாக விவசாய அமைப்பை மாற்றுவதன் இலக்கு ஆகிய செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த மஞ்சள் பயிரிடும் செயற்திட்டம் தோல்வியடைந்துடன் ரூபா 15.6 மில்லியன் செலவினம் விளைவற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தால் செயற்திட்டத்திற்கு கணிசமான அளவில் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

(ஆ)	கெவன்டிஷ் வாழைத் தோட்டத் திட்டத்திற்காக 28 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூபா 15.6 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது டன் வாழைத் தோட்ட செய்கை தோல்வியுற்றமையி னால் கடனை செலுத்தத் தவறியமையின் காரணமாக அந்தக் கடன் புறக்கணிக்கப்பட்டிரு ந்தது.	2022 2023	செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள் வதற்கான தந்திரோபாயங்க ள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட ல் வேண்டும்	28 நலனாளிகளுக்கு ரூபா 15.6 மில்லியன் கடன் தொகை ஒன்று வங்கியின் மூலம் வழங்கப்பட்டுள்ள துடன் வாழைப் பயிர்ச் செய்கை தோல்வி அடைந்ததன் காரணமாக அந்த கடன் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டி ருந்ததது. அதற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்ததது. உள்நாட்டு வகையில் கெவன்டிஸ் வாழைகளை மேம்படுத்துவதற்கா க மற்றும் விளைச்சலை அதிகரிப்பதற்காக நுன் பசளை தேவையற்று இருக்குமாயின் இரசாயணப் பசளை தடை செய்வதற்கு அரசாங்கம் எடுத்த கொள்கை ரீதியான தீர்மானத்தால் செயற்திட்டம் தோல்வியடைந்து இருந்ததுடன் இந்த விவசாயிகளுக்கு விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது.	தற்போது செயற்திட்டத்தினா ல் கெவன்டிஷ் வாழைத் தோட்ட செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ள து.

(இ)	செயற்திட்ட தயாரிப்பாளராக செயற்படும் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட் வழங்கவுள்ள பங்களிப்பின் பெறுமதி ரூபா 34.6 மில்லியன் ஆகும். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கம்பனி வழங்கிய பங்களிப்பு அணண்ளவாக ரூபா 9 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தால் அறிக்கையிடப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் நிறுவனத்தில் காணப்படாததால் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டால் சுட்டிக்காட்டப்பட்ட செலவினங்கள் அடிப்படையற்ற தவறான பெறுமதிகளாக இருந்தது.	2021 2022 2023	சகல நடவடிக்கைகளும் செயற்திட்ட முகாமைத்துவத்தால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.	மேம்படுத்துவதற்கான ஏடுகளை வைத்தல், கணக்கீடு மற்றும் சகல துணை ஆவணங்களுடன் கோவைகளை பேணிச் செல்லுதல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.	குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.
(ஈ)	அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முருங்கை சாகுபடித் திட்டம் அதிகாரிகள் மற்றும் மேம்படுத்துனர்களின் செயற்திறமையின்மையால் தோல்வியடைந்துள்ளது. விவசாயிகளின் பங்களிப்புப்	2021 2022 2023	மேம்படுத்துனர்களுக்கு மானியம் வழங்குவதற்கு முன்னர், அவர்களின் வணிகம் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். செயற்திறனற்ற மேம்படுத்துனர்கள் மற்றும்	கொவிட் 19 காலம் வரை கவனத்தில் கொள்ளக் கூடிய ஆரம்ப செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டு 116 விவசாயிகளுடன் முருங்கை செயற்திட்டம் வெற்றிகரமாக	தற்போது செயற்திட்டத்தினால் முருங்கைப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

	பெறுமதியைத் தவிர, திட்டத்தின் பங்களிப்பின் அடிப்படையில் சொட்டு நீர் பாசனத்திற்கான தண்ணீர் மோட்டார்களைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 25.52 மில்லியன் செலவு செய்யப்பட்டது. முருங்கை திட்டம் தோல்வியடைந்தமையினால் திட்டத்துடன் தொடர்புடைய விவசாய குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டனர். முருங்கை திட்டத்தின் மேம்படுத்துனர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் 2021 திசெம்பர் 05 அன்று காலாவதியாகியுள்ளது மற்றும் இதனை மேம்படுத்துனர்களுக்கு அறிவிப்பதற்கு செயற்திட்டிட்ட பணிப்பாளர் 18 மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுத்திருந்தது.		சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கொடுப்பனவு மானியம் திரும்பப் பெறப்படல் வேண்டும்.	அமுல்படுத்தப்பட்டுள்ளது. சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, ஏற்றுமதி சந்தையில் ஏற்பட்ட சவால்களினால் மேம்பாட்டாளர்களுக்கு கொள்வனவு செய்தல் கைவிடப்பட்டுள்ளது. செயற்திட்டம் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு தாக்கமளித்த அடிப்படை பிரச்சனைகளாக ஏற்றுமதி நியமங்களுக்கு இணங்க உற்பத்திகள் 100 சதவீதம் சேதனப் பசளை தேவையாக இருந்தது. மண் கழிவுப் பொருட்கள் வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக தற்போது செயற்திட்டத்திற்கு இதில் அதிகளவான சேதன குறிகாட்டிகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.	
(உ)	அப்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழான விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் பகுதி 01 இலிருந்து ரூபா 9 மில்லியன்	2023	சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது, திட்டம்	பெரபோவா செயற்திட்டம் என்ற விவசாய அமைப்புக்களுடன் கைச்சாத்திடப்பட்ட 4P எண்ணக்கருவின் கீழ் ஏற்படுத்தவுள்ள	மானியம் பெற்றுக் கொள்ளும் போது, தற்போது வரையில் பிரதேச மட்டத்தில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது இருந்தமை

மானியங்கள் பெறப்பட்டன மற்றும் விவசாய அமைச்சின் கீழ் சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நெல் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா.கு 2.7 மில்லியன் மானியங்கள் பரபோவ சுற்றாடல் விவசாயிகள் அமைப்பின் மேம்படுத்துனரான பரபோவ ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமையாளரால் பெறப்பட்டது. விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் பகுதி 01 இலிருந்து பெறப்பட்ட ரூபா. 9 மில்லியன் மானியங்களுக்கான எதிர்பார்த்த வேலைகள் நிறைவேற்றப்படவில்லை.

அமுல்படுத்தப்படும் பகுதியிலுள்ள அரச அதிகாரிகள் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்

பெறுமதியான நிகழ்ச்சித் திட்டம் ஆகும். களஞ்சிய வசதிகள் பாரம்பரிய நெற்பயிர்ச் செய்கை முன்மொழிவுத் திட்டம் மற்றும் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளிடம் இருந்து சேகரிக்கப்படுகின்ற நெல்லை ஏற்றுமதி வரை களஞ்சியப்படுத்துவதற்காக தேவையான களஞ்சிய வசதிகள் ஸ்தாபிப்பதற்காக ரூபா 2.7 மில்லியன் மாணியம் பெறப்பட்டு உடன்படிக்கை அமுல்படுத்துவதற்கு சிறிய அளவிலான விவசாய தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. நூடில்ஸ் கைத்தொழில் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக ஏற்றுமதிக் கம்பனிக்கு ரூபா 9 மில்லியன் வழங்கப்பட்டிருந்தமை மேம்பாட்டாளர் (FO) இனால் அவதானிக்கப்பட்டது.

				எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	செயற்திட்டம் 2023 யூன் 30 அன்று நிறைவு செய்யப்படல் வேண்டும் என்ற போதிலும் 2025 திசெம்பர் 30 வரைக்கும் செயற்திட்டத்தினை தொடர்வதற்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும்போது, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்ட அமெரிக்க டொலர் 54.4 மில்லியனில் இருந்து அமெரிக்க டொலர் 28.16 மில்லியனை மட்டுமே இந்த செயற்திட்டம் பயன்படுத்தியுள்ளது. சதவீதமாக பார்க்கையில் இது 51.76 சதவீதமாக காணப்பட்டது. எனவே, மீதமுள்ள இரண்டு ஆண்டு காலப்பகுதியை மீதமாக உள்ள	2021 2022 2023	உரிய கால அட்டவணைக்குள் இலக்கானது நிறைவு செய்யப்படல் வேண்டும்.	2024 மே மாதம் இறுதி வரையில் விவசாய அபிவிருத்திகளுக்காக சர்வதேச நிதியங்களின் பயன்பாடு 63 சதவீதமாக இருந்ததுடன் சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டில் 80 சதவீத செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.	2024 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அமெரிக்க டொலர் 54.4 மில்லியன் ஆக இருந்த போதும் அடையப்பட்ட இலக்கு அமெரிக்க டொலர் 36.31 மில்லியன் (சதவீதமாக – 67) ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் செயற்திட்டத்தின் கால எல்லையில் பூர்த்தி செய்யும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

	நிதிகளுடன் கருத்தில் கொள்ளும்போது நிதியின் பயன்பாடு வினைத்திறனற்றதாக காணப்பட்டது.				
(எ)	சிறியளவிலான விவசாய வணிக பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பங்களிப்பு அமெரிக்க டாலர்கள் 19.30 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அரச நிதியின் ஒட்டுமொத்த பயன்பாடு அமெரிக்க டாலர்கள் 10.25 மில்லியன் மட்டுமே ஆகும். மேலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையில் 53 சதவீதத்திற்கு சமமாக காணப்பட்டது. இந்த செயற்திட்டம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி இரண்டு ஆண்டுகளில் இணங்கப்பட்ட அரசாங்க நிதியில் மீதமாக உள்ள 47 சதவீதத்தினை பயன்படுத்துதல் நிச்சயமற்றதாகும்.	2021 2022 2023	உரிய கால அட்டவணைக்குள் இலக்கானது நிறைவு செய்யப்படல் வேண்டும்.	2024 மே மாதம் இறுதி வரையில் விவசாய அபிவிருத்திகளுக்காக சர்வதேச நிதியங்களின் பயன்பாடு 72 சதவீதமாக இருந்ததுடன் சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டில் 87 சதவீத செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.	2024 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அமெரிக்க டொலர் 19.3 மில்லியன் ஆக இருந்த போதும் அடையப்பட்ட இலக்கு அமெரிக்க டொலர் 14.17 மில்லியன் (சதவீதமாக – 73) ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் செயற்திட்டத்தின் கால எல்லையில் பூர்த்தி செய்யும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

02. நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் பிரிவு

2.1. நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்

2015 திசெம்பர் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்திற்காக உலக வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கம் 5685 இன் கீழ் ரூபா 24,750 மில்லியன் கடன் தொகை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், இலங்கை அரசின் பங்களிப்பு ரூபா 2,840 மில்லியன் ஆகும். செயற்திட்டம் இரு தடவைகள் நீடிப்பு செய்யப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காணப்படுவதுடன், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு ஆகிய 3 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்	200	150	173.88
அரசின் நிதி (இ.மி.ச)	5,249	2,669.90	5,724.87
வெளிநாட்டு நிதி			
மொத்த சொத்துக்கள்	31,773	63,877	60,357
மொத்த பொறுப்புகள்	880	855	836
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	24,248	26,917.90	32,640.53
உள்நாட்டு நிதியங்கள் மூலம்	854	1004.20	1,178.08

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கான கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உருவாகிய முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புகள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	கணக்காய்விற்குட் படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	அறிக்கை திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
(அ)	முப்பத்தியெட்டு நகர மற்றும் கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டங்கள், மறுசீரமைப்பு, பொது சுகாதார, சுதேச வைத்திய சுகாதார மற்றும் பாடசாலை சுகாதார செயற்திட்ங்களுக்காக 01 முதல் 07 வரையான கால நீடிப்புகள் வழங்கிய பின்னர் முப்பத்தியெட்டு செயற் திட்டங்கள் தொடர்பில் 330 நாட்கள் முதல் 2,158 நாட்கள் வரையான வீச்சிலான கருத்திற் கொள்ளக் கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இந்த கால தாமதத்தால், பயனாளிகளுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்காமை, செயற்திட்டச் செலவு அதிகரித்தமை, செயற்திட்ட செயற்பாட்டு அலகுகளுக்கு மேலதிக செலவொன்று ஏற்பட்டமை போன்ற பாதகமான விளைவுகள் ஏற்பட்டன.	2023	செயற்திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.	ஏற்பட்ட தாமதங்கள் முழுமையாக தவிர்க்க முடியாதுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறைபாடுகளை தவிர்ப்பதற்காக ஒப்பந்த காரர்களிற்கு உதவுவதால் செயற்திட்டத்திற்கு பொருத்தமான வகையில் முறையாக கால நீடிப்புகளை வழங்க நேரிட்டது.	2024.12.31 ஆம் திகதி வரை பூர்த்தியாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(ஆ)	கொட்டியகும்புறு செயற்திட்டத்தில் குளம் மண் நிரப்புவதற்காக ஏற்பட்ட ரூபா 1.7 மில்லியன் கிரயம் சிக்கனமற்றதாக	2023	சுத்தமான நீர் வழங்குவதற்கு மண் நிரப்புதல் பயன்படுத்த வேண்டும்.	நிரப்புதல்களை செயற்படுத்துவதற்கு செயற்திட்டத்தினால் சமுதாய அடிப்படையிலா	நிரப்புதல்களை செயற்படுத்துவதற்கு செயற்திட்டத்தினால் CBO உடன்

	இருந்தது.			ன சங்கங்களுடன் கலந்துரையாடப் பட்டுள்ளதுடன் மண் நிரப்புதல் செயற்பாட்டிற்கு தேவைப்பட்ட ஏதாவது மேலதிக வேலைகளுக்காக சமுதாய பங்களிப்பு பகுதியாக பயன்படுத்த வேண்டியுள்ளது.	கலந்துரையாடப் பட்டுள்ளது.
(இ)	நாட்டின் பொருளாதார நிலைகளால் விலைகளின் விலை வேறுபாடுகளால் ஒரு ஒப்பந்தகாரர் கோகாலை மாவட்டத்தில் யட்டியந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெரணியகல பிரதேச செயலாளர் பிரிவு என்பவற்றில் இரண்டு கிராமிய புனரமைப்புச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டது.	2023	ஒப்பந்தங்கள் ஏற்பட்ட கிரயத்தை பயன்படுத்தவ தற்கு அமுலாக்கப்பட வேண்டும்.	கோவிட்- 19 நோய் தொற்று மற்றும் பொருளாதார சிக்கல் என்பன காரணமாக நிர்மாணப் பொருட்களின் விலை உயர்வாக உள்ளதால் வேலை நோக்கெல்லை குறைக்கப்பட்டது.	வேலை நோக்கெல்லை குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட புதிய ஒப்பந்தங்களின் குறைக்கப்பட்ட நோக்கெல்லை யின்படி மட்டுமே 2024 செப்டம்பர் 30 இல் பணிகள் முடிக்கப்பட்டிருந் தன.
(ஈ)	250 நீர் இணைப்புகள் வழங்குவதன் மூலம் ரூபா 26 மில்லியன் பெறுமதியில் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்ட. நெடிமெலியட்ட கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம் ஆகக்கூடிய நீர் அடர்த்தி 250 மிமீ பொருத்த வேண்டிய போதிலும் 1,805 மிமீ நீர் அடர்த்தியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விட மேலாக செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.	2023	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு முறைமை கையளிக்கின்ற நடைமுறை நிறைவேற்றப்பட வேண்டும்.	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் (சபை) குழாய் வழி முறைமை தற்போது செயற்பாட்டில் உள்ளது. ஆகவே, ச.அ.ச குழாய் முறைமை சபையின் குழாய் வழி முறைமைக்கு இணைக்குமாறு மற்றும் ச.அ.ச	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு முறைமை கையளிக்கின்ற நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு ள்ளது.

				ஐ கையகப்படுத்த வேண்டும் என சமூகத்தினர் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.	
(உ)	அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 599 மில்லியன் தொகையான கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பிரதான கொள்வனவு உப கூறுகளாக பிரிக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் சில கூறுகள் செயற்திட்டத்தின் முக்கிய வழியை கருத்திற் கொள்ளாமல் ஏனைய வேண்டப்பட்ட கூறுகளின் பூர்த்தியாக்கலிற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது துடன் சில சொத்துக்கள் பயன்படுத்த முன்னர் சேதமாக்கப்பட்டிருந்தது.	2023	செயற்திட்ட நடவடிக்கைகளின் உப பிரிவுகளிற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்காமை என்பதை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வு செய்ய வேண்டும்.	கணிசமான அளவிலான ஒரு குறிப்பிட்ட பிரிவின் திட்டங்கள் இறுதி செய்யப்பட்ட பிறகு, அந்தந்த தொகுப்புக்கான பெறுகை செயல்முறை தொடங்கியது.	எந்த திருத்தமும் செய்யப்பட வில்லை மற்றும் எதிர்கால பெறுகைகளில் இது கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 பூத்தியாக்கப்பட்டு அந்த திகதியிலிருந்து கடன் திருப்பிச் செலுத்தல்கள் தொடங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பட்டியலிடப்பட்டவாறு செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருந்ததுடன் 2023 திசெம்பர் 31	2023	செயற்திட்ட நடவடிக்கைகள் நலனாளிகளின் எதிர்பார்ப்பு களை பூர்த்தி செய்வதற்கு நிறைவேற்றப் பட வேண்டும்.	மூல செயற்திட்ட முடிவுறுத்தல் கட்டத்தில் கோவிட்-19 நோய் தொற்று, பொருளாதார சிக்கல் இறக்குமதித் தடை என்பன காரணமாக செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வில்லை மற்றும் 2025.05.30 வரை அதாவது மேலதிக நிதியுதவியின் கீழ் 05 ஆண்டுகள் 06 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

	வரை செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 இலிருந்து பொது திறைசேரியால் ஐ.அ.டொலர் 18 மில்லியனிற்கு சமமான ரூபா 5,080 மில்லியன் கடன் திருப்பிச் செலுத்தல்கள் 2020 முதல் திறைசேரியினால் செய்யப்பட்டிருந்தது.				
(எ)	ரூபா 551 மில்லியன் தொகையான சமுதாய பங்களிப்புகள் பெறப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணங்களின் 38 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு புதிய கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் கிராமிய நீர்வழங்கல் புனரமைப்புச் செயற்திட்டங்கள் தொடர்பில் பதியப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனைக் காலத்தில் மலையாளபுரத்தின் குழாயிடல் வேலைகளிற்காக சமுதாய பங்களிப்புகள் ரூபா 52 மில்லியன் பெறப்பட்டிருக்கவில்லை.	2023	விசேட காரணங்கள் இல்லாதிருப்பின் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணங்களின் நிபந்தனைகளிற்கு இணங்கியொழுக வேண்டும்.	வட மாகாணத்தில் மக்கள் குடியேற்ற பிரச்சனைகளை கருத்திற்கொள்கையில் சமுதாயப் பங்களிப்பு என்பன கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கலைபட்டிருந்தது.	இப்பங்களிப்புகள் பெறப்பட்டிருக்கவில்லை.
(ஏ)	ஒப்பந்த ஆவணங்களின் 43 ஆம் நிபந்தனைக்கு முரணாக செயற்திட்டமானது கிளிநொச்சி மாவட்ட செயற்திட்டங்களிற்காக	2023	ஒப்பந்தகாரர்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்த நிபந்தனைகள் பின்பற்றப்பட	ஒப்பந்த நிபந்தனையின் 8.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம், வு ஊழியரால் உப ஒப்பந்தகாரர்க	திருத்தப்படவில்லை.

	நேரடியாக பதினான்கு உப ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 19 மில்லியன் செலுத்தியிருந்தது.		வேண்டும்.	ளிற்கு நேரடியாக செய்யப்படுகின்ற சாத்தியம் தடுக்கப்பட வில்லை.	
(ஐ)	கிளிநொச்சி மாவட்டத்தில் ரூபா 84 மில்லியன் பெறுமதியில் சுத்திகரிப்பு பொறி (Septage) பொருத்தலின் ஒப்பந்தம் மற்றும் பரந்தன் இந்து மகாவித்தியாலத்தில் ரூபா 2.3 மில்லியன் பெறுமதியில் பாடசாலை சுகாதார ஒப்பந்தம் என்பவற்றின் பூர்த்தியாக்கலின் தாமதங்களிற்காக ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்டத்தால் தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருக்கவில்லை.	2023	ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்த நிபந்தனைகளை மீறுபவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	பரந்தன் இந்து மகா வித்தியாலத்தில் நீர்தேக்க (Septic) தொட்டி நிர்மாணித்தில் தாமதத்தால் உயர்ந்த நீர்க் கீழ் நீர் அட்டவணை பாதிக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டமானது ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்பு வழங்கியிருந்தது.	பதிலின் பிரகாரம் திருத்தப்படாதிருந்ததடன் செயற்திட்ட திட்டமிடலில் பிழைகள் உள்ளன.
(ஒ)	மொத்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 695 மில்லியனில் அல்லது 33.91 சதவீதத்தில் முழங்காவிலின் ரூபா 236 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் செயற்திட்ட வேலைகள் செயற்திட்டத்தால் விடுபட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளிற்காக ரூபா 29 மில்லியன் மற்றும் விசேட வீத பட்டியல் வேலைகளிற்காக ரூபா 238 மில்லியன் செயற்திட்ட கிரயத்திற்கு	2023	தேவையற்ற முரண்கள் மற்றும் கிரயங்களை தவிர்ப்பதற்கு பாதீடுகளையும் செய்வதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கை செய்யப்பட வேண்டும்.	முழங்காவில் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் குழப்பத் தன்மை மற்றும் வேலைத்தள நிலைகள் மற்றும் கருத்திற்கொள்ள வேண்டிய முரண்தொகையொன்றின் ஏனைய காரணங்கள் என்பன காரணமாக செயற்திட்டத்தின் திருப்திகரமான பூர்த்தியாக்கலிற்காக அவசிய	திருத்தப்பட வில்லை.

	மாற்றப்பட்டிருந்தது.			மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது.	
(ஓ)	செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட செயலாறறல் அறிக்கையின் பிரகாரம், இடைக்கால கொடுப்பனவை அனுமதிப்பதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரால் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழை சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் முரண் கட்டளைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் போன்ற காரணங்களால் ரூபா 2,340 மில்லியன் பெறுமதியான பதினைந்து பௌதீக ரீதியாக பூர்த்தியாக்கபபட்ட செயற் திட்டங்களின் நிதி முன்னேற்றம் 0 முதல் 66 சதவீமான வீச்சில் இருந்தது.	2023	தாமதக் கட்டணங்கள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களை தவிர்ப்பதற்கு தீர்ப்பனவு நடைமுறையை நிறைவேற்ற வேண்டும்.	ஒப்பந்தகாரரால் செயற்திட்டத்திற் குஇடைகால கொடுப்பனவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும்போ து கணக்கிட முடியாத காரணங்களால் செயற்திட்ட உத்தியோகத்தர் களால் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழை வழங்குவதிலும் தாமதங்கள் இருந்தது என நாங்கள் உடன்படுகின் றோம்.	இன்னும் செலத்தப்பட வில்லை.
(ஔ)	நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் வெளியிடப்பட்ட நீர் மற்றும் சுகாதார துறை கைநூலில் உள்ளடக்கப்பட்ட விரிவான உபாய திட்டம் மற்றும் வீதி வரைபடம் என்பவற்றின் பிரகாரம், நீர் வழங்கல் மறறும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட வளங்களின் பிரகாரம்	2023	செயற்திட்டத்தால் 2020 - 2030 வரையான தேசிய திட்டத்திலிருந்து வேண்டுகைகள் இனங்காணப்பட்டி ருந்தது. விருத்தி செய்யப்பட்ட தேசிய திட்டத்திற்கு எதிராக அந்த சுத்திகரிப்பு பொறிகள் எப்படி அபிவிருத்தி செய்யப்பட்ட தென்பதை புலனாய்வு	உள்ளூராட்சி அதிகாரசபைக ளால் செய்யப்பட்ட வேண்டுகையில் மற்றும் இந்த நகர பகுதிகளில் வெளியேற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான தேவைகளை மதிப்பிட்டதன் பின்னர் அந்த மூன்று சுத்திகரிப்பு பொறிகள் செயற்திட்டங்கள்	කිලිනොච්චි ප්‍රාදේශික පවිත්‍රාගාර සඳහා ප්‍රවේශ මාර්ගය සම්පාදනය කිරීමේ අදියරේ පවතී. கிளிநொச்சி சுத்திகரிப்பு பொறிகளுக்கான நுழைவு வீதி நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது.

	2020-2030 வரையான காலத்தின் போது மொனறாகலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிற்காக சுத்திகரிப்பு பொறி தேவை இருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அந்த மாவட்டங்களிலுள்ள சுத்திகரிப்பு பொறிக்காக ரூபா 345.53 மில்லியன் முதலீடு செய்திருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்த்தியாக்கப்பட்ட சுத்திகரிப்பு பொறி சுத்திகரிப்பு பொறியின் நுழைவு வீதி பூர்த்தியாக்காமையால் 2023 பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.		செய்ய வேண்டியிருந்தது.	ஆரம்பிக்கப்பட்ட ன.
(க)	செயற்திட்ட காலத்தின் போது 07 மாவட்டங்களில் நிர்மாணிக்க வேண்டுமென பட்டியலிடப்பட்ட 24,000 மலசல கூடங்களில் 22,000 இற்கு திருத்தப்பட்டிருந்தது. 21,944 மலசல கூடங்கள் அல்லது 91 சதவீதம் மாத்திரமே பூர்த்த்தியாக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்ட 3,000 வீட்டு சுகாதார அலகில் 2,390 அலகுகள் அல்லது 79 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன்	2023	தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் உண்மையான தேவையை மதிப்பிட்ட பின்னர் அடையவேண்டடிய இலக்கினை உருவாக்க வேண்டும்.	குடியிருப்புகள் கைவிடப்பட்டமை மற்றம் கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தாழ்வுகள் காரணமாக திட்டமிடப்பட்ட 607 ஒற்றைக் கழிவறைப் பயனாளிகள் மட்டுமே திட்டமிட்ட இலக்கை எட்டவில்லை.	எதிர்காலத்தில் பின்பற்றப்படு மென தெரிவிக்கப் பட்டுள்ளது.

	செயற்திட்ட காலப் பகுதியின் இறுதியின் திட்டமிடப்பட்ட 14 நிறுவன சுகாதார அலகுகளில் 07 நிறுவன சுகாதார அலகுகளில் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.				
(கா)	செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ரூபா 250,000 இல் 84 விசேட தேவை நலனாளிகள் சுகாதார கூறுகள் நிர்மாணிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலப் பகுதி இறுதியில் கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 48 கூறுகள் அல்லது 57 சதவீதம் மாத்திரமே நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	2023	தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு நிழ்ச்சித்திட்டம் திட்டமிடப்படுகின்ற போது தேவைப்பட்ட மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தது.	செயற்திட்ட அமுலாக்கல் கட்டத்தின் போது செயற்திட்டமானது சுகதார வசதிகளை வழங்குவதற்கு அதே நலனாளிகளை சமூக சேவைகள் அமைச்சு இனங்கண்டிருந்தது என செயற்திட்டம் கருதியது. ஆகவே, செயற்திட்டமானது விசேட தேவை சுகாதார வசதிகளிற்காக இனங்கண்ட நபர்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.	எதிர்காலத்தில் பின்பற்றப்படுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.
(கி)	செயற்திட்டமானது ஒப்பந்தகாரர்களிற்கு பல கால நீடிப்புகளை வழங்கிய பின்னரும் செயற்திட்ட காலப்பகுதியிலிருந்து 03 மாதங்கள் கடந்த பின்னரும் நகர வகை	2023	தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் அடையக்கூடிய இலக்குகள் தாபிக்கப்பட	2024 மே 31 இல் உள்ளவாறு வீட்டு இணைப்புகளின் முன்னேற்றம் 15,358 அல்லது 71 சதவீதமாக இருந்தது.	2024 யூலையில் அடையப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளளது.

	2, கிரமங்கள் மற்றும் பெருந்தோட்ட வகுதிகளில் திட்டமிடப்பட்ட 61,925 அல்லது 80 சதவீத நீர் இணைப்புகளில் 49,423 மாத்திரமே அடையப்பட்டிருந்ததுட ன் நகர வகை 01, கிரமங்கள் மற்றும் பெருந்தோட்ட வகுதிகளில் திட்டமிடப்பட்ட 21,702 நீர் இணைப்புகளில் 15,051 மாத்திரமே அல்லது 69 சதவீத அடையப்பட்டிருந்தது.		வேண்டும்.	செயற்திட்ட உத்தியோகத்தர் கள் கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் திட்டத்தின் வீட்டு இணைப்புகளின் இலக்கினை அடைவதற்கு CBOs/EWHCSs உடன் சேர்ந்து வேலை செய்கின்றது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நடமாடும் சேவைகளை நடாத்தியிருந்தது .	
(கு)	உடுக்கொட மற்றும் கொட்டியாக்கும்புறவில் 195 சமுதாய அடிப்படை நிறுவனங்களின் நீர் மாதிரிகளை பரிசோதிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 8 மில்லியன் பெறுமதியான இரண்டு ஆய்வுகூடங்கள் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படுத்தப்பட்டிருக்க ாததுடன் இதன் விளைவால் சமுதாய அடிப்படை நிறுவனங்கள் காலத்திற்கு காலம் தரத்தை பரிசோதிக்காமல் நீரினை வழங்குகின்றது.	2023	2024 யூன் 30 வரை முழுமையாக கையளிக்கப் பட்டிருக்கவில்ல ல. அந்த பயன் படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்தவதற் கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	சகல ஆய்வுகூட உபகரணங்களு ம் சபைக்கு கையளிக்கப்பட்டி ருந்தது.	சகல ஆய்வுகூட உபகரணங்களு ம் வழங்கல் சபைக்கு கையளிக்கப்பட் டி ருந்தது. விளைவற்ற கட்டிடம் தொடர்பாக தீர்மானதொன்று எடுக்கப்பட வில்லை.

(கூ)	கணக்காய்வு பரிசோதனை காலத்தில் சுத்தீகரிக்கப்பட்ட நீர் மற்றும் சுத்திகரிக்கப்படாத நீர் மாதிரிகள் இரண்டினையும் பரிசோதித்ததின் விளைவால் கேகாலை மாவட்டத்தில் 13 கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 04 தவறாகவிருந்தது.	2023	காரணங்களை கண்டறிவதற்கும் சுத்தமான நீரை விநியோகிப்பதற்கும் அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.	நீர் மாதிரிப் பரிசோதனை அடிப்படையில் இலங்கையின் தர நியமத்திற்குள் குடி நீர் தரத்தினை முன்னேற்றுவதற்காக சரியான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்திட்ட உத்தியோகத்தர்களால் CBO இற்கு தொடர்ச்சியாக விழிப்புணர்வு செய்யப்படுகின்றது.	CBO தொடர்ச்சியாக விழிப்புணர்வு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
(கெ)	2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம், முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் 17 செயற்திட்ட ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் .	2023 2021	சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடுமையாக இணங்கியொழுக வேண்டும	செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்வதற்காக தேவையான பதவியணியினர் குறுகியகால சேவை ஒப்பந்தம் ஊடாக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை.
(கே)	மோசமான முன்னேற்றம் கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு ஏழு திட்டங்கள் வழங்கப்பட்டது மற்றும் ரூபா 52.57 மில்லியன் வேலை தொடக்க முற்பணத் தொகையொன்று . திறம்பட பயன்படுத்தப்படாமல் அவர்களிடம் வைக்கப்பட்டிருந்தது.	2022	புதிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன் தற்போதுள்ள ஒப்பந்ததாரர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்ய வேண்டும்.	இந்த நேரத்தில், ஒருபாண்டிவேவா II ஆம் கட்டம் மற்றும் III ஆம் கட்ட ஒப்பந்தங்களின் பிரதான குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் மின்னியல் பொறிமுறை பணிகள் நிறைவடைந்துள்ளன.	திருத்தப்படாததுடன் காலதாமதத்துடன் அன்றைய திகதியில் ஒப்பந்தங்களை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்படடிருந்தன.

				உள்ஹிட்டிய அணையில் இருந்து நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் செலுத்தப்பட்டு வருகின்றது. கழுவுதல் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் பணி நடந்து வருகிறது. வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட வேண்டும்.	
(கை)	கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ஆலோசனை சேவைகளிற்காக ரூபா 961.14 மில்லியனிற்கு சமமான தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடாத்தப்பட்ட மாதிரி பௌதீக கணக்காய்வின் பிரகாரம், ஒப்பந்தங்களின் நலிவான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை காரணமாக செயற்திட்டத்தை நிறைவு செய்தலானது , செயற்திட்டத்தின் கால நீடிப்புகள், முரண் கட்டளைகளை அனுமதித்தல், மேலதிக வேலைகள் அனுமதித்தல், உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணங்களின்	2022 2021	ஆலோசகர்களின் பலவீனங்களை போக்கவும், ஆலோசகர்களின் மோசமான செயல்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் ஆலோசகருடன் நிர்வாகம் வலுவான உடன்பாட்டை எட்ட வேண்டும்.	ISC ஆலோசகர்களைத் தேர்ந்தெடுக்க தரம் மற்றும் கிரயத்தினை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறைமையொன்று பயன்படுத்தப் பட்டது.	நிலைமை அவ்வாறே இருந்தது.

	மீள் வடிவமைப்புகள் போன்றவற்றால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.				
(கொ)	நுவரெலியா மாவட்ட அலுவலகத்தின் கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உள்ளடங்கலான 125 நிலையான சொத்து விடயங்கள் நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் முன்னனுமதி இல்லாமல் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.	2021	செயற்திட்டத்தின் கூறு 3 இலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட உடமையாளர்களிற்கு செயற்திட்டத்தின் சொத்துக்கள் விடுவிக்கப்படும் போது நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் முன்னனுமதி எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்டத்தின் கூறு 3 இலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் சபையின் பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மற்றும் சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் தேவையை இனங்கண்டு வழங்கப்பட்டுள்ளது.	அமைச்சின் கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சொத்துக்களை விடுவிக்கும் குழுவொன்றினூடாக மேற்கொள்ளப்பட்டது.

2.2. நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்- மேலதிக நிதியம்

2021 செப்டெம்பர் 04 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்திற்கான மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக சர்வதேச வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கம் 9255 LK இன் கீழ் ரூபா 12,000 மில்லியன் கடன் தொகை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், இலங்கை அரசின் பங்களிப்பு ரூபா 235 மில்லியன் மற்றும் சமூகத்தின் பங்களிப்பு ரூபா 588 மில்லியன் ஆகும். செயற்திட்டம் ஒரு தடவை நீடிப்பு செய்யப்பட்டு 2025 யூன் 30 ஆந் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காணப்படுவதுடன், 2022 ஆம் வருடத்திற்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் 2023 ஆம் வருடத்திற்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தன.

வருடம்	**2022**	**2023**
	ரூபா மில்லியன்	**ரூபா மில்லியன்**
ஆண்டின் மொத்த செலவினம்		
அரசின் நிதி (இ.மி.ச)	-	-
வெளிநாட்டு நிதி	380.10	5,449
மொத்த சொத்துக்கள்	2,196	7,218
மொத்த பொறுப்புகள்	65	591
மொத்த நிதி		
வெளிநாட்டு கடன் மூலம்	2,131	6,627
உள்நாட்டு நிதியங்கள்மூலம்	-	-

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கான கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உருவாகிய முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புகள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	கணக்காய்விற்குட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	அறிக்கை திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
(அ)	அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தில் சுத்திகரிப்பு பொறியின் (Septage) நிர்மாண வேலைகள் தொடர்பில் தேசிய கொள்வனவு முகவராண்மையிடமிருந்து கொள்வனவுக் குழு நியமிப்பதற்கான தேவைக்கு முன்னர் சமூக தாக்க மதிப்பீடு, சுற்றாடல் தாக்க மதிப்பீடு, போன்ற சாத்திய வள கற்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், சுத்திகரிப்பு பொறியின் நிர்மாண வேலைகள் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறாமை மற்றும் பொது மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், கைவிடப்பட்ட திகதி வரை செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 40.2 மில்லியன் தொகையை ஒப்பந்தகாரர் கோரியிருந்தார். ஆகவே, செயற் திட்டத்திற்காக ஏற்பட்ட கிரயம் சிக்கனமற்றதாக	2023	கொள்வனவு தொடங்கவதற்கு முன்னர் வழிகாட்டல் பிரகாரம், சகல தெளிவுபடுத்தல்களும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் சிக்கனமற்ற வழியில் செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தவதற்கு கவனயீனமாக வேலை செய்யும் உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	வரைவு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கையை முன்னேற்றுவதற்கான தெவையாக அதன் கருத்துரைகளை உலக வங்கி செய்திருந்தது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வேண்டப்பட்டவாறு, சகல ஆவணங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறித்த கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக அனுமதியை வழங்கியிருந்தது. பின்னர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை றம்பொக்குநகம வீடமைப்பு திட்டத்தின் கழிவகற்றல் பகுதிக்குள் 2 ஏக்கர் பரப்பளவுள்ள காணி	பரஸ்பர இணக்கப்பாடுடன் ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டது.

	இருந்தது.			ஒதுக்கியிருந்தது.	
(ஆ)	ஒப்பந்தகாரரினால் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் மற்றும் முரண்கட்டளை சமர்ப்பித்தல் மற்றும் அவற்றின் அனுமதியில் தாமதம் காரணமாக ரூபா 2,830 மில்லியன் பெறுமதியான 12 செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றம் பௌதீக முன்னேற்றத்தை தாமதமான விட குறைவாக இருந்தது.	2023	முற்பணக் கொடுப்பனவிற்கான அனுமதி பெறும் வரை செலவினமாக எடுக்க முடியாததுடன் சம்பந்தப்பட்ட முற்பணப்பகுதிய குறைக்கும். ஆகவே, சான்றுபடுத்திய வேலைகளிற்கான கொடுப்பனவு நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டும்.	அவதானிப்புடன் உடன்படுகின்றோம், எவ்வாறாயினும், 20 சதவீத முற்பண கொடுப்பனவு நிதி முன்னேற்றத்தில் உள்ளடக்கப்பட வில்லை. ஆகவே, செலுத்தப்பட்ட முற்பணத் தொகை நிதி முன்னேற்றத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டும்.	பதில் வழங்கப்பட வில்லை.
(இ)	இருபத்துமூன்று செயற்திட்டங்கள் தொடர்பில் செயற்திட்ட காலப்பகுதியின் முறையற்ற திட்டமில் காரணமாக 17 நாட்கள் முதல் 244 நாட்கள் வரையிலான கருத்திற் கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.	2023	செயற்திட்ட வேலைகள் சுற்றாடல் மற்றும் ஏனைய தாக்க மதிப்பீகளின் பின்னர் திட்டமிடப்பட வேண்டும். அசாதாரண செயற்திட்ட தாமதத்தை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் செயற்திட்ட வேலைகளை கண்காணிக்க வேண்டும்.	வேலைத் தள பகுதி பாரிய இடி முழக்க மழையால் பாதகமான காலநிலை மற்றும் குழாயிடல் வேலைகள் நெல் அறுவடை பூர்த்தியாக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டமை என்பன காரணமான தாமதம் நிலவியது. பொதுவாக, சில பகுதிகள் உதரிபாராமல் ஆண்டில் 2- 3 மாதங்கள் வரை நீரில் மூழ்கியிருக்கும்.	தாமதத்துடன் நடைபெற்று வருகின்றது.
(ஈ)	கோணாவில் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதி	2023	செயற்திட்ட காலத்தில் மூலப்பொருட்கள் கிடைத்திருக்குமாயின்	பாதகமான காலநிலை மற்றும் குழாயிடல் வேலைகள் நெல்	தாமதத்துடன் நடைபெற்று வருகின்றது.

	முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி வரையும் முறையே 47 சதவீதம் மற்றும் 25.94 சதவீதமாக இருந்தது. 2023 ஒக்தோபர் 05 செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வு திகதியில் 110 மிமீ PVC குழாய்கள் கிடைக்காமையால் 69 கிலோ மீற்றரில் 12.23 கிலோமீற்றர் மாத்திரமே பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறைபாடு ரூபா 164.4 மில்லியன் ஏற்படும் வரை திட்டமிட்டவாறு அடைய முடியாதிருந்தது.		முகாமைத்துவம் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அறுவடை பூர்த்தியாக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டமை என்பன காரணமான தாமதம் நிலவியது. භෞතික ප්‍රගතිය 70% කි.	
(உ)	மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தும் 2024 மே 31 வரை ரூபா 180 மில்லியன் மதிப்பிட்பட்ட கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட மாத்தறை மாவட்டத்தில் கோட்டாவிலவில் சுத்திகரிப்பு பொறிக்காக கொள்வனவு நடாத்தப்பட்டிருக்கவில் லை. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2022 செப்தெம்பர் 01 இல் திட்டத்திற்காக	2023	வேலைகளின் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு செயற்திட்டத்திற் காக நிதிகள் கிடைத்தமையை உறுதிப்படுத்த வேண்டும்.	மேலதிக நிதிகளின் வரையறை காரணமாக கொட்டாவில சுத்திகரிப்பு பொறி நிர்மாண வேலைகள் கொள்வனவு நடைமுறை தொடர முடியாதிருந்தது.	செயற்திட்டம் செயற்படுத்தப்ப டவில்லை.

	மாத்தறை நகர சபையுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட்டிருந்தது.				
(ஊ)	செயற்திட்டத்தின் சகல உத்தியோகத்தர்களிற்காகான நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்காக சம்பளங்கள் தற்போதைய நிதியளிப்பு உடன்படிக்கையிலிருந்து செலவழிக்கப்பட்ட போதிலும் 2022 ஒக்தோபர் மாதத்திற்கான சம்பளங்களிற்காக மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையிலிருந்து ரூபா 13.9 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மேலதிக நிதி பயன்பாட்டிற்கான மனித வள தேவைப்பாட்டை திட்டமிடப்பட்டு மேலதிக நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்திய உத்தியோகத்தர் கிரயங்களை இனங்காண்டும் இருக்கவில்லை.	2022	மேலதிக நிதியளிப்பின் கீழ் செயற்திட்டத்திற்காக ஆளணி தேவைகளை தாபிக்க வேண்டும்.	சம்பளமானது செயற்திட்ட முகாமைத்தவ கிரயமாக உள்ளதுடன் இது இரண்டு நிதிகளிலும் ‘‘செயற்திட்ட முகாமைத்துவ ஆதரவு’’ கூறு 4 இன் கீழ் தவறியிருநதது, நாங்கள் இரண்டு நிதிகளிற்காகவும் செயற்திட்ட உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமையால் 1 மாத சம்பளம் செலுத்துவதற்கு மேலதிக நிதியளிப்பை பயன்படுத்தியிருந்தோம்.	குறிப்பிட்ட திருத்தங்கள் செய்யப்படாததுடன் தற்போதைய கொடுப்பனவுகள் செயற்திட்டத்திற்காக தனித்தனியாக செய்யப்படுகின்றது.

2.3 களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம்

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை கடன் உடன்படிக்கை இலக்கம் எஸ்எல்-பி 117 இன் கீழ் ரூபா 45,056 மில்லியன் கடன் தொகை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், அதற்காக இலங்கை அரசின் பங்களிப்பு ரூபா 10,282 மில்லியன் ஆகும். 2025 ஏப்ரலில் செயற்திட்டம் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காணப்படுவதுடன், 2021 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயமும் 2022 ஆம் வருடத்திற்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தன.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	**ரூபா மில்லியன்**	**ரூபா மில்லியன்**
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்க நிதியம்	25	18	6.9
வெளிநாட்டு நிதியம்	365	184	-
மொத்த சொத்துக்கள்	514	972	967
மொத்த பொறுப்புக்கள்	40	294	282
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	452	635	635
உள்நாட்டு நிதியம் மூலம்	25	43	50

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கான கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உருவாகிய முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்புகள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	தற்போதைய நிலைமை
(அ)விரிவான வடிவமைப்பு, வரைபடங்கள் (drawings) தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்கள் 2019 யூன் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரை கேள்வி செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.	2023	செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	2022 ஏப்ரல் மாதம் முதல் பணவளிப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இது செயற்திட்டத்தின் முன்னேற்றத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	கடன் வழங்கலை தொடங்குவதற்ககான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ஆ)நிர்மாணப் பணிகள் 2020 யூன் மாதத்தில் தொடங்கப்பட்டு 2023 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், அந்த பொதிகள் அனைத்தும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிர்மாணத்திற்	2023	செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	2022 ஏப்ரல் மாதம் முதல் பணவளிப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இது செயற்திட்டத்தின் முன்னேற்றத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	கடன் வழங்கலை தொடங்குவதற்ககான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கு முந்தைய
காலத்தில்
உள்ளன.

2.4 நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முன்முயற்சி செயற்திட்டம்

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முன்முயற்சி செயற்திட்டத்திற்காக பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் கடன் உடன்படிக்கை இலக்கம் சீஎல்கே 1013 - 01 இன் கீழ் ரூபா 13,224 மில்லியன் கடன் தொகை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், அதற்காக இலங்கை அரசின் பங்களிப்பு ரூபா 4,524 மில்லியன் ஆகும். 2022 யூன் மாதம் செயற்திட்டம் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காணப்படுவதுடன், 2021,2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்க நிதியம்	29	44	17
வெளிநாட்டு நிதியம்	300	538	-
மொத்த சொத்துக்கள்	1,125	1,775	1,842
மொத்த பொறுப்புக்கள்	-	-	-
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	714	1220	1220
உள்நாட்டு நிதியம் மூலம்	152	196	213

அந்த கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கான கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உருவாகிய முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்புகள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	தற்போதைய நிலைமை
(அ) முகாமைத்துவ ஆதரவு ஆலோசனையின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் முறையே 61 மற்றும் 63 சதவீதமாக காணப்பட்டது.	2023	மீண்டும் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு RAMP குழு ஆலோசனை வழங்கியுள்ளது.	செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.
(ஆ)கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனை பெறுகை செயன்முறையை 2018 நவம்பர் மாதத்தில் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2022 நவம்பர் மாதத்தில் உபகரண ஒப்பந்தம் (பொதி 2) மாத்திரமே வழங்கப்பட்டது, ஏனைய ஒப்பந்தங்கள் 2023 திசெம்பர் 31 வரை வழங்கப்படாமல்	2023	மீண்டும் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு RAMP குழு ஆலோசனை வழங்கியுள்ளது.	செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இருந்ததுடன் பொதி ன்2 பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் முறையே 60 மற்றும் 18 சதவீதமாக காணப்பட்டது.				
(இ)நீர்கொழும்பு கழிவுநீரை அகற்றும் முறைமைக்காக பம்பி இல்லத்துடன் கூடிய சேகரிப்பு முறைமையை நிர்மாணித்தல். கேள்வி ஆவணம் அமைச்சரவை பெறுகை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு 2022 சனவரி 25 இல் அங்கீகாரம் பெற்ற போதிலும் கடன் வழங்கும் நிறுவனத்தினால் 2022 மே 12 இல் ஆட்சேபனை தெரிவிக்கப்பட வில்லை. 2023 திசெம்பர் 31 வரை பெறுகை நடவடிக்கை முடிக்கப்படவில்லை.	2023	மீண்டும் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு RAMP குழு ஆலோசனை வழங்கியுள்ளது. பெறுகை ஒப்பந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.	செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

2.5 கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்

2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்திற்காக யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை கடன் உடன்படிக்கை இலக்கம் எஸ்எல்-பி 99 இன் கீழ் ரூபா 17,922 மில்லியன் கடன் தொகை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், அதற்காக இலங்கை அரசின் பங்களிப்பு ரூபா 4,060 மில்லியன் ஆகும். செயற்திட்ட காலத்திற்குள் இரு தடவைகள் நீடிப்பு செய்து 2024 திசெம்பர் 31 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காணப்படுவதுடன், 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் 2023 ஆம் வருடத்திற்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தன.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்க நிதியம்	95	37	35
வெளிநாட்டு நிதியம்	3,126	1,083	-
மொத்த சொத்துக்கள்	20,480	21,624	20,232
மொத்த பொறுப்புக்கள்	1,054	1,059	1,054
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	17,003	18,086	18,086
உள்நாட்டு நிதியம் மூலம்	2,585	2,622	2,657

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கான கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உருவாகிய முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்புகள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	தற்போதைய நிலைமை
(அ)நாளொன்றுக்கு 14,000m³ திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணித்து 2020 மார்ச் மாதம் முதல் செயற்பட்டு வருகின்ற போதிலும், செயற்திட்டத்தின் தொகுப்பு 3 இன் கீழ் சொத்து இணைப்புக்கள் விநியோகம் முடிக்கப்படாததால், 2024 யூன் 30 வரை நாளொன்றுக்கு 5,500m³ திறனில் செயல்படுகின்றது. எமது நீர் சுத்திகரிப்பு குறைவான திறனுடன் செயற்படுவதால் நிலையம் கொள்ளளவு குறைவாக உள்ளதால், செயற்திட்டத்தில் எதிர்பார்த்த பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதுடன் பல்வேறு பொருளாதார, சமூக பிரச்னைகள் எழுந்துள்ளன.	2023	பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடனை செலுத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் முடிவு காரணமாக, கடன் வழங்கும் நிறுவனம் ஒப்பந்தக்காரர்களுக்கு 2022 மார்ச் முதல் சிட்டைகளை செலுத்துவதை நிறுத்தி வைத்துள்ளதுடன், ஒப்பந்தம் தற்காலிகமாக இடைநிறத்தப் பட்டுள்ளது.	கடன் வழங்கலை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
(ஆ)ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின்	2023	கால தாமதமில்லாமல் திட்டமிடப்பட்ட	நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி	பொதி 3 இற்கான விரிவான

பிரகாரம், செயற்திட்டத்தின்பொ ாதி 3-சொத்து இணைப்புக்கள் பகுதி 2017இல் பூர்த்திசெய்யப்பட்டி ருக்க வேண்டும் எனினும், ஆறு வருடங்கள் காலதாமதத்து டன் 2025 திசம்பர் 3164 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத் துடன் இடைநிறுத்தப்பட்டி ருந்தது. இந்த ஒப்பந்தம் 11,700 சொத்து இணைப்புக்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் கழிவு நீர் வலையமைப்பி ற்கு 4,088 இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது		நடவடிக்கைகள் உடனடியாக பூர்த்திசெய்யப்பட வேண்டும்.	காரணமாக கடனை செலுத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் முடிவு காரணமாக, கடன் வழங்கும் நிறுவனம் ஒப்பந்தக்காரர்க ளுக்கு 2022 மார்ச் மாதம் முதல் சிட்டைகளை செலுத்துவதை நிறுத்தி வைத்துள்ளது.	திட்டம் மற்றும் சொத்து இணைப்புக் கள் ஒப்பந்தம் 2023 திசெம்பர் 31 வரை நிறைவு செய்யப்பட வில்லை.
(இ)ஒப்பந்ததாரரின் உரிமை கோரல்கள் எண். 1 மற்றும் எண். 2 இன் கீழ் அதனை பூர்த்தி செய்தல் மற்றும் தொடர்புடைய செலவுகளுக்கு கால நீட்டிப்பு கோரினாலும், அதனை செயற்திட்ட பொறியியலாளர் ஒப்புக்கொள்ளவில்லை. இதன் விளைவாக, உரிமைகோரல்கள் எண். 1 மற்றும் எண். 2 பிணக்கு தீர்த்தல் சபைக்கு	2023	ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்துவதற்கு முன் சபை மாறுபாடு குழுவொன்று மற்றும் அமைச்சு மாறுபாடு குழுவொன்றின் மூலம் பெறுமதியின் துல்லியத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அமைச்சரவை டெண்டர் சபை மூலம் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டமை யால் இந்த மாறுபாடு 2021 திசெம்பர் 29 அன்று அங்கீகாரத்திற் காக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டது.	ஒப்பந்ததார ருடன் கலந்துரை யாடல் நடைபெற்று வருகின்றது.

(DAB) பரிந்துரைக்கப்பட்டன . வேலைதருனர் பிணக்கு தீர்த்தல் சபையின் முடிவை ஏற்கவில்லை மற்றும் அதிருப்தி அறிவிப்புகளை வெளியிட்டார். ஒப்பந்ததாரர் யூன் 2020 இல் ஒரு இணக்கமான தீர்வுக்கான முன்மொழிவைச் சமர்ப்பித்திருந்ததுட ன் ஒப்பந்ததாரரின் உரிமைத் தொகையாக ஒப்பந்ததாரர் ரூபா 1,745.20 மில்லியன் மற்றும் ரூபா 1,304.69 மில்லியனனை பரிந்துரைத்தது டன் பொறியியலாளர் ரூபா 89.36 மில்லியனை பரிந்துரைத்தது டன் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு ரூபா 791.12 மில்லியன் மற்றும் ரூபா 1,138.31 மில்லியனை பரிந்துரைத்தது. இந்த மாறுபட்ட தொகைகள் இருந்தபோதிலும், துல்லியம், முழுமை அல்லது செல்லுபடியாகும் தன்மையை முறையாகச் சரிபார்க்காமல், பணிப்பாளர் சபையால் ரூபா 1,304.69 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுததுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிரு

ந்தது.					
(ஈ)மொத்தம் 1,855 மீற்றர் நீளமும், கழிவுநீர் வலையமைப்பில் 48 இடங்களும் தொய்வுற்ற குழாய்களால் கண்டறியப்பட்டன. இவற்றில் 38 இடங்கள் உட்பட 1,520 மீற்றர்கள், 2 ஆண்டுகளாக மற்றும் 8 இடங்கள் உட்பட 299 மீட்டர்கள், 6 மாதங்களுக்கு ஒருமுறை அடிக்கடி மற்றும் 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை, அவ்வப்போது சுத்தப்படுத்தப்பட வேண்டும் என கண்டறியப்பட்டதுடன் தொடர்ந்து 2 இடங்கள் உட்பட 36 மீட்டர்கள். புனரமைப்புக்கு பரிந்துரைக்கப்பட்டன . குழு அறிக்கையின்படி, போதிய படுக்கையை தயார் செய்யாமை, போதிய அளவு கச்சிதமாக இல்லாதது, குறைந்த தரப் பொருட்களைப் பயன்படுத்துதல், முறையற்ற முறையில் நிரப்பும் முறைகள், மோசமாக இணைக்கப்பட்ட குழாய் இணைப்புகள் மற்றும் மோசமான	2023	செயற்திட்டத் தினை முடிவுறுத்த முன்னர் அனைத்து வழுக்களையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இறுதிக் கட்டணம் இன்னும் செலுத்தப்படாத தால், பொதி 2 ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகி றது.	2023 திசெம்பர் 31 வரை திருத்த நடவடிக்கை செயற்படுத்த ப்படவில்லை.

(ஈ)	ஊவா, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் முடிவுறுத்தப்பட்ட 10 ஒப்பந்தப் பொதிகளின் முற்பணங்களான மொத்தம் ரூபா 2,014.10 மில்லியனை சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முற்பண உத்தரவாதங்கள் மூலம் அறவிடுவதற்கு எதிராக ஒப்பந்தக்காரர்களால் பெறப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுகளின் காரணமாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மீட்டெடுக்க முடியவில்லை.	2023	பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து முற்பண முறிகளை காசாக்கல் மூலம் அறவிடுவதற்கோ நட்டங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய துடன் ஒழுங்காற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும்.	மீளப்பெற முடியாமை இன்னும் மாற்றமடையாமல் கானப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	அப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்காக 1452 பி ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 4,560 மில்லியன் கடனை வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2,561.32 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 05 சந்தர்ப்பங்களில் நீடிக்கட்டிருந்துடன் 2025 பெப்ரவரி 02 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமை பற்றிய சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, மேலும் அந்த 3 ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	56	15	36
வெளிநாட்டு நிதிகள்	75	85	419
மொத்தச் சொத்துக்கள்	5,334	5,499	12,481
மொத்தப் பொறுப்புக்கள்	65	53	109
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	4,760	4,945	11,836
உள்நாட்டு நிதிகள் ஊடாக	399	414	449

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதித்த காரணிகளுக்கு மேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கடந்த 3 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழுப்பப்பட்ட பல முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	இச் செயற்த்திட்டத்தின் மூலம் 2,772 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 730 காணித்துண்டுகளுக்காக ரூபா 245.13 மில்லியன் நட்டஈடு மற்றும் 155 காணித்துண்டுகளுக்காக ரூபா 58.24 மில்லியன் தாமத வட்டி என்பன செலுத்தப்பட்டிருந்தன. எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் உப உட்பிரிவின் பிரகாரம் 147 காணித்துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் இது சுவீகரிக்கப்பட வேண்டிய முழு தனியார் காணிகளில் 7.8 சதவீதத்தையே இது பிரதிநிதித்துவப்படுத்தியது.	2021 2022 2023	செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.	முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாக கண்காணிக்க நடவடிக்கை எடுத்தல்.	உரிமையை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஆ)	ஒப்பந்த நிபந்தனைகளின் 128 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஒப்பந்த முடிவில்	2023	ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் ஆய்வுகூடம் மற்றும் அளவை பொருட்கள் செயற்திட்டத்தின்	நடவடிக்கை எடுக்கவில்லை.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதியில் உள்ள 4/2 ஆம் இலக்க பாலத்தின் புனரமைப்பு தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கள ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக மொத்தமாக ரூபா 6 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியுள்ளது. எனவே அந்த சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நலன்கள் மற்றும் செயற்திட்ட செலவை மீறுவதற்கு வழிவகுக்கும்.

முடிவில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்படுகின்றது. எனினும், போட்டித் தன்மையின் கீழ் கேள்விகள் அழைக்கப்படுகின்றதுடன் பொருட்களின் பெறுமானத்தேய்வு பெறுமதியை கருத்தில் கொண்டு விலைகள் குறிப்பிடப்படுகின்றன. கேள்விதாரர்களின் கோரப்பட்ட கேள்வி விலையுடன் ஒப்பிட்டு இது வெளிப்படுத்தப்படுகிறது.

3.4 பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம்

2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்துக்காக IBRD 9290-LK ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 101,499.6 மில்லியன் கடனை வழங்குவதற்கு மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 300 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 2026 ஒக்தம்பர் 31 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமை பற்றிய சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, மேலும் அந்த 2 ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு		
அரசாங்க நிதிகள்	48	43
வெளிநாட்டு நிதிகள்	4,654	9,046
மொத்தச் சொத்துக்கள்	7,473	16,878
மொத்தப் பொறுப்புக்கள்	467	1,091
மொத்த நிதி		
வெளிநாட்டு நிதிகள்	5,974	16,093
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	48	91

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதித்த காரணிகளுக்கு மேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கடந்த 2 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழுப்பப்பட்ட பல முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	ஆரம்ப திட்ட காலம் 05 ஆண்டுகளாக இருந்ததுடன் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் இலக்கு வீதி நீளமான 1096.8 கிமீ றில், 251.18 கிமீ வீதி மத்திரமே 2023 டிசம்பர் 31 இற்குள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.	2022 2023	கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.	வீதிகளை அடையாளம் காண்பதிலும், பெறுகையிலும் தாமதம் ஏற்பட்டது.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், உப-கூறு 1.2 இன் கீழ் வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த உப-கூறு செயற்திறனை நிலைநிறுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் மற்றும் வளர்ந்து வரும் இணைப்புத் தேவைகள் மற்றும் சவால்களுக்கு பதிலளிக்கும் திறனை மேம்படுத்துவதற்கும் வீதித் துறையின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருப்பினும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்தும் இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	2023	கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.	திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ)	அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு விவசாய அமைச்சுடன் இணைந்து ஒரு கூட்டு அமுல்ப்படுத்தல் பொறிமுறையைத் தயாரித்து நிறுவுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆரம்பத்தில், 2023 மே 09 ஆம் திகதிய மீள்கட்டமைப்பு பத்திரத்தின் பிரகாரம் இந்தக் கூறுக்கு ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஒதுக்கீடு செயயப்பட்டு, அது ஐ.அ.டொலர் 15 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. எனினும், மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தில் கூறப்பட்ட பரிந்துரைகளிற்கு முறணாக 2023 முடிவில் உள்ளவாறு இந்தக் கூறு தொடங்கப்பட்டிருக்கவில்லை.	2022 2023	கால எல்லைக்குள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.	திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.5 சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம்

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்துக்காக 9/574 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 7,800 மில்லியன் கடனை வழங்குவதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2,828 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 01 சந்தர்ப்பத்தில் நீடிக்கட்டிருந்துடன் 2023 திசெம்பர் 31 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமை பற்றிய சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, மேலும் அந்த 3 ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	43	4	82
வெளிநாட்டு நிதிகள்	480	113	211
மொத்தச் சொத்துக்கள்	8,703	8,862	19,667
மொத்தப் பொறுப்புக்கள்	131	192	74
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	7,698	8,145	18,985
உள்நாட்டு நிதிகள் ஊடாக	465	470	552

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதித்த காரணிகளுக்கு மேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கடந்த 3 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழுப்பப்பட்ட பல முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	இத்திட்டத்தினால் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் காணித் துண்டுகளின் எ ண்ணிக்கை 1,370 ஆக இருந்ததுடன்,	2023	செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட	சுவீகரிக்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.	பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

	1,308 காணித்துண்டுகளுக்கு நட்டஈடாக ரூபா 195.98 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 56.22 மில்லியன் ரூபா தாமத வட்டியாக செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 78 காணித் துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் உப பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.		வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வின் போது எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.		
(ஆ)	ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக, செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்குவதற்கான செலவை கோருவதற்கு ஒப்பந்தக்காரர்களை அனுமதிப்பதன் மூலம் வீதி புனரமைப்புப் பணிகளுக்கான அளவிடை பட்டியலில் தனியான செலுத்தும் உருப்படிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் ஒப்பந்ததாரர்களால் பெறப்பட்ட செயலாற்றல் பிணைமுறிகளின் செலவை மீள்நிரப்பு செய்வதற்காக 03 ஒப்பந்ததாரர்களுக்கு	2023	2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38 (1) (சி) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட்டு எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.	எதிர்காலத்தில் இந்த கொடுப்பனவு உருப்படிகளை அகற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.	எதிர்காலத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூபா 0.79 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

3.6 பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம்

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்துக்காக 1661பி ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 7,800 மில்லியன் கடனை வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியமும் 10/639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 7,800 மில்லியன் கடனை வழங்குவதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியமும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2,600 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 01 சந்தர்ப்பத்தில் நீடிக்கட்டிருந்துடன் 2025 திசெம்பர் 31 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமை பற்றிய சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, மேலும் அந்த 3 ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	429	78	392
வெளிநாட்டு நிதிகள்	3,859	1,085	1,791
மொத்தச் சொத்துக்கள்	16,260	17,764	19,520
மொத்தப் பொறுப்புக்கள்	1.192	1,533	831
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள்	12,178	13,253	15,322
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	2,881	2,959	3,350

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதித்த காரணிகளுக்கு மேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கடந்த 3 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழுப்பப்பட்ட பல முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	இச் செயற்திட்டத்திற்காக 5,458 காணித்துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதில் 2972 காணித் துண்டுகளுக்கு நட்டஈடு செலுத்தப்பட வேண்டும், அவற்றில் 2,177 காணித் துண்டுகளுக்கு ரூபா 540.67 மில்லியன் 326 காணித் துண்டுகளுக்கு ரூபா 10.9 மில்லியன் தாமத வட்டியாகவும் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 749 காணித் துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் உப பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.	2022	மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு காணி சுவீகரிப்பை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.	பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.	காணி சுவீகரிப்புக்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	லுணுகல முதல் பிபிலை வரையிலான நெடுங்சாலையின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலிற்கான				

	ஒப்பந்தமானது 30 மாதகால ஒப்பந்த காலப்பகுதியுடன் ரூபா 2,006.43 மில்லியன் கிரயத்தில் 2017 யூன் 12 இல் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் மற்றும் இணங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக பௌதீக முன்னேற்றம் 60.32 சதவீதமாக இருந்த போது 2021 யூன் 29 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.				
(i)	ஒப்பந்ததாரர் மற்றும் தொழில்தருநர் இருவரும் உடன்படும் நோக்கத்துடன் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்தைக் கோரியிருந்த போதிலும், ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவின்பிரகாரம் “பரஸ்பர முடிவுறுத்தலிற்	2023	ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கடைபிடிக்கவும்.	நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி ஒப்பந்தம் ரத்து செய்யப்படவில்லை.

	கு“ ஏற்பாடுகளை வழங்கவில்லை . இதனால், ஒப்பந்த நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவு மற்றும் சட்டமா அதிபரின் கருத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கையை எடுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.				
(ii)	2022 நவம்பர் 17 ஆம் திகதிய மேற்படி சட்டமா அதிபரின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் தவறு காரணமாக பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஜூன் 12 அன்று பகுதியளவு முடிக்கப்பட்ட வேலையினை பொறியியளாளர் ஏற்றுக்கொண்ட	2023	ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கடைபிடிக்கவும்.	நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி ஒப்பந்தம் ரத்து செய்யப்படவில்லை.

	ாலும், 2022 ஜூலை 31 க்கு முன்னர் செயல்திறன் பாதுகாப்பின் செல்லுபடியாகும் காலத்தில் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகள் 15 க்கு இணங்க ஒப்பந்தத்தை முடிவுறுத்த செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இந்த தாமதம் காரணமாக ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு அமைய செயற்பட்டு நட்டத்தை குறைக்கும் வாய்ப்பை வீதி அபிவிருத்தி அதிகார சபை இழந்துள்ளது.				
(iii)	மேற்படி பொதியானது இரண்டு பொதிகளாக மீள் விலைக்கு விடப்பட்டு ரூபா 2,919.56 மில்லியன் பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்களாக வழங்கப்பட்டது. குறித்த கொள்வனவு அமைச்சின் கொள்வனவு குழுவினால் அங்கீகரிக்கப்ப	2023	ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கடைபிடிக்கவும்.	கொள்முதல் நிபந்தனைகளுடன் இணங்காமை.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ட்டுள்ளது. அதன்படி, கொள்வனவு கையேட்டின் பிரிவு 4.4.2 க்கு முரணாக, ஆரம்ப ஒப்பந்தத்தை அங்கீகரித்த அமைச்சரவை யால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் அங்கீகாரமின்ற ி ஒப்பந்தம் மீண்டும் வழங்கப்பட்ட போது பெறுகைகள் அமைச்சு கொள்முதல் குழுவுக்கு அறிவுறுத்தியிரு ந்தது.

3.7 களனி ஆற்றிற்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டம்

களனி ஆற்றிற்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டமானது 2014 யூலை 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தினால் SL – P 111 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 46,755 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 8,558 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது இரண்டு தடவைகள் நீடிக்கட்டிருந்துடன் 2021 ஒக்தம்பர் 25 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டுள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2021 ஆம் ஆண்டுக்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் 2022 ஆம் ஆண்டுக்கான முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு		
அரசாங்க நிதிகள்	129	84
வெளிநாட்டு நிதிகள்	10,066	1,392
மொத்தச் சொத்துக்கள்	57,777	93,361
மொத்தப் பொறுப்புக்கள்	1,203	3,675
மொத்த நிதி		
வெளிநாட்டு நிதிகள்	54,003	87,036
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	2,124	2,209

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த இரண்டு வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்வேறு தரப்பின்ர்களுக்குச் சொந்தமான 968 காணித்துண்டுகளை உள்ளடக்கிய 12.9 ஹெக்டயர் பரப்பளவான காணி ரூபா 1,134.94 மில்லியன் செலவு செய்து செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் காணிச் சவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவிற்கு இணங்க காணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு 2023 யூன் 06 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை.	2022	காணிச் சுவீகரிப்பு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்திய 968 காணித்துண்டுகளில் பல அதிகாரமற்ற நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட/ குடியேரியுள்ள அரசாங்க காணிகளாக இருந்தன. ஆகவே அந்த அரசாங்க காணிகள் தொடர்பாக காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவினை பிரசுரிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஏனைய காணிகள் தொடர்பாக 44 ஆம் பிரிவின் கீழான பதிவு செய்தல் செயன்முறையானது தொடர்ந்து செய்யப்படுகின்றது.	968 காணித்துண்டுகளில் 55 இற்கு பிரிவு 44 வழங்கப்பட்டுள்ளது.
(ஆ)	2022/2023 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 16 பாதிப்புக்களை திருத்தம் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும் செயற்திட்டம் இது தொடர்பாக 2023 யூன் 30 ஆந் திகதி வரையும் எந்த நடவடிக்கையையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2022	பட்டியல்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பாதிப்புக்கள் அறிவிப்புக் காலப்பகுதி 2023 நவம்பர் காலாவதியாவதற்கு முன்னர் அனைத்து பாதிப்புக்களும் திருத்தம் செய்யப்படும்.	கணக்காய்வு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.8 25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம்

25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டமானது 2015 செப்தம்பர் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் 886 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 4,632 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 460 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது இரண்டு தடவைகள் நீடிக்கட்டிருந்துடன் 2023 டிசம்பர் 31 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2021 ஆம் ஆண்டுக்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு அரசாங்க நிதிகள்	71	30	
வெளிநாட்டு நிதிகள்	1386	633	
மொத்தச் சொத்துக்கள்	4,191	4,795	4,800
மொத்தப் பொறுப்புக்கள்	453	393	389
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள்	3,494	4,128	4,128
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	242	272	281

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த 3 வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	செயற்திட்ட கண்பாணிப்பு குழு ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டும் என்பதனை வரிசை அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ஒரு கண்காணிப்பு குழு கூட்டம் மாத்திரம் நடைபெற்றதுடன் 2019 இலிருந்து 2023 வரை எட்டு கண்காணிப்பு குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றன.	2022, 2023	2018 இன் 19 ஆம் இலக்க தேசி கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38(இ) இன் பிரகாரம் செயற்திட்டங்களில் காணப்படுகின்ற நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தாபித்து அவ்வாறான முறைமையின் செயற்திறனை கண்காணிப்பதற்காக காலரீதியான மீளாய்வினை மேற்கொள்ள வேண்டியதுடன் அதற்கிணங்க எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.	உடன்பட்டனர்.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.9 கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம்

கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டமானது 2021 மே 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், உலக வங்கியினால் 6623 LK (Concessionery Loan) ஆம் இலக்க மற்றும் 6624-LK (Unconcessionery Loan) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 13,762 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 1,642 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 2025 மே 31 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2022 ஆம் ஆண்டுக்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் 2023 ஆம் ஆண்டுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தார்.

ஆண்டு	**2022** **ரூபா** **மில்லியன்**	**2023** **ரூபா** **மில்லியன்**
ஆண்டிற்கா மொத்தச் செலவு		
அரசாங்க நிதிகள்	17.49	128.57
வெளிநாட்டு நிதிகள்	168	-
மொத்தச் சொத்துக்கள்	187	301
மொத்தப் பொறுப்புக்கள்	0.7	3.1
மொத்த நிதி		
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	169.47	153.05
உள்நாட்டு நிதிகள் ஊடாக	17.09	145.67

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த இரண்டு வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	கண்டி பல்வகை போக்குவரத்து முனையத்தின் (KMTT) தொடக்க வேலைகளுக்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 3 ஆண்டுகளை எடுத்திருந்ததுடன் 2024 மார்ச் 18 ஆந் திகதியிலிருந்து தொடங்கி 3 ஆண்டுகளுக்குள் KMTT இனை நிர்மாணிப்பதற்கு மாகா எஞ்சினியரிங் (Maga Engineering) தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. செயற்திட்டம் அதன் வேலைகளையும் ஒன்பது மாடிக் கட்டிடத்தினையும் 2026 இற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருக்கும் என அவதானிக்கப்பட்டது.	2023	உடன்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அறிவுறுத்துதல் வேண்டும்.	ஒப்பந்தமானது ஓர் தனியார் கம்பனியிற்கு வழங்கப்படுவதுடன் பூர்த்தியாக்கல் திகதி 2027 மார்ச் 18 ஆகும். ஒன்பது மாடிக் கட்டிடத்திற்கான நிதியை பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்களின் காரணமாக நோக்கெல்லையானது ஏழு மாடிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதுடன் தற்பொழுது இலங்கை அரசாங்கம் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் கேள்வியை வழங்குவதற்கான பெறுகை செயன்முறையானது நடைபெற்று வருகின்றது.	பெறுகை செயன்முறைப் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ)	3/2018 ஆம் இலக்க 2018 யூலை 16 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்கள் செயற்பாட்டு குத்தகை முறைமையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுத்திறைசேரியிடம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு பொதுத்திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாட்டு குத்தகை முறைமையில் (பயன்படுத்தி திருப்பி ஒப்படைத்தல்) 03 வாகனங்களைப் பெற்றுக் கொண்டிருந்தது.	2023	தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை மீறிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இது உலக வங்கி நிதியளித்த செயற்திட்டம் என்பதனால் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாட்டு குத்தகை முறைமையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேற்கூறிய வாகனங்களின் குத்தகை ஒப்பந்த காலமானது ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2019 ஆம் ஆண்டிலிருந்து, பல்மாதிரி முனையத்தின் நிர்மாணத்திற்காக வேண்டப்பட்ட காணிக்கான இழப்பீடாக 825 நபர்களுக்கு ரூபா 712 மில்லியன் செலுத்தப்பட்டது. அவற்றில் ரூபா 35.06 மில்லியன் தொகையானது 2019 ஆம் ஆண்டிலிருந்து மூன்று	2022 2023	உடன்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் செய்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உடன்பட்டனர்.	இந்த திட்டம் நடைபெற்று வருவதால் கொடுப்பனவுகள் தொடர்கின்றன.

	ஆண்டுகளுக்காக 17 நகபர்களுக்கு வியாபார நட்டமாக செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளின் தாமதத்தின் காரணமாக செயற்திட்டம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அதே நபர்களுக்கு ரூபா 22.2 மில்லியனை செலுத்த வேண்டியிருந்தது. மேலும் இச்செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யும் இக்கொடுப்பனவினை செலுத்த வேண்டி ஏற்படும்.				
(ஈ)	கடன் வழங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்கள் பிந்தாமல் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டினை செயற்திட்டம் தயாரித்தல் வேண்டும்.	2023	கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டினைத் தயாரிப்பதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அறிவுறுத்துதல் வேண்டும்.	ஒப்பந்தம் அண்மையிலேயே வழங்கப்பட்டதுடன் செயற்திட்ட செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.10 போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்டம்

போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்டமானது 2017 சனவரி 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 3425 SRI (SF) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 3,655.43 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 490.98 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 2023 ஜூன் 30 அன்று பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் 2022 ஆம் ஆண்டுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	0.006	-	0.09
வெளிநாட்டு நிதிகள்	-	573	10.3
மொத்தச் சொத்துக்கள்	471	1,095	916
மொத்தப் பொறுப்புக்கள்	-	-	-
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள்	422.65	995.84	824.88
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	47.52	47.523	47.62

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த மூன்று வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2022 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மத்திய தவணை மீளாய்வு தூதுக் குழுவிற்கு இணங்க மிகுதியாக உள்ள சலுகைக் கடன் மீதியினைப் பயன்படுத்துவதற்கான புதிய பணி ஒப்படையின் விபரத்தினை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கும் வரை கடனை வைத்திருப்பதற்கு தூதுக்குழு எதிர்பார்த்து. அவ்வாறு செய்வதற்கு பெருந்தெருக்கள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணங்கியிருந்த போதிலும் செயற்திட்டம் முடிவடையும் வரை புதிய பணி ஒப்படைக்கான பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே யூ.எஸ் டொலர் 7.45 மில்லியன் சலுகைக் கடன் மீதி பயன்படுத்தப்படாதிரு	2023	வீதித் துறையின் உள்ளபடியான வேண்டுதல்களுக்காக வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கடன் தொகைக்குள் அடையாளம் காணப்பட்ட வேலையை பூர்த்திசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	ஒரு செயற்திட்டபிரேரணையானது தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (NPD) அவர்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது 2022 சனவரி 20 ஆந் திகதி NPD இனால் அங்கீகரிக்கப்பட்டது. எனினும் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய பணி ஒப்படையும் பிரேரணைகளும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	நந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினை மூடுகையில் மீளளிப்புச் செய்யப்பட்டது.				
(ஆ)	ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வீதிக் கூறுக்காக யூ.எஸ் 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்யும் வரை யூ.எஸ் டொலர் 2.55 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் (PMU) பயன்படுத்தப்பட்டிருந்தது.	2021, 2022 2023	கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	TPPF செயற்திட்டத்தின் வீதிக் கூறானது அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினையும் SASEC துறைமுக உயர்த்தப்பட்ட் நெடுஞ்சாலைகளின் வடிவமைப்பினையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் தொடக்க மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்பானது அதிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அடையாளங்காணப்படவில்லை. எனவே யூ.எஸ் டொலர் 10 மில்லியனில் யூ.எஸ் டொலர் 6.9 மில்லியன் பெறுமதியான பிரதான கூறு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.11 கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண செயற்திட்டம்

கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண செயற்திட்டமானது 2021 ஒகஸ்ட் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், ஹங்கேரியன் வங்கியினால் HS001121000 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 10,192 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 975 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 2024 பெப்ரவரி 15 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவ் ஆண்டுகளுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	359	85	406
வெளிநாட்டு நிதிகள்	2,636	774	-
மொத்தச் சொத்துக்கள்	3,493	6,518	7,177
மொத்தப் பொறுப்புக்கள்	498	1,033	403
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள்	2,636	5,040	5,922
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	359	444	850

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த மூன்று வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	வரிசை அமைச்சினால் 2018 இல் நடாத்தப்பட்ட தொடக்க ஆய்விற்கு இணங்க கொகுவல மற்றும் கடம்பேயில் மேம்பாலத்தை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா 4.26 மில்லியன் செலவு சேமிக்கப்படும் என அடையாளம் காணப்பட்டிருந்தது. எனினும் நிர்மாண வேலைகளைத் தாமதிப்பதானது செயற்திட்ட விளைவுகளில் தாமதத்தை ஏற்படுத்தலாம் என அவதானிக்கப்பட்டது.	2022	செயற்திட்ட விளைவுகளை அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	IPCC செயற்திட்டங்களுக்கு பணம் செலுத்தப்படாமையின் காரணமாக திட்டமிட்டவாறு பூர்த்தியாக்கலின அடைந்துகொள்ள முடியவில்லை.	நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	வெளிநாட்டு நன்கொடையளிக்கும் முகவராண்மைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1628.94 மில்லியன் தொகையான 07 இடைக்கால கொடுப்பனவு கோரிக்கைகள் (IPC) மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் முகவராண்மை	2022	மேலதிக செலவு ஏற்படாது கடன் பணத்தை வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சர்வதேச நாணய நிதிய கடன் மீளமைத்தலின் காரணமாக ஹங்கேரியன் எக்ஸிம் வங்கி பணம் வழங்குவதனை நிறுத்தியுள்ளது. 2022 ஏப்பரல் மாத்திலிருந்து அனைத்து நிலுவைக் கொடுப்பனவுகளும் இன்னும் செலுத்தப்படவில்லை.	கடன் வழங்கல் இடைநிறுத்தம் தற்போது வரை தொடர்கின்றது.

	அத்தொகையினை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தியிருக்கவில்லை.				
(இ)	மற்றைய இரண்டு செயற்திட்டங்களிலிருந்து ரூபா 14.65 மில்லியன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் இச்செயற்திட்டத்தின் வாங்கிய காணிகளுக்காக இழப்பீடும் வட்டியும் செலுத்தப்பட்டது. எனினும் அந்த நிதியை மாற்றுவதற்கு வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்தும் எழுத்துமூல அங்கீகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் ஏனைய செயற்திட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2022	செலுத்த வேண்டியவைகளை தீர்த்துவைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	புதிதாக தொடங்கிய செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் ஒரு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன் தொடக்க செலவுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. ஆகவே இலங்கை அரசாங்க கூறின் கீழ் போதியளவு கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் செலுத்த வேண்டியவைகள் தீரத்துவைக்கப்படும்.	இதுவரை செலுத்த வேண்டிய ரூபா 14.09 மில்லியன் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.12 சீனாவின் எக்ஸிம் வங்கி (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம்

சீனாவின் எக்ஸிம் வங்கி (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டமானது 2018 நவம்பர் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், சீனாவின் எக்ஸிம் வங்கியினால் EXIM BANK – HUNAN - 015 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 20,300 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2,370 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது ஒரு தடவை நீடிக்கட்டிருந்துடன் 2022 நவம்பர் 28 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவ் ஆண்டுகளுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	97	76	30
வெளிநாட்டு நிதிகள்	6,789	-	-
மொத்தச் சொத்துக்கள்	17,624	18,040	32,559
மொத்தப் பொறுப்புக்கள்	2,478	1,648	1,647
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	12,900	14,070	28,559
உள்நாட்டு நிதிகள் ஊடாக	2,246	2,322	2,352

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த மூன்று வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	வெளிநாட்டு கடன் உடன்படிக்கையின் பிரிவு இலக்கம் 12.1(10) இன் பிரகாரம் செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு நன்கொடையாளருக்கு செயற்திட்ட பூர்த்தியாக்கல் பொழிப்பு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையும் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023	கடன் உடன்படிக்கையின் படி பூர்த்தியாக்கல் பொழிப்பு அறிக்கையினை நன்கொடையாளருக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கடன் உடன்படிக்கையின் படி கடன் வழங்குனரினால் விடுக்கப்பட்ட வேண்டுதலின் அடிப்படையில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு கடன் வழங்குனருக்கு (நன்கொடையாளர்) செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அவ்வாறான வேண்டுதல் இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட காலம் 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட காலப்பகுதியானது 2022	2022 2023	கடன் காலப்பகுதியை நீடிப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்தும் நன்கொடையாளரிடமிருந்தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உடன்பட்டனர்.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது நீடிக்கப்பட்ட செயற்திட்ட காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய முடியாதிருந்ததுட ன் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்ட காலப்பகுதியை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நீடிப்பதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திட ம் வேண்டுகோள் விடுத்திருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை .				
(இ)	மெகா செயற்திட்டங்களி ன் மீள்வியூகம் அமைத்தல் மற்றும் துரித்தப்படுத்துல் குழுவின் சிபாரிசு மற்றும் ‘‘செயற்திட்ட அலுவலகங்களை யும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளையும்	2023	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் திட்டத்தை முடிவுறுத்தவும் திட்ட மேலாண்மை பிரிவை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	நடைமுறை விடயங்களை கருத்தில் கொண்டு 2023.09.30 வரையும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினை செயற்படுத்துவத ற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை.

மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை'' தொடர்பாக 2022 திசெம்பர் 13 இல் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம், செயற்திட்டம் 2023 சனவரி 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டு 2023 மார்ச் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்த பதவியினர்களின் சேவையை முடிவுறுத்துதல் வேண்டும். எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு உரிய திகதியில் மூடப்படாதிருந்ததுடன் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் சம்பளங்களுக்காவும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தை பராமரிப்பதற்காகவும் ரூபா 9.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

அதற்கிணங்க செயற்திட்ட முகாமைத:துவ பிரிவு 2023-09-30 ஆந் திகதியளவில் மூடப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் செயற்பட்டது.

3.13. மண்சரிவு விபரீதங்களிலிருந்து பாதுகாத்தல் செயற்திட்டம்

மண்சரிவு விபரீதங்களிலிருந்து பாதுகாத்தல் செயற்திட்டமானது 2013 ஜூலை 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவராண்மையினால் SL-P 109 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 12,870.45 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 3,331 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது இரு தடவைகள் நீடிக்கட்டிருந்துடன் 2020 ஜூலை 05 அன்று பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவ் ஆண்டுகளுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு		
அரசாங்க நிதிகள்	130	34
வெளிநாட்டு நிதிகள்	-	-
மொத்தச் சொத்துக்கள்	11,224	11,333
மொத்தப் பொறுப்புக்கள்	1.7	75.8
மொத்த நிதி		
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	9,677	9,677
உள்நாட்டு நிதிகள் ஊடாக	1,545	1,580

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களுக்கான விடயங்களாக கருதப்படுபவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் கடந்த இரண்டு வருடங்களினது கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதன் செயலாற்றல்
(அ)	உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களின் அனுபவமின்மை மற்றும் அவர்களால் பாதுகாப்பு ஏற்பாடுகளை விளங்கி கொள்ளாமை மற்றும் அதிகரிக்கும் மண்சரிவு எதிர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக இச்செயற்திட்டத்தின் தொகுதி "A" மற்றும் தொகுதி "B" இன் கீழுள்ள நிர்மாணங்களின் பூர்த்தியாக்கல் காலம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாமதமடைந்திருந்தது. எனவே செயற்திட்டம் கடன் காலப்பகுதியில் மொத்த கடன் தொகையான ஜப்பான் யென் 7,619 மில்லியனில் ஜப்பான் யென் 6,283 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. ஆகவே கடன் காலப்பகுதி பூர்த்தியடையும் போது பயன்படுத்தப்படாத கடன் மீதிக்காக செலுத்தப்படும் கடப்பாட்டுக்	2022	கடன் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.	இச்செயற்திட்டத்தின் விடயப்பரப்பானது தொகுதி "A" மற்றும் தொகுதி "B" இன் கீழ் 16 மண்சரிவு அமைவிடங்களாக இருந்தது. மேலும் 16 மண் சரிவு அமைவிடங்களை பூர்த்திசெய்வதற்கு மேலதிகமாக கடன் தொகையில் ஜப்பான யென் 1000 மில்லியனுக்கு மேல் சேமித்து செயற்திட்ட காலப்பகுதிக்குள் 07 மேலதிக மண்சரிவு அமைவிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டன.	கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருகாகதுடன் 2022 இல் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

	கட்டணம் சிக்கனமற்றது என அவதானிக்கப்பட்டது.				
(ஆ)	மண்சரிவு அறிவிப்புக்களை முனனராகவே அடையாளம் கண்டு கொள்வதற்காக இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியனை செலவு செய்து (EWS) தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமையானது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே இந்த முறைமைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு சிக்கனமற்றதாக மாறியிருந்தது.	2022	செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முன்கூட்டிய எச்சரிப்பு முறைமையை (EWS) பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனமும் (NBRO) வீதி அபிவிருத்தி அதிகார சபையும் (RDA) இணைந்து இச்செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகினை தாபித்தல் வேண்டும். எனவே முன்கூட்டிய எச்சரிப்பு செயற்திறனாக செயற்படுவதுடன் கடன் உடன்படிக்கைக்கு இணங்க NBRO இனால் இது பயன்படுத்தப்படுவதனால் NBRO இன் மூலம் உச்ச அளவு நலன் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.	EWS முறைமை RDA வினால் பயன்படுத்தப்பட வில்லை.

3.14 கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் (OFID II)

கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் (OFID II) 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1511 PB ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 50 மில்லியன் கடன் தொகையினை வழங்க சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (OFID) உடன்பட்டது. இச்செயற்திட்டத்திற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 36.25 மில்லியன் ஆகும். இச் செயற்திட்டமானது மூன்று சந்தர்ப்பங்களில் நீடிக்கட்டிருந்துடன் 2026 மே 31 அளவில் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் இம் மூன்று ஆண்டுகளிற்குமான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	2,330.87	119.67	721.00
வெளிநாட்டு நிதிகள்	904.74	585.67	2,012.59
மொத்தச் சொத்துக்கள்	17,852.53	19,585.40	26,934.57
மொத்தப் பொறுப்புக்கள்	1,785.88	2,266.04	1,238.97
மொத்த நிதிகள்			
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	6,086.48	6,694.32	13,057.96
உள்நாட்டு நிதிகள் ஊடாக	9,027.07	9,146.74	11,159.34

முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான காரணங்களிற்கு மேலதிகமாக, கடந்த மூன்று வருடங்களிற்காக செயற்திட்டத்துடன் தொடர்புபட்டு கணக்காய்வு அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	செயற்திட்டத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் படி நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வில்லை.	2022 2023	நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட முன்னர் இலங்கையின் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகுவதை கணக்காளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.	நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் 2023 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும் என்று 2022 இல் ஒப்புக் கொள்ளப்பட்டாலும், அது செய்யப்பட்டிருக்கவில்லை.	பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2023 திசெம்பர் 31 இன் இறுதியில் கடைசி IPC இன் பிரகாரம், செயற்திட்டம் முறையான அங்கீகாரம் இல்லாமல் BOQ ஐ விஞ்சி ரூபா 144.4 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. பூர்வாங்க மற்றும் பொது உருப்படிகளின் கிரயம், ஒப்பந்தத்திற்கு மேலதிக செலவை ஏற்படுத்தும் அத்தகைய தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	2023	வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிடமிருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.	இந்த விடயத்தினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(இ)	வீதி திட்டத்தின் பிரகாரம் முறையான அளவீடுகளுடன்	2023	வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன்,	இந்த விடயத்தினை தடுக்க நடவடிக்கை	பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	பொறியியலாளர் மதிப்பீடுகளை தயாரித்திருந்த போதிலும் ஒருகொடவத்தை அம்பத்தலே வீதியை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 208 மில்லியன் தொகையான முரண் கட்டளைகள் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் முரண்கள் 2024 மார்ச் 31 வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் இது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதொன்றாக இருந்தது.		செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிடமிருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.	எடுக்கப்படவில்லை.	
(ஈ)	ஒருகொடவத்தை அம்பத்தலே வீதி புனரமைப்பின் நிலை II இன் நிர்மானம் ரூபா 1,943 மில்லியன் செலவில் 2019 ஒக்தோபர் 21 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 ஒக்தோபர் 20 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிட்டிருந்தது. எனினும், நான்கு சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது, மேலும் ஒப்பந்ததாரர் ரூபா 55.25 மில்லியன் தொகையான இடைக்கால	2023	வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிடமிருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.	இந்த விடயத்தினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	உரிமைக்கோரலினை சமர்ப்பித்திருந்தார். ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இல. 8.7 இன் பிரகாரம் ஒப்பந்தங்களின் தாமதத்திற்கு ஒப்பந்ததாரரிடமிருந்து நிலை I மற்றும் II இலுள்ள 125 நாட்கள் மற்றும் 113 நாட்கள் தாமதத்திற்காக ரூபா 347 மில்லியன் தொகையான தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.				
(உ)	கிடைத்த தகவலின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக 992 அரச காணித்துண்டுகள் உட்பட 5,710 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக நட்டஈடுகளை தீர்ப்பனவு செய்வதில் உள்ள தாமதம் காரணமாக ரூபா 2,658 மில்லியன் வட்டி செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், 2023 டிசம்பர் 31	2023 2022 2021	காணி சுவீகரிப்பு செயன்முறை முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.	இந்த விடயத்தினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	ஆம் திகதியிலுள்ளவாறு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 05 காணி துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன . மேலும் இது செயற்திட்டத்தின் செயல்திறனை மோசமாக பாதிக்கலாம்.				
(ஊ)	பிலியந்தலை மகரகம வீதியின் மொத்த நீளம் 5.8 கி.மீ ஆனதுடன் மேம்படுத்தலானது மூன்று வீதி பிரிவுகளிற்கு வடிவமைக்கப்பட்ட து, மேலும் 1.8 கி.மீ நீளமுள்ள முதலாவது பிரிவு 2023 டிசம்பர் 07 அன்று வழங்கப்பட்டது. இருப்பினும், ஒப்பந் வழங்களிற்கு எதிராக விலைமனுதாரர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ன. இது செயற்திட்ட செயல்திறனை மோசமாக பாதித்தது.	2022 2023	செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு தாமதம் மற்றும் செலவை குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.	தாமதத்தை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள து.	செயற்திட்ட நடவடிக்கைகள் ஜூலை 2024 முதல் ஆரம்பிக்கப்பட்டன, மேலும் விலைமனுதாரரிடமி ருந்து தாமத கட்டணங்களை அறவிட முடிவு எடுக்கப்பட்டது

3.15 துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியானது துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டத்திற்காக 3716 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 46,381.72 மில்லியன் கடன் தொகையினை வழங்க உடன்பட்டுள்ளது, இது 2019 இல் ஆரம்பிக்கப்பட்டது, இச்செயற்திட்டத்திற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 9,500.76 மில்லியன் ஆகும். இச் செயற்திட்டமானது 2025 ஜூன் 30 அளவில் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்த்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இது தொடர்பாக, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்த அதே நேரம் 2021 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு			
அரசாங்க நிதிகள்	495.11	20.67	7.64
வெளிநாட்டு நிதிகள்	10,439.94	18,006.79	20,023.29
மொத்தச் சொத்துக்கள்	12,467.30	47,815.11	63,194.27
மொத்தப் பொறுப்புக்கள்	1,468.51	4,013.11	3,860.29
மொத்த நிதிகள்			
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	10,498.60	40,264.26	55,662.36
உள்நாட்டு நிதிகள் ஊடாக	495.05	515.73	523.37

அக் கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான காரணங்களிற்கு மேலதிகமாக, கடந்த 03 வருடங்களிற்காக செயற்திட்டத்துடன் தொடர்புபட்டு கணக்காய்வு அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	கடல்சார் வசதியளிப்பு நிலையக் கட்டிடத்தை நிறைவு செய்து இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தற்போதுள்ள ஊழியர்களை அணிதிரட்டுவதற்கான 03 மாறுபாடு கட்டளைகளின் கீழ் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செயற்திட்டம் மொத்தம் ரூபா 221.53 மில்லியனை செலவாழித்துள்ளது. மேலும், மேற்படி கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட மாறுபாடு வரம்பை ரூபா 11.07 மில்லியனால் விஞ்சியுள்ளமை அவதானிக்கப்பட்டது.	2022 2023	தேவையான அனுமதிகள் பெறப்பட வேண்டியதுடன் மேலதிக செலவுகளை குறைப்பதற்காக நிர்மாண நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இந்த விடயத்தினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஆரம்ப செலவு 34 சதவீதம் அதிகரித்துள்ள அதே நேரத்தில் கட்டுமான செயலாற்றல் 44.5 சதவீதத்தை எட்டியுள்ளது.
(உ)	கிளைகள் மற்றும் அந்த கிளைகளின் நிறைவேற்று உத்தியோகத்தரின் கடமைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள துறைகளின் விடயம் தொடர்பான செயற்பாடுகளின் அதிகார எல்லைக்கு உட்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2 மில்லியன் தொகையான செலவினமானது திறன் அபிவிருத்தி செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ளது.	2023	செலவினங்கள் சரியாக முகாமை செய்யப்பட வேண்டும்.	தவிர்த்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	செயற்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் (DLI) அடைந்துகொள்ளல் தொடர்பாக மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டினை தொடர்ந்துவரும் ஆண்டின் பெப்ரவரி 28 இற்கு முன்னர் உலக வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டுக்காக	2023	உரிய காலத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	2023 கல்வி ஆண்டு 2024 பெப்ரவரி மாதம் நிறைவடைந்தமையினால், தற்போது முன்றாம் தரப்பு சரிபார்ப்பு செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகினறது.	2023 ஆம் ஆண்டிலும் இந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த அறிக்கைகளின் சமர்ப்பிப்பு தொடர்பான மதிப்பீடுகள் 2024 மே மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

5.3 உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (நிகழ்ச்சித்திட்டக் கூறு)

2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) செயற்திட்டத்திற்கான மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 8743 LK ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 18,136 மில்லியனிற்கு தொகை ஒன்று பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கி இருந்தது. செயற்திட்டம் 1 சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2023.12.31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான தகவல்கள் சில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய 3 வருடங்களுக்காக செயல்திட்டத்தின் நிதி கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
வருடத்தின் மொத்த செலவினம்			
வெளிநாட்டு நிதி	6,031	4,449	4,664
மொத்த சொத்துக்கள்	12,614	17,546	21,490
மொத்த பொறுப்புக்கள்			
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	12,614	17,546	21,490

இதற்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 3 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் எழுந்த முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சில கீழ்கண்டவாறு காணப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	செயற்திட்டம்/ நிறைவேற்று அதிகாரமுள்ள முகவர் நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	தற்போதைய நிலைமை
(அ)	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இச் செயற்திட்டத்தின் கீழ் நோயியல் துறைக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று 04 மாடிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், ரூபா 153 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 02 மாடிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.	2023	ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையுடன் இணங்குதல் வேண்டும்.	நான்கு தளங்களுக்கும் அனைத்து வெளிப்புற வேலைகளுடன் மொத்த கட்டமைப்பு பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. கொரோனா தொற்றுநோயால் எதிர்பாராத விலை முரண் ஏற்பட்டதுடன் அதிகாரிகள் எடுத்த முடிவின் அடிப்படையில், நிர்மாணப் பணிகள் ஆரம்பத்தில் கிடைக்கக்கூடிய பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இரண்டு தளங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டன. நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு கட்டிடத்தின் மிகுதி இறுதிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.	1 ஆவது மற்றும் 2ஆவது மாடிகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை என்பதுடன் ஆய்வு கூட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் பாதுகாப்பற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கீழ் மாடியில் 1 ஆவது மற்றும் 2ஆவது மாடிகளின் மீதி நடவடிக்கைகள் மேலும் மீதமாக உள்ளது.
(ஆ)	தற்போது பயன்படுத்தப்படும் வீட்டு உரத் தொட்டியை பெரிய	2023	இறுதி முடிவை அடைந்துகொள்வதற்கு	கொவிட் தொற்றுநோயால் முழு செயற்திட்ட கால எல்லையும்	இறுதி முடிவை அடைந்துகொள்வதற்கு

அளவிலான உற்பத்தி மாதிரியாகவும், உயர் – தர கால்நடை தீவன வணிக உற்பத்தியாகவும் மற்றும் கரிம உரங்களாகவும் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் (AHEAD) செயற்திட்டத்தின் உலக வங்கி கடன் உதவியின் கீழ் ரூபா 50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பாரிய அளவிலான உரத் தொட்டிக்காக அறிவிக்கப்பட்டிருந்த அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் அந்த அலகுடன் கூட்டாகச் செயற்படுகின்ற அறுவடைப் பிரிவை வணிக மயமாக்க முடியவில்லை. அதனால் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் அந்த உணவை பதப்படுத்தும் தொழில்நுட்ப முறைக்கு காப்புரிமை விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப முறையின்	அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்	பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறிய உரக் குவியல்கள் நாங்கள் எதிர்பார்த்தது போல் இல்லை. இது தொற்றுநோய் மற்றும் நடமாட்டம், வீடுகளுக்குச் செல்வதற்கான கட்டுப்பாடுகளால் ஏற்பட்டது. எனவே, சிறிய பானையை வெற்றிகரமாக சோதிக்க முடியவில்லை. சிறிய பானையை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படை காப்புரிமை ஆவணங்களில் பெரிய குறைபாடுகள் இருந்தது. இது வெளிப்புற சூழலில் நட்பாக வடிவமைக்கப்படவில்லை. காப்புரிமை அங்கீகார முகவரான இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் கருத்தில் கொண்டிருக்கவில்லை. எனவே, இந்த சோதனைகள் நடாத்தப்பட்ட சூழலில் கடுமையான மழை, ஈரப்பதம் மற்றும் இரவுநேர வெப்பநிலை நிலைமைகள் நுண்ணுயிர் செயற்பாடு மற்றும் துர்நாற்றத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம்.	அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	குறைபாடுகள் காரணமாக இவ் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டிருந்தது. உரிய அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததாலும் எதிர்பார்த்த நலன்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததாலும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பயனற்றிருந்தன.				
(இ)	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2021 திசெம்பர் 15 இல் ரூபா 432 மில்லியன் தொகையான ஒப்பந்த பெறுமதியில் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான கட்டிடத்தை நிர மாணிப்பதற்கான ஒப்பந்தம் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் 2023 யூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அது 2023 திசெம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், 36 சதவீத நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் 31 வரை மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	2023	காலதாமதத்தை குறைத்து, ஒப்பந்த பணிகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இத கட்டம் II ஐ 2023 யூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்தது. இந்த நம்பிக்கையுடன், தொழில்நுட்ப பீடத்திற்கு மாணவர் உட்சேர்க்கையை அதிகரிக்கும் அரசாங்கத்தின் கொள்கையுடன் உடனடியாக இணங்கியது. தற்போது ஒவ்வொரு கல்வியாண்டிலும் சுமார் 400 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். தற்போதுள்ள கட்டிட வசதிகள் அதிகரித்த மாணவர் உட்சேர்க்கைக்கு ஏற்ற வகையில் போதுமானதாக இருக்கவில்லை. இது கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தை பாதிப்பதுடன் மாணவர்	அது இன்னும் நிறைவு செய்யப்படடி ருக்கவில்லை.

				அமைதியின்மைக்கு வழிவகுக்கும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் AHEAD இல் கிடைக்கப்பெறும் செலவிடப்படாத பணத்தை கல்வி அமைச்சுக்கு ஒதுக்கி திருப்பிவிடுமாறு வேண்டியது. இதனால் பல்கலைக்கழகம் தொடர்ந்து வேலைகளை பூர்த்தி செய்ய முடியும். இதுதொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு உதவுமாறு பல்கலைக்கழகம் ஏற்கனவே கோரிக்கைகளை விடுத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமும் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளது.	
(ஈ)	மாணவர்களின் செயன்முறை திறன்களை மேம்படுத்துதல், விவசாயிகள் மற்றும் சிறிய/ நடுத்தர அளவிலான விவசாயவணிகர்கள் தரைமட்டத்தில் இருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் கள அறிவை அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கத்துடன் இச்செயற்திட்டத்தின் நிதியேற்பாடுகளில் ரூபா 14 மில்லியன் தொகையை செலவிட்டு	2023	செயற்திட்ட வளங்கள் தாமதமின்றி பயன்படுத்தப்பட வேண்டும்.	தவிர்க்க முடியாத மற்றும் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக ஒன்லைன் முறையில் கற்பித்தல் மேற்கொள ளப்பட்ட காலப்பகுதியில் திட்டமிட்டவாறு இந்த வளத்தை பயன்படுத்த முடியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனினும், தற்போது நடைபெற்று வரும் கல்விசாரா தொழிற்சங்க நடவடிக்கை நீக்கப்பட்டவுடன்,	குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தால் 2021 பெப்ரவரி 24 இல் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூட பேருந்து 2021 மார்ச் முதல் 2023 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 06 சந்தர்ப்பங்களில் மாத்திரமே கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த துடன், இதனால் பேருந்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்த து.

இந்த வளத்தைப் பயன்படுத்தி பல கள விஜயங்கள், செயல் விளக்கங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி முயற்சிகளை நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்பதை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

5.4 உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (செயற்திட்டக் கூறு)

2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் (செயற்திட்டக் கூறு) செயற்திட்டத்திற்கான மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 8743 LK ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 18,136 மில்லியனிற்கு தொகை ஒன்று பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கி இருந்தது. செயற்திட்டம் 1 சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2023.12.31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான தகவல்கள் சில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2021 வருடங்களுக்காக செயல்திட்டத்தின் நிதி கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்றும் 2022 மற்றும் 2023 ஆகிய 2 வருடங்களுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயம் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
வருடத்தின் மொத்த செலவினம்			
வெளிநாட்டு நிதி	210	203	196
மொத்த சொத்துக்கள்	754	930	1,078
மொத்த பொறுப்புக்கள்	8	59	59
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	746	871	1,019

இதற்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 3 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் எழுந்த முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சில கீழ்கண்டவாறு காணப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயல்பாட்டு கண்காணிப்பு மற்றும் ஆதரவு குழுவின் (OMST) கட்டிட வளாகம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 29.3 மில்லியன் செலவாகியிருந்த போதிலும் அதற்கு ரூபா 21 மில்லியன் அலுவலக வாடகையாகவும், ரூபா 1.6 மில்லியன் அலுவலக சுத்தப்படுத்தல் கட்டணம் மற்றும் ரூபா 6.5 மில்லியன் மின்சார கட்டணமும் உள்ளடங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 22 செயற்திட்ட பதவியணியினர் மாத்திரமே அந்த கட்டிடத்தில் பணிபுரிகின்றனர்.	2023	செலவினம் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.	2023ஆம் ஆண்டினுல் மூன்றாவது தளம் மாத்திரமே வாடகைக்கு விடப்பட்டதுடன் மாதாந்த வாடகை ரூபா 700,000 ஆகும்.	2024 ஆம் வருடத்தினுள் செயல் திட்டம் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

5.5 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம்

2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம் (STHRD Project) ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3698 எஸ்ஆர்ஐ மற்றும் 3699 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 23,200 மில்லியன் தொகை ஒன்று பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கி இருக்கப்பட்டதுடன் இலங்கை அரசின் பங்கழிப்பு ரூபா 3,200 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 1 சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2024.12.31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான தகவல்கள் சில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2021 வருடங்களுக்காக செயல்திட்டத்தின் நிதி கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்றும் 2022 மற்றும் 2023 ஆகிய 2 வருடங்களுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயம் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
வருடத்தின் மொத்த செலவினம்			
அரச நிதி	336	271	276
வெளிநாட்டு நிதி	3,971	6,694	7,258
மொத்த சொத்துக்கள்	8,504	24,787	29,724
மொத்த பொறுப்புக்கள்	2,226	796	771
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	5,706	15,931	27,834
தேசீய நிதியீட்டல் மூலம்	571	843	1,118

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்படுவதற்கு காரணமான விடயங்களுக்கு அப்பால் செயற்த்திட்டத்துக்குரிய கடந்த 3 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் எழுப்பப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
01	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணி 2023	2023	ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான	செயற் திட்டத்தின் உயர்மட்ட குழு கலந்துரையாடலின் பின்னர் மீண்டும் இரு	2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

	யூலை 22 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டு 2024 ஒக்தோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 36 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னர் 2024 சனவரி 31 இல் உள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. எனவே, 64 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணிசமான அளவு மிகுதி பணி மீதமுள்ள ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.		நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.		தடவைகள் முற்பணத் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன் ஊழியர் எண்ணிக்கை 100 இல் இருந்து 500 வரையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அனைத்து பொருட்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் நேரடியாக மேற்பார்வை மேற்கொள்ளப்படுகின்றது.
02	கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட 87.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 145 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 50.26 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 72.89 மில்லியன் மாத்திரமே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கிய திகதியிலிருந்து 05 ஆண்டுகள் மற்றும் 8	2023	ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	கடன் நிதியானது நிர்மாண பணிகள், பொருட்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான ஐ.அ.டொலர் 129.7 மில்லியன் மற்றும் கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களுக்கான ஐ.அ.டொலர் 15.3 மில்லியன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஒதுக்கப்பட்ட ரூபா 129.7 மில்லியன் கடன் நிதியில் ரூபா 97.22 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்கள்	கடன் முடிவடையும் திகதியான 2025.06.30 ஆகும்போது கடனை முழுமையாக பயன்படுத்துவதற்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது அனைத்து பெறுகைகள் நடவடிக்கைகள் வழங்குதலையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

	மாதங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதிகள் மீது ரூபா 176 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 795,741 கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. எனவே கடன் மீதியில் 49.73 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 72.11 மில்லியன் மிகுதி செயற்திட்டக் காலப்பகுதியான 18 மாதங்களுக்குள் பயன்படுத்தப்படுவது கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது.			பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீதமுள்ள ஒப்பந்த வழங்கல் செயற்திட்ட காலப்பகுதியினுள் (2024 திசெம்பர் 31) பூர்த்தி செய்யப்படலாம். மேலும் கடன் இறுதி திகதியான 2025 யூன் 30 வரை பணவளிப்புக்களை பூர்த்தி செய்ய முடியும். எனவே, மொத்த செயற்திட்ட நிதியையும் 2025 யூன் 30 அளவில் பயன்படுத்தலாம்.	
03	2020 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு ரூபா 17 மில்லியன் கிரயத்தில் 1,098 எண்ணிக்கையான நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 1,095 புத்தகங்கள் கொள்வனவு செய்த திகதியிலிருந்து 2023 நவம்பர் 30 வரை வாசகர்களுக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.	2023	விளைவற்றிருக்காமல் செயற்திட்ட வளங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	தற்போது நூலக புத்தக கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளதுடன் புத்தக பயன்பாட்டுக்காக மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.	பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை.
04	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிர்மாணிக்கும் முக்கிய நோக்கமானது 2023 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் பீடத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதை 120 முதல் 400 வரை அதிகரிப்பதாகும். எனினும்,	2023	ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	பொறியியல் பீடத்தின் நிர்மாண பணி நடவடிக்கைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.	பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் பீடத்தை பூர்த்திசெய்வதில் தாமதம் ஏற்பட்டதால் தற்போது 180 மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகம் 2023 யூலை மற்றும் 2024 பெப்ரவரிக்கு இடையிலான தாமதமடைந்த காலப்பகுதிக்கு பொறியியல் பீடத்தை நடாத்துவதற்கான வாடகைக் கட்டிடத்திற்கான வாடகைக் கட்டணமாக ரூபா 19 மில்லியன் தொகையை செலுத்த வேண்டியிருந்தது.

5.6 இலங்கையில் தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் (TVET) தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை ஏற்படுத்தும் செயற்திட்டம் (திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மானியம்)

2018 மே 11 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (மானியம்) இற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கம் SRI(EF) 9193 இன் கீழ் ரூபா 534 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பொன்று இல்லை. செயற்திட்டம் 02 கட்டங்களின் போது நீடிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 மற்றும் 2022 என்ற 02 ஆண்டுகளுக்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2023 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்கத்தின் நிதியம்			
வெளிநாட்டு நிதியம்	137.45	321.71	880.8
மொத்த சொத்துக்கள்	-	-	-
மொத்த பொறுப்புக்கள்	-	-	-
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	50.50	219.14	559.09
உள்நாட்டு நிதியத்தின் மூலம்			

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	2021 இன் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2.6.2 செயற்பாட்டின் கீழ் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு சர்வதேச சந்தையினை அடைவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2021	எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளுக்காக நியாயமான காலமொன்று தேவையாக இருந்தமையாலும், செயற்திட்டமாக இது 2022 ஆம் ஆண்டின் போது ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.	பரிந்துரை அமுல்படுத்தப்பட வில்லை.
(ஆ)	கட்டிட நிர்மாணப் பணியகத்தால் வருடாந்தம் விநியோகிக்கப்படுகின்ற விலைகள் மற்றும் அளவுகளின் பிரகாரம் மானியம் பெறுனர்களினால் சம்ர்ப்பிக்கப்பட்ட நிர்மாண மதிப்பீடு பொருத்தமானதா என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது சாரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைமை அமுல்படுத்தப்படாமை போன்றவை மேற்கூறப்பட்ட நிர்மாணங்களின் பொதுவான	2022-3.1 –4-(c)	நிர்மாணத் திட்டத்தை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	செயற்திட்ட வழிகாட்டியின் கீழ் இவ்வாறான மெய்மையாய்வு தேவைப்படவில்லை (ADB வழங்கியிருந்த வழிகாட்டி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டி)	பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

	அவதானிப்புக்களாக இருந்தது.				
(இ)	உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தொடர்புடைய ஆவணங்களின் (TOR) (D) பிரிவின் பிரகாரம் ஆலோசனைக் கம்பனியால் வழங்கப்பட வேண்டிய பிரதான வெளியீடுகளின் ஆரம்ப அறிக்கை, வருடாந்த அறிக்கை மற்றும் ISSC இற்காக 05 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் மென்பொருள் பிரதி தவிர ஏனைய அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2022-3.1 –(6)-(b)	சரியான நேரத்தில் தொடர்புடைய ஆவணங்களின் பிரகாரம் (TOR) பிரதான வெளியீடு வழங்கப்படல் வேண்டும்.	தேவையான சகல ஆவணங்களும் மின்னஞ்சல் ஊடாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (கோவைகள் அநேகமானவை உள்ளதுடன் அவை மென்பொருள் பிரதியாக ஏற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இணங்கியமையால் இவை மின்னஞ்சல் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.
(ஈ)	விவசாய தொழில்நுட்ப பரவல் நிலையத்திற்கான முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் இணையத்தை உருவாக்குவதற்கு ரூபா 2.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், காலாவதியான மற்றும் மோசடியான கூறுவிலைகள் மற்றும் விபரக்குறிப்புக்களில் சேர்க்கப்படாத அளவுகோல்களைப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மையின்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால்	2023-3.1 –(ஏ)	சேவை வழங்குநர் வெளிப்படைத்தன்மையுடன் தெரிவுசெய்யப்பட வேண்டும்.	விவசாய தொழில்நுட்ப பரவல் நிலையத்திலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெறுகைகள் விவசாய தொழில்நுட்ப பரவல் நிலையத்தின்	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

	சேவை வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.			மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	
(உ)	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைத்தொழில் திறன்கள் மன்றத்தால் ரூபா 11.23 மில்லியன் கிரயத்தில் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையில் கற்கைநெறிகளை நிறைவு செய்யும் மாணவர்கள் மற்றும் தொழிலதிபர்களை பதிவு செய்வதன் மூலம் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் கையடக்க தொலைபேசி செயலி (mobile App) உருவாக்கப்பட்டது. எனினும், கையடக்க தொலைபேசி செயலியை அமுல்ப்படுத்துவதற்கான வசதி இல்லாததால், செயலியில் பதிவு செய்யும் மன்றம், மாணவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் பயன்பெறும் வகையில் இது தற்போது அமுல்ப்படுத்தப்படவில்லை. எனவே, மேற்படி செயலியை உருவாக்குவதற்கு ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது.	2023-3.1 –(b)	உருவாக்கப்பட்ட கையடக்க தொலைபேசி செயலியை அமுல்ப்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	ஸ்ரீ லங்கை டெலிகொம் மொபிட்டல் கம்பனியுடன் கூட்டுமுயற்சி ஏற்படுத்திக் கொள்வதற்கு சபை தீர்மானித்திருந்தது. உற்பத்தி மீளாய்வுகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிட்டல் புரோகனெக்ட் (Pro Connect) உள்ளீடு பயன்படுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கைச்சாத்திடப்பட்டது. எனினும் அவர்களின் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் குழு தற்போது ஏனைய செயற்திட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றமையினால் Pro Connect இற்கு அவர்களின் கவனம் செலுத்துதல் தாமதமடைந்திருந்ததுடன் அவர்கள் பின்னர்	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

				சபைக்கு அறிவித்திருந்தனர். அதன் விளைவாக உற்பத்தி தற்போது பயனற்றுக் காணப்பட்டது.	
(ஊ)	4.2.1.1 நடவடிக்கையின் கீழ் ரோன் (drone) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஆராய்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்திற்கு ரூபா 8.86 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2024 மே 02 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரோன் உபகரணங்கள் பயிற்சி அல்லது விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் செயற்திட்ட முன்மொழிவில் கூறப்பட்டுள்ளவாறு, செயற்படுத்துவதற்கு தெரிந்த பயிற்றுவிப்பாளர் இல்லாமையாலும், நிறுவனம் பயிற்சி நிறுவனமாக முறையாக நிறுவப்பட்டிருக்காததாலும் நிறுவனத்தில் விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், நிறுவனம் நடாத்தும் பயிற்சி வகுப்புக்கள் தொடர்பாக எந்தவொரு செயன்முன்னேற்றமும் காணப்படவில்லை.	2023-3.1 –(c)	டிரோன் உபகரணங்களை செயற்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	ஆராய்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் (IRDT) இனால் இவ் வருட மாகாணம் முழுவதும் ASSC உடன் பயிற்சி பெற்ற உறுதிப்படுத்தப்பட்ட ரோன் செயற்படுத்துனர்கள் 07 பேர் இருந்தனர். ரோன் வருடம் முழுவதும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அவை விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்காக பொருத்தமாக பயன்படுத்தப் படுகின்றது. அவ்வாறில்லையாயின் ரோன் உற்பத்தியினால் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் அவைகளஞ்சியப் படுத்தப்படுகின்றது.	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

(எ)	தொழில்முனைவோர் ஒருவருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மீற்றர் பிரகாரம் 1 மீற்றர் அகலம், 0.15 மீற்றர் தடிப்பம் மற்றும் 1207 மீற்றர் நீளம் கொண்ட செடி நாற்றுமேடைக்கான வீதி வலையமைப்பை உருவாக்குவது அவசியமாகும். எனினும், ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த அளவீட்டுத் தாளின் பிரகாரம், வீதி வலையமைப்பு 1.22 மீற்றர் அகலம், 0.15 மீற்றர் தடிப்பம் மற்றும் 719 மீற்றர் நீளம் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொழில்முனைவோரால் அமைக்கப்பட்ட நீளத்தை சரிபார்க்காமால் தொழில்முனைவோருக்கு ரூபா 3.22 மில்லியன் மொத்த மானியம் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது.	2023-3.1 –(d)	இலக்கினை அடைந்து கொள்வதை சரிபார்த்து தொழில்முனைவாருக்கு பணத்தை மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	ஏற்றுக் கொள்கின்றோம். பட்டயம் பெற்ற பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் தனியார் துறையில் ஈடுபட்டிருக்கின்ற விசேட நிபுணரின் பௌதீக மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மெய்மையாய்வு செய்வதற்காக எங்களால் தற்போது பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் அந்த விடயங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.
(ஏ)	தொழில்முனைவோர் ஒருவருக்கு 02 இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ரூபா 3.51 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதில், இலக்கு 01 இன் கீழ் NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டு உடன்படிக்கையின்	2023-3.1 –(e)	ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் NVQ சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	தற்போது எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக NVQ சான்றிதழ் விநியோகிப்பதற்கு பதிவு செய்துள்ள தரம் பெற்ற நிறுவனங்கள் காணப்படவில்லை. எனினும் சினமன் பயிற்சி	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

	பிரகாரம் TVEC/NAITA சான்றிதழ் மூலம் சரிபார்க்க வேண்டும். எனினும், NVQ 3 சான்றிதழ்களை வழங்குவதற்கு TVEC இற்கு மாத்திரமே அதிகாரம் உள்ள போதிலும் அத்தகைய சான்றிதழ்கள் தொடர்புடைய பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.				கல்வி நிறுவனம் (Cinnamon Training Academy) 2021.04.26 ஆம் திகதி வரை இந்த சான்றிதழ் விநியோகித்தல் தரத்தினை பெற்றிருந்தது. அது வரையில் அவர்கள் தரச் சான்றிதழ் பெறாதிருந்த போதிலும் அவர்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) செல்லுபடியான பதிவு காணப்பட்டது. அதனால் சினமன் பயிற்சி கல்வி நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் அடுத்த சிறந்த மாற்றுவழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.	
(ஐ)	அமைச்சுக்கான உபகரண பெறுகை உட்பட 32 சிமார்ட் வகுப்பு அறைகளை நிறுவுவதற்கு ரூபா 293.07 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 911,540 தொகை செலவிடப்பட்டிருந்தது. கிடைத்த தகவல்களின் பிரகாரம் 400 கற்றல் முகாமைத்துவ முறைமை (LMS) விரிவுரையாளர்களுக்காக ரூபா 5.67	2023-3.1 –(f)	நட்பு வகுப்பு அறையை கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களால் கற்பித்தல் முகாமைத்துவம் முறைமை (LMS) குறைவாகப் பயன்படுத்துதல் மற்றும் அதற்கு காரணமாக பயிற்சி நடைபெறாமை போன்றவைகளுக்காக இணங்குகின்றோ	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து. எனினும், 32 பயிற்சி நிலையங்களுக்கு 320 கற்றல் முகாமைத்துவ முறைமை மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.13 மில்லியன் பெறுமதியான 80 கற்றல் முகாமைத்துவ முறைமை மீதியின் ஒதுக்கீட்டை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை. மேலும், விரிவுரையாளருக்கு ஒதுக்கப்பட்ட 320 கற்றல் முகாமைத்துவ முறைமை இல், 183 கற்றல் முகாமைத்துவ முறைமை 57 சதவீதம் கல்வி நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறியவைகளுக்கு மேலதிகமாக, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட ரூபா 45.37 மில்லியன் பெறுமதியான 3,200 கற்றல் முகாமைத்துவ முறைமை இல் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 753 கற்றல் முகாமைத்துவ முறைமை மாத்திரமே கல்வி நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது துடன் விரிவுரைக்கான பயிற்சி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் ம். நிதியம் காணப்படும் போது இந்த விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி பயிற்சியினை வழங்குவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

	கற்கைநெறிகளைப் பின்பற்றும் மாணவர்களுக்கான வசதிகள் இல்லாததால் மாணவர் உரிமம் (student license) எதனையும் பயன்படுத்தியிருக்காத 16 பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றன. எனவே, ஆரம்ப செயற்திட்டத்தின் செயற்திறன் குறைந்த மட்டத்தில் இருந்தது.				
(ஒ)	செயல்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, நிறைவேற்றல் முகவரின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2023-3.2	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	உள்ளகக் கணக்காய்வு செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முகவர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	செயற்திட்டத்தின் இறுதியில் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

5.7. திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கடன்)

2014 மே 27 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கடன்) இற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கம் 3119 (SRI) (SF) மற்றும் 3120 (SRI) (SF) இன் கீழ் ரூபா 15,608 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பொன்று இல்லை. செயற்திட்டம் 02 கட்டங்களின் போது நீடிக்கப்பட்டு 2023 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 மற்றும் 2023 என்ற 02 ஆண்டுகளுக்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2022 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்கத்தின் நிதியம்			
வெளிநாட்டு நிதியம்	18,947.82	95,083	4,946.62
மொத்த சொத்துக்கள்	31,773	63,877	60,357
மொத்த பொறுப்புக்கள்	880	855	836
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	4,617.59	2,321.45	644.69
உள்நாட்டு நிதியத்தின் மூலம்			

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிப்பதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 32 மாணவர்கள் சேர்க்கப்பட்டதுடன் 12 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியைப் பூர்த்திசெய்திருந்தனர்.	2021-3.2 (a)	நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(ஆ)	தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் யூஓவீரி மற்றும் யூசிஎஸ் இன் உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்ட கல்விசார் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்க செயற்திட்டங்களிற்காக ரூபா 4 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், நிதிசார் செயன்முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 5 செயற்திட்ட பிரேரணைகள் மாத்திரம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2021-3.2 (c)	எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(இ)	DLI 02 இன் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 305 தொழிற் பயிற்சி நிலையங்களின்	2022-3.1(d)	தரமான சேவையை வழங்குவதற்கு பயிற்சி நிலையங்களின் தரத்தை தொடர்ந்து பேணுவதை	தர முகாமைத்துவ முறைமைக்குரிய DLI 02, 2020 ஆம் ஆண்டு வரையில்	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	தரத்தை மேம்படுத்துவதற்கு தர முகாமைத்துவ முறைமை (QMS/QIS) நிறுவப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 168.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகளின் பிரகாரம் பொது மற்றும் தனியார் துறைகளில் 223 பயிற்சி நிலையங்கள் தரச் சான்றிதழைப் பெற்றிருந்த போதிலும் அந்த சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 அளவில் முடிவடைந்திருந்தது. மேலும், 29 நிறுவனங்கள் மாத்திரமே பெறப்பட்ட சான்றிதழ்களை புதுப்பித்திருந்ததுடன் புதுப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 அளவில் காலாவதியாகியிருந்தது. எனவே, 2023 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி வரையிலும் பயிற்சி நிலையங்கள் தரத்தை தொடர்ந்து பேணியிருக்காதமை அவதானிக்கப்பட்டது.		கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அடையப்பட வேண்டிய இலக்குகளாக TVEC இல் பதிவு செய்த 300 பயிற்சி நிலையங்களின் தரத்தை அதிகரிக்கும் முறைமையை ஸ்தாபித்தல் ஆகும். 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் QIS முறைமை அதன் நோக்கங்களை அடைந்துள்ளது.	
(ஈ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நிர்மாணத் தகவலின் பிரகாரம் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 07 அரசாங்க	2022-3.1(e)-(iv)-(b)	எஞ்சியுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியின் சட்டமூலங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை	இலக்கம் 13/0042/539/001 என்ற அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் 2008	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப் படவில்லை.

பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுவதற்காக ரூபா 954.1 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 05 பல்கலைக்கழக கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும், கட்டுபெத்த மற்றும் பட்டன்கல பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான எந்தவொரு சட்ட ஆவணமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், 03 பல்கலைக்கழக கல்லூரிகள் பொது மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் நிறுவப்பட்டன. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் இந்தப் பல்கலைக்கழகங்கள் செயற்பாட்டு நிலையில் இருக்கவில்லை.

எடுக்கப்பட வேண்டும்.

31 ஆம் இலக்க தொழில் கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற் கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகத் திற்காக 25 கல்லூரிகளை நிர்மாணிப்பதற்கு 2013 பெப்ரவரி 01 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந் தது. அதன் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான காணிகளில் தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்பலைக் கழகங்கள் 05 இன் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. அதன் பின்னர் பட்டங்கல மற்றும் கட்டுப்பெத்த தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழக நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட து. அது முடிவடைந்த பின்னர் வட்டங்கல மாத்திரம் பல்கலைக் கழக கல்லூரியாக பயன்படுத்தப்பட்ட து. இலங்கை ஜேர்மன்

				தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்காக அவர்களின் பாட நெறிகளை நடாத்துவதற்காக CGTTI இல் ஒரு பகுதியாக கட்டுபெத்தயில் நிர்மாணிக்கப்பட்ட ஏனைய கட்டிடங்களைப் பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	
(உ)	இந்த சபை தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி முறைமையில் சரியாக சேர்க்கப்படாதமை, சபைகள் அரசாங்க நிதியில் இயங்குகின்றமை மற்றும் சுயவருமானத்தை உருவாக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காதமை, சுய-வருமானத்தை உருவாக்குவதற்கு, நிரந்தர பதவியணியினர் மற்றும் நிர்வாகம் இல்லாதமை, சபைகளுக்கு சட்ட அந்தஸ்து இல்லாதமை, முறையான கண்காணிப்பு பொறிமுறையின்மை காரணமாக மேற்படி 04 சபைகளும் எதிர்பார்த்தவாறு செற்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.	2022-3.1(f)-(iv)	இவ்வாறான சபைகளை நிறுவுவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	சபைகளின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக விரிவான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை இனங்காணப்பட்டதுடன் பொருத்தமான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் சபை சிறந்த செயலாற்றலை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகள் நடை பெறுகின்றது. சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றின்	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

				நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவ தற்காக சுயவருமானம் உழைப்பதற்கும், தேவையான பிரகாரம் பதவியணியினை ர சேர்ப்பதற்கும் மற்றும் தேவையான சட்ட ரீதியான நிலைமையினை வழங்குவதற்கும் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள் ளது. தொடர்புடைய உபாய வழிகள் அபிவிருத்தி ஆலோசனையா ளர்களினால் ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ள துடன் செயலாளர்களின் / தலைவர்களின் இறுதி இணக்கப்பாட்டின் பின்னர் அமுல்படுத்துவத ற்கு எதிர்பார்க்கப்பட் டுள்ளது.	
(ஊ)	நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிறைவேற்றல் முகவரின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக் க வில்லை.	2022-3.3	நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவு மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	எதிர்பார்க்கப்பட்ட டீஎல்ஐ இலக்கை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் கால எல்லை நீடிக்கப்பட்டதுட ன் இதன் நடவடிக்கைகளு க்காக மற்றும்	நிகழ்ச்சித்திட் டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப் பட வில்லை.

ஏனைய தொடர்ச்சியான வேலை நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பாதீடு ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு குழுக் கூட்டம் நடாத்தும் நோக்கம் மற்றும் தேவை ஏற்படுமாயின் செயற்பாடுகளுக்காக செயற்குழு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த இலக்குகளில் FLM செயற்பாடுகளுக்காக தேவையான செயற்குழு அங்கீகாரம் தற்போது பெறப்பட்டுள்ளமையால் அவ்வாறான தேவையொன்று ஏற்பட்டிருக்கவில்லை.

2017 செப்தெம்பர் 12 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 400 மாணவர்களுக்கான குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்காக 3 மாடிகளைக் கொண்ட புதிய விடுதிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 253.8 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு 2020 மே 20 இல் ரூபா 185.61

2023-3.1-(b)

	மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி 28 இல் கட்டிடத்தின் முதலாவது தளத்தை ரூபா 120.14 மில்லியன் திருத்திய மதிப்பீட்டில் பூர்த்திசெய்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.				
(எ)	நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, மின்சாரம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான பணிகளின் மோசமான முன்னேற்றம் காரணமாக, தங்கும் விடுதி கட்டிடத்தின் முதலாவது மாடியின் குடியிருப்பு வசதிகளை கணக்காய்வு திகதி வரை பயிற்சியாளர்களுக்கு வழங்க முடியாதிருந்தது.	2023-3.1-(b)-(i)	ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	மிகுதி வேலைகள் 2024 யூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு ஒப்பந்தகாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களுக்காக விடுதி வசதிகள் 2024 யூலை 03 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(ஏ)	ரூபா 4.47 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டில் பொத்துவில்லில் சமையல் கற்கைநெறிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத	2023-3.1-(c)-(i)	பயிற்சி உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்படவில்லை	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	காரணத்தினால் குறித்த கற்கைநெறி கணக்காய்வு திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. எனவே, இந்த உபகரணங்கள் விளைவற்றிருந்ததுடன் உத்தரவாதக் காலப்பகுதியும் காலாவதியாகியிருந்த து.				
(ஐ)	மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்காக அஹங்கமவில் ஏற்கனவே உள்ள ஹோட்டல் பாடசாலையை ஹோட்டலொன்றாக புனரமைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 162.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், 2024 மே 10 ஆம் திகதி வரையிலும் இத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்க வில்லை.	2023-3.1-(c)-(ii)	நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(ஒ)	அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 91.03 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 22 ஹோட்டல் அறைகள் மற்றும் இதற்காக	2023-3.1-(c)-(iii)	மேலதிக தாமதமின்றி ஹோட்டல் அறைகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6.10 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் விளைவற்றிருந்தன.				
(ஓ)	2017 இல் ரூபா 140.21 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட குச்சிவெளி ஹோட்டல் பாடசாலையின் 52 பயிலுநர்கள் தங்குவதற்கு முழு வசதிகளுடனான 12 அறைகளைக் கொண்ட இரண்டு மாடி விடுதிக் கட்டிடம் நிரந்தர நீர் விநியோகம் கட்டிடத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்ததன் காரணமாக 06 வருடங்கள் வரை விளைவற்றிருந்தது.	2023-3.1-(c)-(iv)	மேலதிக தாமதமின்றி விடுதி கட்டிடத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகளை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(ஔ)	மொனராகலை, தம்புள்ள மற்றும் லவ்லேன் பயிற்சி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் முறையே 70 சதவீதம் மற்றும் 65 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரர்களால் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த நேரத்தில் நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 142.70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், தேசிய இளைஞர் மன்றமானது ஒப்பந்தங்களை மீள	2023-3.1-(d)-(i)	மீதமுள்ள நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	லவ்லேன் பயிற்சி வகுப்பு அறைகள் கட்டிடத்தின் தரை மாடியில் வகுப்பு நடாத்தப்படுகின்றது. மேல் மாடியில் வகுப்பறைகள் நான்கின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி எற்பாடுகள் வழங்கு வதற்கு தீர்மானிக்கப்பட்டு	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	வழங்காமலும், எஞ்சிய பணிகளை 2023 யூன் 30 இற்குள் பூர்த்திசெய்யாமலும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.			ள்ளது.	
(க)	நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 535.78 மில்லியன் தொகை தேசிய இளைஞர் மன்றத்தில் உள்ள 5 கட்டிடங்களின் மேம்படுத்தல் பணிகளிற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், இது அந்தந்த நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களில் ரூபா 456.2 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.	2023-3.1-(d)-(ii)	நிர்மாணத்தின் சரியான பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	தேசிய இளைஞர் சபையின் இரத்மலானையில் செலவினம் இரு மடங்கு கணிப்பிடப்பட்டதுடன் அது ரூபா 535.78 மில்லியன் ஆக இருந்தது. எங்களின் அறிக்கையின் பிரகாரம் சரியான தொகை ரூபா 497.84 மில்லியன் ஆகும்.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(கா)	**தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரியின் நிர்மாணப் பணிகள்** நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் 36 கட்டிடங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபா 1,093.48 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும், தொடர்புடைய நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களில் இது ரூபா 711.8	2023-3.1-(e)-(i)	நிர்மாணத்தின் சரியான பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பதிலின் பிரகாரம் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 711.8 மில்லியன் ஆகும். திறன் சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அமுல் படுத்துதல் முகவர்	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.			நிறுவனங்களின் கட்டிடங்களை மறுசீரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பெறுமதி இனங்காணப்பட்டுள் ளது. கைத்தொழில் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பண்டாரவளை, ஹஸலக்க, இரத்மலானை, வவுனியா, களுத்துறை, வாரியபொல, சம்மாந்துறை, நுவரெலியா, பொலன்னறுவை, தம்புள்ளை மற்றும் மட்டக்களப்பு என்ற நிலையங்களின் பெறுமதி இருமடங்காகி இருந்ததுடன் அது ரூபா 1,093.48 மில்லியன் ஆகும்.	
(கி)	பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ள விருந்தோம்பல் முகாமைத்துவ ஆய்வுகூடத்தில் குளியலறையை அமைப்பதற்காக 2015 ஆகஸ்ட் 24 இல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 464,400 பெறுமதியிலான குளியலறை உபகரணங்கள் கணக்காய்வு திகதியான 2024 மார்ச்	2023-3.1-(f)-(i)	மேலதிக தாமதமின்றி நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	தற்போது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

	06 வரையிலும் விளைவற்றிருந்தன.				
(கீ)	இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரியினால் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளுக்குப் பொருந்தாத ரூபா 1.45 மில்லியன் பெறுமதியான 591 புத்தகங்கள் 9 வருடங்களாக விளைவற்றிருந்தன.	2023-3.1-(f)-(ii)	புத்தகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(கு)	இரத்மலானைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் தொலைக்காட்சிப் பின் தயாரிப்பு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் (TV Post Production Technology) ரூபா 423,243 பெறுமதியான 31 டேபிள் மைக்ரோபோன் இருந்த போதிலும் அவை அங்கே கற்கைநெறிகளை தொடரும் மாணவர்களிற்கு சம்பந்தமில்லாத காரணத்தால் கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 06 வரையிலும் 9 வருடங்களிற்கு மேலாக விளைவற்றிருந்தன.	2023-3.1-(f)-(iii)	உபகரணங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை.	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.
(கூ)	கற்கைநெறிகளுக்கான 40 புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய திறன் தரநியமம் (NCS) மற்றும்	2023-3.1-(f)-(iv)	தொடர்புடைய தேசிய திறன் தரநியமம் மற்றும் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை	கைத்தொழிலுக்கு தேவையான பிரகாரம் கைத்தொழிலை கோரும் போது தேசிய திறன்	நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை.

பாடத்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகளுக்கான 29 திருத்தப்பட்ட தேசிய திறன் தரநியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையில் உள்ளன. எனினும், மூன்றாம் நிலை தொழறி கல்வி ஆணைக்குழுவில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாணவர்களின் தேவைக்கேற்ப கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்படாத தாலும், அவ்வாறு அறிமுகப்படுத்தும் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு தகுதியான பயிற்றுவிப்பாளர்கள் இல்லாததாலும் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தால் நிறுவப்பட்ட தொழில் துறை திறன் சபையின் மோசமான தலையீட்டினாலும் 36 கற்கைநெறிகளை மாணவர்கள் யாரும் பின்பற்றியிருக்கவில்லை என்றும், 12 கற்கைநெறிகள் 5 முதல் 78 மாணவர்கள் வரை பின்பற்றுகிறதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எடுக்கப்பட வேண்டும்.

நியமம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. பயிற்சி பாடநெறிகளை அமுல்படுத்துவதற்கு உரிய கைத்தொழில்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் சில தேசிய திறன் நியமம் அந்த கைத்தொழிலின் விருப்பத்தின் பிரகாரம் பயன்படுத்தப்படுவதில்லை. நிர்மாணத் துறையின் திறன் ஆலோசனை சகல தடவையும் தேசிய திறன் நியமம் மற்றும் விடயப் பாடநெறி அபிவிருத்தி மற்றும் செல்லுபடியான நடைமுறைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

06. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி பிரிவு

6.1. அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம்

2016 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் கடன் உடன்படிக்கை இலக்கம் CLK-100901 இன் கீழ் ரூபா 8,354.32 மில்லியன் கடன் தொகை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 1,670.86 மில்லியன் ஆகும். செயற்திட்டம் 03 கட்டங்களில் நீடிக்கப்பட்டு 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிலைமை தொடர்பாக முக்கியமாக சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயமும் 2022 மற்றும் 2023 என்ற 02 ஆண்டுகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரசாங்கத்தின் நிதியம்	254.99	115.73	274.52
வெளிநாட்டு நிதியம்	316.73	1,005.28	281.93
மொத்த சொத்துக்கள்	1,084	2,252	3,254
மொத்த பொறுப்புக்கள்	35	78	101
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	625.57	1,773.41	1,783.14
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	275.03	390.78	665.29

அந்த முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தை சமர்ப்பிபதற்கான காரணங்களுக்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்குரிய கடந்த 03 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து எழுந்திருந்த முக்கியமான சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு மற்றும் கணக்காய்வு பந்தியுடனான தொடர்பு	தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை
(அ)	தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றிக்கை இலக்கம் 03/2022 (iii) பந்தியில் ‘‘அரைவாசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் கைவிடப்பட்டிருக்கும் போது வசதியீனத்தை குறைக்கும் வகையில் தேவையான பகுதிகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.’’ எனக் காண்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு முரணாக இந்த செயற்திட்டம் அமைச்சினால் நிறுத்தப்பட்டிருந்தது.	2023	மிகுதி வேலைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	முரண்கள் மற்றும் ஏனைய தொழில் நுட்ப பிரச்சனைகளை சரி செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது ஒப்பந்தகாரர்களின் உரித்தை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது.	காணப்பட்ட பொருளாதார நிலைமையின் பிரகாரம் மற்றும் செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்கு வேண்டிய ஏற்பட்டிருந்த செயற் திட்டத்தின் பணிகளின் அளவு குறைவாக காண்பிப்பதற்கும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.
(ஆ)	கடன் வசதிகள் உடன்படிக்கையின் படி 2021 இன் இறுதி வரையில் செயற்திட்டத்தில் ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியான 12 பொதிகள் பெறுகை	2023	செயற்திட்ட கால எல்லையில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	மிகுதி வேலைகள் அரசாங்கத்தால் கடன் மீள்கட்டமைப்பு செயற்பாடுகளின் பின்னர் தீர்மானிக்கப்படல்	செயற்திட்டத்தின் அடிப்படையாக 2023 செப்தெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும்

செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். எனினும் ரூபா 5,025 மில்லியன் பெறுமதியான 07 பொதிகள் பெறுகை நடைமுறைகள் பெறுகை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.	வேண்டும்.	காணப்பட்ட பொருளாதார நெருக்கடியான நிலைமையின் அடிப்படையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்ததுடன் அதில் 04 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவை செயற்படு நிலையில் காணப்படுகின்றது. மேலும் தெற்கு பல்நோக்கு போக்குவரத்து துறையின் செயற்திட்டம் (SMTC) தற்போது செயற்படுத்தப்படுகின்றது. மிகுதி 07 தொகுதிகள் அரசாங்கத்தின் ஆலோசனையின் பிரகாரம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

(இ)	செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 12 பொதிகளில் ரூபா 2,123 மில்லியன் பெறுமதியான 05 பொதிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி 02 பொதிகள் மாத்திரமே முடிவடைந்திருந்தது. இலக்கம் 3 மற்றும் 4 பொதிகள் 2023 ஆம் ஆண்டின் போது 04 முதல் 07 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவை பிரதானமாக தாக்கமளித்த நலிவுகள் நிர்மாண மேற்பார்வை மற்றும் திட்டமிடலில் உள்ள நலிவுகளினால் ஆகும்.	2023-3.1(ஆ)	வேலைகளை விரைவுபடுத்துவதற்காக சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பொருளாதார நெருக்கடியில் பொருட்கள் காணப்படாமை மற்றும் ஆரம்ப திட்டமிடல் மற்றும் திட்டமிடல்களை வடிவமைத்தல் ஆலோசனையில் உள்ள நலிவுகளினால் தாமதத்திற்கு பிரதான காரணமாகும்.	இந்த 04 தொகுதிகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.
காரணத்தால், மேற்படி செலவினம் பயனற்ற செலவினமாகக் கருதப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 23 இல் பணியை பூர்த்தி செய்யாமல் மிகுதிக் கொடுப்பனவை செலுத்துவதற்காக பெறுகைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

8.4 உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (LGESP)

2017.04.12 இல் ஆரம்பிக்கப்பட்ட உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டதிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கம் 3431 இன் கீழ் ரூபா 8,700 மில்லியன் தொகை பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கி இருந்ததுடன் இலங்கைக அரசின் பங்களிப்பு ரூபா 1,071.47 மில்லியன் ஆகும். செயற்திட்டம் நான்கு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டு 2024.01.31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான தகவல்கள் சில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய 3 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	**2021**	**2022**	**2023**
	ரூபா மில்லியன	**ரூபா மில்லியன**	**ரூபா மில்லியன**
வருடத்தின் மொத்த செலவினம்			
அரச நிதி	400	195	285.06
வெளிநாட்டு நிதி	2259.3	1,664.55	2,175.35
மொத்த சொத்துக்கள்	18,364	40,407	39,184
மொத்த பொறுப்புக்கள்	18,364	40,407	39,184
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	2,140	1,697.08	2530.47
தேசிய நிதியீட்டல் மூலம்	400	195	258.42

இதற்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கு உரிய கடந்த 3 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் எழுந்த முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சில கீழ்கண்டவாறு காணப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
(அ)	சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருளை நிறுவிய 07 உள்ளூராட்சி சபைகளில் 05 இன் கணக்காய்வுகளின் போது மென்பொருள் நிறுவலின் போது பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களின் தரவுகள் மாத்திரமே மென்பொருளின் தரவுத்தள முறைமையில் காணப்பட்டதுடன் அந்த தரவுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், அந்தத் தரவைப் பயன்படுத்தி சொத்து முகாமைத்துவத்திற்கான முடிவுகளை எடுக்கக்கூடிய எந்தவொரு தகவலையும் இந்த மென்பொருள் மூலம் தயாரித்து பயனருக்குக் கிடைக்கச் செய்ய முடியாதுள்ளமையும் உள்ளூராட்சி சபைகளால் மென்பொருளைப் பயன்படுத்தாமல் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எக்செல் தாள்கள் பயன்படுத்தப்படுகின்றதும் அவதானிக்கப்பட்டமையினால்	2022/ 2023	செயற்திட்ட அட்டவணையின் போது மேம்பாடுகளைச் செய்வதற்கும் அதன் பின்னர் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி போன்றதொடர்ச்சியான செயன்முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.	தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளதால், அதை நாளதுவரையாக்கிய நிலையில் வைத்திருப்பது சபையின் பொறுப்பாகும்.	பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

	ஐ.அ.டொலர் 133,747.70 கிரயத்தில் பயனற்ற மென்பொருள் நிறுவப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.				
(ஆ)	தொழில்நுட்ப கணக்காய்வுக்காக ஒரு வருடத்துக்கு பொறியியலாளர் ஒருவர் தனியாள் ஆலோசகராக தெரிவுசெய்யப்பட்டார். அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வு ஆலேசாகர் என்பவர்களால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் இறுதி அறிக்கையில் விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை பதிவு செய்ய வேண்டும். எனினும், மேற்குறிப்பிட்ட அறிக்கையில் எவ்வித பிரதான விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இதனை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகருக்கு ரூபா 12.47 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளன.	2021	கொடுப்பனவை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	ஆலோசகரினாள் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த அறிக்கைகளில் அந்த பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவரிடம் எதிர்ப்பார்க்கப்படுவது Technical Audit ஆலோசனை என்பதுடன் அவர் TOR இன் பிரகாரம் அவ்வப்போதைய பரிந்துரைகளின் ஊடாக செயற்திட்டத்தை செய்வதற்காக சீர் செய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்கிட்டங்கள் என்பதாக.	பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

8.5 பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் - (கூறு 1 – மாகாண பகுதி) (GEM)

2018 (ஆகஸ்ட் 30) இல் ஆரம்பிக்கப்பட்ட பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (கூறு 1 – மாகான பகுதி) இற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் உடன்படிக்கை இலக்கம் 6228LK இன் கீழ் ரூபா 15,505 மில்லியன் தொகை பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கி இருந்தது. செயற்திட்டம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டு 2025 யூன் 30 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான தகவல்கள் சில கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2021 மற்றும் 2023 ஆகிய 2 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதி கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் வருடத்தில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன
வருடத்தின் மொத்த செலவினம்	-	-	-
அரச நிதி			
வெளிநாட்டு நிதி	1,600	2,673	3,614
மொத்த சொத்துக்கள்	2,413	5,083	8,697
மொத்த பொறுப்புக்கள்	2,413	5,083	8,697
மொத்த நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	2,010.1	2,670.23	3,613.7
தேசிய நிதியீட்டல் மூலம்	-	-	-

இதற்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்கு உரிய கடந்த 3 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் எழுந்த முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சில கீழ்கண்டவாறு காணப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
(அ)	**வடமேல் மாகாணம்** பொதுக் கல்வி நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின கீழ் வடமேல் மாகாணத்தின் கணிதக் கற்றல் மற்றும் கணிதச் செயற்பாடுகளை மேம்படுத்தலுக்காக ரூபா 3.7 மில்லியன் பெறுமதியான 156 (Trapezoid) மேசைகள் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இந்த மேசைகள் அந்த கணித செயற்பாடுகளுக்கு ஏற்ற மேசைகள் அல்லாமல் சாதாரண மேசைகளாக அவதானிக்கப்பட்டமையால் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப கணித அறிவை வளர்த்துக் கொள்வதற்கு வழங்கப்படும் உலக வங்கியின் கடன் விளைவற்றவாறு பயன்படுத்தப்படமை அவதானிக்கப்பட்டது.	2022	கொள்வனவு செய்யும் போது தேவைப்பாடு தொடர்பாக கருத்தில் வேண்டும்.	கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது தேவை தொடர்பானவற்றில் கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும் என உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நிதியம் விளைவற்று பயன்படுத்தப்பட்டுள்ளது.
(ஆ)	பொதுக் கல்வி முறைமையின் தரத்தை உயர்த்துவதும், நிர்வாகத்தை வலுப்படுத்துவதுமாக இச் செயற்திட்டத்தின் நோக்கங்களும்	2022/ 2023	மேற்கொள்ளப்படும் செலவினங்கள் செயற்திட்ட DLI களுடன் இணங்குதல் வேண்டும்.	பாடசாலைகளில் நூலகங்கள், விவசாய பிரிவுகள், விளையாட்டுப் பிரிவுகள், வீட்டு விஞ்ஞான பிரிவுகள்	DLI இக்கு இணங்காத செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

	இலக்குகளும் உள்ள போதிலும், வடமேல் மாகாணத்தின் விவசாய உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், வீட்டு விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் அழகியல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 முதல் 2023 வரை ரூபா 31 மில்லியன் தொகை செலவிடப்பட்டது.			போன்றவற்றுக்கு ஏற்பாடுகள் செய்வதன் மூலம் ‘‘மொத்தப் பாடசாலை தர உத்தரவாதம் செய்வதின்’’ கீழ் DLI இலக்கிடப்படுத்தி இப்பனியை மேற்கொள்ளப்பட்டதாக.	
(இ)	மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2023 ஒக்தோபர் 25 இல் மன்னார் வலயக் கல்வி அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்ட 10 செயற்பாட்டு மேசை தொகுதிகளும் 2024 மார்ச் 22 இல் வழங்கப்பட்ட 121 ஆசிரியர் கதிரைகளும் தொழில்நுட்ப விபரக்குறிப்பில் உள்ளவாறு சீர்செய்யப்படாததாலும், பல்வேறு குறைபாடுகளாலும் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காது வலயக் கல்வி அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2023	தொழில்நுட்ப விபரக்குறிப்புகளுடன் இணங்காத தளபாடங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாதுடன், மேலும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளின் பிரகாரம் தளபாடங்கள் மறுசீரமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.	விலை மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப விபரக் குறிப்புகள் தொடர்பாக திருப்தி அடையாததன் காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மாகாண கல்வி திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விநியோகத்தருக்கும் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆசிரிய கதிரை விநியோகத்தரான லிங்கம்	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை

				வெல்டிங் நிறுவனத்தின் (Lingam Weldings Ltd) செயலாற்றல் பிணைமுறி பணமாக்கப்பட்டு வருமானத்துக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	வடமேல் மாகாணத்தில் உள்ள 04 பாடசாலைகளில் தரம் 10 மற்றும் 11 இல் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் பெற்ற சராசரி புள்ளிகள் 41 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளதுடன் அவர்களால் செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்டவாறு முதல் இரண்டு வழங்கல் இணைப்பு குறிகாட்டிகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது அவதானிக்கப்பட்டது.	2023	செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை என்பது தொடர்பாக அறிக்கை படுத்தப்பட்டிருக்கவில்லை.	பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(உ)	ஆங்கில மொழிக் கல்வியின் மேம்பாட்டின் கீழ் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தென் மாகாணத்தில் 58 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கூறின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள்	2022	-மேற்படி-	-மேற்படி-	--மேற்படி-

	மாணவர்களின் செயலாற்றல் மட்டம் குறைந்தபட்சம் 60 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும், 07 வலய அலுவலகங்களின் இறுதிப் பருவத் தேர்வில் ஆங்கில மொழிக்கான மதிப்பெண்களை ஒப்பிடும் போது 8 மற்றும் 9 ஆம் தரத்தின் 6243 மற்றும் 6540 மாணவர்களின் சராசரி மதிப்பெண்கள் முறையே 37.37 மற்றும் 37.83 சதவீதமாகும்.				
(ஊ)	கணிதக் கல்வியை மேம்படுத்துதலின் கீழ் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தென் மாகாணத்தில் 38 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மாணவர்களின் செயலாற்றல் மட்டம் குறைந்தபட்சம் 60 சதவீதமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 08 வலய அலுவலகங்களின் இறுதித் தேர்வில் கணிதப் பாடத்திற்குப் பெற்ற மதிப்பெண்களை ஒப்பிடும் போது, 8 மற்றும் 9 ஆம் தரத்தின் 4826 மற்றும் 5090 கணிதப் பாடத்திற்கு மாணவர்களினால் பெறப்பட்ட சராசரி	2022	-மேற்படி-	-மேற்படி-	-மேற்படி-

மதிப்பெண்கள்
முறையே 47.97
சதவீதம் மற்றும்
44.38 சதவீதமாகும்.

09. திறைசேரி மற்றும் அரச கடன் பிரிவு

9.1 பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான செயற்திட்டம்

2022 மே 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான செயற்திட்டத்திற்கு உலக வங்கியானது கடன் ஒப்பந்தம் இலக்கம் 9290 – டுமு இன் கீழ் ரூபா 108,062 மில்லியன் கடன் தொகையை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. இந் நீகழ்ச்சித்திட்டமானது ஒரு சந்தர்ப்பத்தில் நீடிக்கட்டிருந்துடன் 2024 மே 09 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான சில முக்கியமான தகவல்கள் பின்வருமாறு, மேலும் அத்தகைய 02 ஆண்டுகளுக்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழிஅற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு	-	-
அரசாங்க நிதிகள்		
வெளிநாட்டு நிதிகள்	99,903	12,642
மொத்தச் சொத்துக்கள்	101இ800	112இ653
மொத்தப் பொறுப்புக்கள்	-	-
மொத்த நிதி	101,800	112,653
வெளிநாட்டு நிதிகள் ஊடாக	101,800	112,653
உள்நாட்டு நிதிகள் ஊடாக	-	-

இதற்கு மேலதிகமாக, செயற்திட்டத்துடன் தொடர்புடைய முன்னைய 2 வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழும் பல முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மிகை மதிப்பீட்டின் காரணமாக எஞ்சியிருந்த ரூபா 1,096 மில்லியன் மற்றும் ரூபா 93 மில்லியன் 2022 டிசம்பர் 29 மற்றும் 2023 ஏப்ரல் 18 ஆகிய திகதிகளில் முறையே 4 மாதங்கள் மற்றும் 8 மாதங்கள் தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.	2022	திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சரியான தரவுகளைப் பயன்படுத்தி நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும்.	அவதானிப்புடன் உடன்பட்டனர்.	இதற்காக சரியான தரவு முறைமையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதுடன், தற்போதுள்ள தரவு முறைமையை மேம்படுத்துவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதனை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ஐ.அ.டொலர் 325 மில்லியனிற்கு சமமான ரூபா 108,225 மில்லியன் ஆகும், மேலும் அத்தகைய தொகை 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளுக்காகும். மீளாய்வு ஆண்டிற்குள், கருத்திட்டத்தின் மொத்த நிதி பயன்பாடு ஐ.அ.டொலர் 274.37 மில்லியனிற்கு சமமான ரூபா 100		அனைத்து இலக்குகளையும் எதிர்பார்த்தபடி நிறைவேற்றுவதற்கும், ஏற்பாடுகளை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	உடன்பட்டனர்.	2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு அது அவ்வாறு இருந்தபோதிலும், 2023.12.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் மொத்த செலவு ஐ.அ.டொலர் 309.89 மில்லியனிற்கு சமமான ரூபா 112,545.41 மில்லியன் ஆனதுடன் இது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் 95 சதவீதமாகும். மேலும், செயற்திட்டம்

	மில்லியன் ஆகும், இது கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் 84 சதவீதமாகும்.			தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட அனைத்து இலக்குகளையும் நிறைவேற்றும் பொருட்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு காண்பிக்கப்பட்டது.
(இ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அரச படுகடன் முகாமைத்துவ முறைமைக்கு இணங்க, ஐ.அ.டொலர் 6,934.5 இற்கு சமமான ரூபா 2.26 மில்லியன் சிக்கனமற்ற வகையில் கடன் வழங்கும் முகவராண்மைக்கு கடன் வழங்குவதற்கான ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.	உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (ஐஊனீ) கீழ், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட திடீர் நிலைமை காரணமாக இத்திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூக ஸ்திரத்தன்மையை மீண்டும் நிலைநாட்டும் நோக்குடன் உள்ளடங்கிய இணைப்பு அபிவிருத்திக் செயற்திட்டத்தை	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்தி திட்டத்திற்கு (ஐஊனீ) ஒப்படைப்பு கட்டணம் 679,985.04 அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒப்படைப்பு கட்டணம் 6,934.5 அமெரிக்க டொலர்கள் (ரூபா 2.26 மில்லியன்) என மதிப்பிட முடியும். இது திட்டத்திற்கான

				செயற்படுத்துவதன் மூலம் மீண்டும் 325 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்படி, ஒட்டுமொத்த ஐஊனீ க்கான கணக்காய்வு அவதானிப்பில் (போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டம் உட்பட) 679,985.04 அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	மொத்த ஒப்படைப்பு கட்டணத்தில் 1 சதவீதமாகும்.
(ஈ)	2023 ஆம் ஆண்டுக்காக செயற்திட்டத்திற்குத் தேவையான நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து ஒதுக்கப்பட்டிருக்காத துடன் ரூபா 12,642 மில்லியன் மொத்த நிதியேற்பாடு குறைநிரப்பு ஒதுக்கீடு மற்றும் நி.பி. 66 மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	2023	செயற்திட்டங்களின் நோக்கங்களை வினைத்திறனாக நிறைவேற்றும் வகையில் பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.	வழங்குனரால் 27,987.02 மெட்ரிக் தொன் உரம் வழங்கப்பட்ட போதிலும், லைவன் நியூட்ரிசன் தனியார் நிறுவனம் 2022 டிசம்பர் 22 ஆம் திகதி துறைமுகத்தை அடைந்திருந்ததுடன், அந்த விநியோகம் தொடர்பான கொடுப்பனவை 2023 ஜனவரி 03 ஆம் திகதி உலக வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது. எனவே, 2023 ஆம் ஆண்டில் அத்தகைய செலவினங்களுக்க	தேவையான ஏற்பாடுகளைச் செய்த பின்னர், அது 31.12.2023 அன்று நிதிக் கூற்றுக்களில் துல்லியமாக கணக்கிடப்பட்டது.

			ான ஏற்பாடுகளை ஒதுக்க வேண்டும். மேலும், உர இறக்குமதி செய்யப்பட்டதிலிருந்து திட்டமிட்டபடி 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படாததால், மீதமுள்ள உரத்தை 2023 இல் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. எனவே, துணை மதிப்பீடுகள் மற்றும் நி.பி. 66 ஆகியவற்றிலிருந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.	
(உ)	இச் செயற்திட்டத்தின் கீழ் யூரியா உரம் கொள்வனவு செய்வதற்கு ஐ.அ.டொலர் 110 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து 2023 திசெம்பர் 31 வரை ஐ.அ.டொலர் 100 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.	ஒதுக்கப்பட்ட நிதிகளை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	உடன்பட்டனர்.	31.12.2023 ஆம் திகதியில் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட செலவினம் 110.00 அமெரிக்க டொலரானதுடன் பயன்படுத்தப்பட்ட செலவினம் 100.13 அமெரிக்க டொலர்களாகும். அதன்படி, அன்றைய தினத்தில் 91 சதவீத செயலாற்றல் ஏற்பட்டுள்ளது. எஞ்சிய 10 மில்லியன் அமெரிக்க டொலர் ஐ.சி.டி.பி.யிடம் (ஐஊனூ) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஊ)	இலங்கை மத்திய வங்கியால் பேணப்படும் செயற்திட்டத்தின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,698 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5,226,053 செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் கடன் வழங்கும் முகவரிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	ஒதுக்கப்பட்ட நிதிகளை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	உடன்பட்டனர். அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்கான மீதமுள்ள நிதி, உண்மையான ஐஊனூ செயற்திட்டத்திற்கு மீளளிப்பதற்கு உலக வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.	இச் செயற்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு கூறின் கீழ் இந்த கணக்கின் மூலம் மட்டுமே பயனாளிகளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதால், அத்தகைய கூறு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் வேண்டுகோளுக்கு இணங்க, 18.04.2023 அன்று கணக்கு மூடப்பட்டது. உரம் மற்றும் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு நேரடி கட்டண முறை பயன்படுத்தப்பட்டது.
(எ)	செயற்திட்டத்தின் கீழ் காசு மானியங்களை (சமுர்த்தி, முதியோர், சிறுநீரக நோய், ஊனமுற்றோர் படிகள்) வழங்குவதற்கு ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் இருந்து 2023 திசெம்பர் 31 அளவில் ஐ.அ.டொலர் 140 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி காசு மானியங்கள் தொடர்பான	ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் சரியான நபர்களுக்கு நிதி மானியங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இச்செயற்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கொடுப்பனவு சமுர்த்தி வங்கியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், பயனாளிகளின் பட்டியல்கள் உட்பட அனைத்து கொடுப்பனவு தகவல்களும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் முகவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சமுர்த்தி	சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கிகள் என்பவற்றினால் செயற்திட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களாக, அவ்வாறான ஆவணங்களை பேணுமாறு இத் திணைக்களம் பல தடவைகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

	பயனாளிகள் பட்டியல் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		வங்கியால் பேணப்பட வேண்டும்.	
(ஏ)	விலைப்பட்டியல்களின் பிரகாரம், 2022.்.23 ஆம் ஆண்டு பெரும்போகம் மற்றும் 2023 ஆம் ஆண்டு யால பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக மொத்தம் 137,400 மெற்றிக் தொண் யூரியா உரம் கொழும்பு கொமர்ஷல் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட் மற்றும் லங்கா பேர்ட்டிலைசர் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு வழங்கிய தகவலின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தின் அளவு 137,848 மெற்றிக் தொண் ஆகும். அதன் பிரகாரம் யூரியா உரத்தில் 448 மெற்றிக் தொண்கள் சரிபார்க்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	சரியான தகவலைத் தெளிவுபடுத்துவதற்கும், எதிர்பார்த்தவாறு விநியோகம் இடம்பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு அந்த உர விநியோகம் தொடர்பான உண்மைகளை 2023 நவம்பர் 22 இல் நடைபெற்ற கூட்ட கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமும் வுழுனு கடித இல. எஸ்எம்எவ்ஐ.்.3.்.டி .்.06.்.08 உலக இல. எஸ்எம்எவ்ஐ.்.3.்.டி .்.06.்.08 உலக வங்கி ஏழட ஏ இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் 2023 நவம்பர் 29 ஆம் திகதிய ரீஓ.்.எஸ்எல்ரூரீஜீ.்.01.்.37.்.02 ஆம் இலக்க கடிதம் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு எமது திணைக்களத்திற்கான பிரதியுடன் சமர்ப்பித்துள்ளது. அதன் பிரகாரம் இச் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட	குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்காக சரியான தகவல்களை உடனடியாக வழங்குமாறு கமத்தொழில் அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
(ஐ)	137,848 மெற்றிக் தொண் யூரியா உரங்கள்	சரியான தகவலைத் தெளிவுபடுத்துவதற்		

வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவால் 123,540 மெற்றிக் தொண் மாத்திரமே உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 14,308 மெற்றிக் தொண் யூரியா உரங்களின் சீரற்ற.˙. சரிபார்க்கப்படாத விநியோகம் அவதானிக்கப்பட்டது. மேலும், உர விநியோகம் தொடர்பான பயனாளிகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றிருக்க வில்லை.

கும், எதிர்பார்த்தவாறு விநியோகம் இடம்பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

137,848.33 மெற்றிக் தொண் யூரியாவில் 118,872.18 மெற்றிக் தொண் யூரியா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது . மேலும், விவசாயிகளுக்கு 18,976.15 மெற்றிக் தொண் மிகுதி தொகையை வழங்குவது குறித்த தகவல்களை வழங்குமாறு இத் திணைக்களம் கோரியுள்ளது. மேலும், 137,848.26 மெற்றிக் தொண் மொத்த தொகையில் 123,540.785 மெற்றிக் தொண் யூரியா விநியோகம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் இந்தத் திணைக்களத்திற்க ான பிரதியுடன் ஏற்கனவே உலக வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள் ளதுடன், மீதமுள்ள 14,307.255 மெற்றிக் தொண்களுக்கான தகவல்கள் 2024 ஜூன் 18 ஆம் திகதிய என்பி.˙.சீஈஆர்எஸ்.˙. 2.˙.2022.˙.ஏ ஜீஆர்ஜ ஆம் இலக்க எனது கடிதம் மூலம் கோரப்பட்டது.

9.2 உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டம்

2022 செப்தம்பர் 16 திகதி ஆரம்பிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கங்கள் 4,205 எஸ்ஆர்ஐ மற்றும் நன்கொடை இலக்கம் 9229 எஸ்ஆர்ஐ இன் கீழ் ரூபா 74,091 மில்லியனிற்கான தொகையொன்று வழங்குவதற்கு இணங்கியிருந்தது. செயற்திட்டம் ஒரு சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2024 ஆகஸ்ட் 31 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2022 மற்றும் 2023 ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமைகள் தொடர்பான சில முக்கிய தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன், 2022 மற்றும் 2023 ஆகிய 02 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பளியற்ற அபிப்பிராயம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	**2022**	**2023**
	ரூபா மில்லியன்	**ரூபா மில்லியன்**
ஆண்டிற்கொன மொத்த செலவு		
அரசாங்க நிதியம்	-	-
வெளிநாட்டு நிதியம்	52,899	14,424
மொத்தச் சொத்துக்கள்	68,403	67,567
மொத்தப் பொறுப்புக்கள்	5,872	28
மொத்த நிதியம்		
வெளிநாட்டு கடன் / நன்கொடை மூலம்	62,508	67,539
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	-	-

இந்த கணக்காய்வு அபிப்பிராயம் சமர்ப்பிப்பதற்கான காரணங்கள் தவிர செயற்திட்டம் தொடர்பாக கடந்த 02 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைளின் மூலம் எழுந்திருந்த சில முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை
(அ)	சமூர்த்தி காத்திருக்கும் பதிவேட்டு நலன் பெறுவோருக்காக ஒரு நபருக்கு ரூபா 5,000 வீதம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி செப்தம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் ஒரு நபருக்கு ரூபா 5,000 தொகையை விட குறைவான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. நலன் பெறுவோருக்கு அவ்வாறு குறைவாக செலுத்தப்பட்டவைகளின் கூட்டுத் தொகை ரூபா 187 மில்லியன் தொகையாக காணப்பட்டது.	2022	அங்கீகரிக்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	சமூர்த்தி காத்திருக்கும் பட்டியல் இன் கீழ் ஒரு நலன் பெறுவோருக்கு 2022 செப்தம்பர் மாதத்தில் ரூபா 4,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது, 2022 ஒக்தோபர் மாதத்தில் ஒரு நலன் பெறுவோருக்கு ரூபா 3,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.	கொடுப்பனவுக்காக வழங்கப்பட்டிருந்த அறிவுரைகள் மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளை கடைபிடிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
(ஆ)	2022 ஆண்டிற்காக செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு அ.டொ. 203.36 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், 2022 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த உரிய		எதிர்பார்த்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியத்தை உச்ச மட்ட அளவில்	இணங்கப்பட்டிருந்தது.	2024 ஆண்டிறுதியில் செயற்திட்டத்திற்குரிய மதிப்பீட்டு மொத்த கிரயம் அ.டொ. 203.36 தொகையாக காணப்பட்டதுடன், அதற்குரிய மொத்தச்

	செயற்பாடுகளுக்காக அ.டொ. 172.12 மில்லியனிற்கான ஏற்பாடுகளும் அதில் அடங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 55,930 மில்லியன் தொகைக்கு சமமான அ.டொ. 153.7 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அது 2022 ஆண்டிற்கான மதிப்பீட்டுக் கிரயத்தின் 84 சதவீதமாக இருந்தது.	பயன்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.		செலவுகள் அ.டொ. 191.78 தொகை என அறிவிக்கப்பட்டிருந்தது. கிரயத்தின் 94% ஆகும். மேலும், செயற்திட்டத்திற்குரிய அனைத்து எதிர்பார்த்த இலக்குகளையும் அடைந்துகொள்ளக் கூடியவாறு 2024.04.30 திகதிய 24/0861/604/097 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய 2024.05.22 திகதிய தீர்மானத்தின் மூலம் செயற்திட்ட காலம் 2026 ஆகஸ்ட் வரை நீடிக்கப்பட்டுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுப்பதன் ஊடாக ஏற்பாட்டு நிதியத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கான இயலுமை காட்டப்பட்டுள்ளது.
(இ)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி கர்ப்பிணித் தாய்மார்களுக்காக போசாக்குள்ள உணவு வழங்குதல் மற்றும் பால்ஊட்டும் தாய்மாருக்கு மற்றும் இரண்டு வருடங்களுக்கு	எதிர்பார்த்தவாறு அனைத்து இலக்குகளை அடைவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.	2022 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் சமூர்த்தி வங்கியில் கர்ப்பிணித் தாய்மாரின் புதிய வங்கிக் கணக்கு ஆரம்பித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் மீதியான ஏற்பாடுகளை வேறு செலவுத்	இந்த ஆக்கக்கூறிற்காக கணக்குகள் ஆரம்பிக்கப்பட்ட தாய்மார்கள் 153,320 தொகைக்காக 2023.12.31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா

	குறைவான குழந்தைகளுக்கு போசாக்கு கொடுப்பனவு வழங்குதல் 2022 ஆண்டில் வெளிநாட்டுக் கடன் நிதியளிப்பின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 2,650 மில்லியனிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்தப் பண ஏற்பாடு இந்த செயற்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தாமல் நி.பி. 66 இன் மூலம் வேறு செலவு விடயம் ஒன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது.			தலைப்புக்கு மாற்றப்பட்டது. மேலும், வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், சுற்றறிக்கையின் படி இனங்காணப்பட்ட நலன் பெறுவோருக்காக வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டதுடன், கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	1,533,200,000 தொகையாகும்.
(ஈ)	2023 ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் படி செயற்திட்டத்தின் கருமங்களை நிறைவேற்றுவதற்கான 03 செலவு விடயங்களின் கீழ் ரூபா 8,578 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 7,119 மில்லியன் தொகையாக காணப்பட்டது. இந்த பண	2023	செயற்திட்டத்தின் குறிக்கோள்களை செயற்திறனுடன் நிறைவேற்றுவதற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் உரிய முறையில் ஒதுக்கப்பட வேண்டும்.	விவசாயிகளின் மற்றும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்தி அலுவல்களுக்காக மற்றும் CRM மற்றும் Geogovia தகவல் முறைமையை முன்னேற்றுவதற்காக உதவி வழங்குவதற்காக 2023 பாதீட்டின் மூலம் ரூபா 8,577.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.	செயற்படுத்தும் நிறுவனங்களின் வேண்டுகோள் மற்றும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் செயற்படுத்தும் திட்டத்தின் படி ஏற்பாடுகள் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்தக் கருமங்கள் செயற்படுத்தப்படாமையால் சேமிப்புக்கள் ஏற்படுகின்றன.

	மாற்றங்களின் போது செயற்திட்டத்தின் செலவு விடயங்களின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 4,208 மில்லியன் தொகையும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டி ருந்த ஏனைய செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 2,911 மில்லியன் தொகையும் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டி ருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் அலுவல்களை செயற்படுத்துவதற்க ாக யதார்த்த ரீதியான பாதீட்டு மதிப்பீடு தயாரித்திருக்கவில் லை.		
(உ)	கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிக்கைகளின் படி, 2022 திசெம்பர் முதல் 2023 ஜூன் வரையான காலப் பகுதியில் 1,039,961 விவசாயிகளிடையே ரூபா 7,424 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த து. எவ்வாறாயினும், செயற்திட்ட அறிக்கைகளின் படி	சரியான எண்ணிக்கைக ள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு விவசாயிகளின் எண்ணிக்கைகளில் முரண்பாடொன்று காணப்படுகின்றமை யால் கமநல சேவைத் திணைக்களத்தின் (DAD) ஆணையாளர் நாயகத்தின் மூலம் கமநல அபிவிருத்தித்	இங்கு குறிப்பிட்டுள்ளவா று விவசாயிகளின் எண்ணிக்கையில் இணக்கமின்மையெ ான்று காணப்படுகின்றமை யால் அது தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் மூலம் அதன் பிரதான நிதி

	உதவிகள் வழங்கப்பட்டிருந்தது 1,035,218 விவசாயிகளுக்கு மாத்திரமே. அதன்படி, 4,743 விவசாயிகளுக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.		திணைக்களத்தின் (DAD) பிரதான நிதி உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேவையான தகவல்கள் கிடைத்த பின்னர், எதிர் காலத்தில் அறிவிக்கப்படும்.	உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்துடன், அதன்படி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 7/5/8-330-01 இலக்கம் மற்றும் 2023.08.19 திகதிய கடிதத்தின் மூலம் மொத்த நலன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 1,039,961 தொகையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
(ஊ)	இந்த செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து வழங்கியிருந்த அ.டொ. 200 மில்லியன் தொகைக்கு மேலதிகமாக JFPR இனால ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக குறிப்பிட்ட செயற்திட்ட செயற்பாடுகளின் நிதியளிப்புக்கான அ.டொ. 3 மில்லியன் நன்கொடை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. 2023 ஆண்டிற்காக அந்த நன்கொடையில் அ.டொ. 0.1902 மில்லியன் எனப்படும் ரூபா 68.36 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது	எதிர்பார்த்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட நன்கொடைகளை ஆக்கபூர்வமாக முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும்.	பதிலளிக்கப்படவில்லை.	JFPR மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக குறிப்பிட்ட செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு நிதியளிப்புக்காக 2024 ஆண்டிற்காக அந்த நன்கொடையின் ரூபா 443.56 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. 2024 ஆண்டின் போது அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 277.35 மில்லியன் தொகையாகும். அது 63% ஆகும். அதேபோல் செயற்திட்டத்திற்குரிய அனைத்து எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடியவாறு செயற்திட்டத்தின்

	. எவ்வாறாயினும், 2023 ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது அ.டொ. 0.09 மில்லியன் தொகை எனப்படும் ரூபா 33.57 மில்லியன் தொகை ஆகிய 47 சதவீதம் மாத்திரமே.			காலம் நீடிக்கப்பட்டிருந்தது
(எ)	வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் அரச கடன் கணக்கீட்டு முறைமையின் படி நிதியம் பயன்படுத்தப்படாமையால் ரூபா 15 மில்லியனிற்கு சமமான அ.டொ. 45,801.27 தொகை 2024 மார்ச் 15 திகதி கடன் வழங்கப்பட்ட முகவராண்மைக்கு கடப்பாட்டுக் கட்டணம் என செலுத்தப்பட்டிருந்தது.	ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையை விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இணங்குகின்றேன்.	2024.12.31 திகதி அளவில் செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டுக் கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் அ.டொ. 12.19 மில்லியன் தொகை முழுமையாக செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.
(ஏ)	ADB கடன் மீளாய்வாண்டின் போது சமூக பாதுகாப்பு முறைமைகளில் DSD இன் CRM மற்றும் DAD இன் Geogoviya ஆக்கபூர்வத் தன்மையை மற்றும் செயற்திறனை முன்னேற்றுவதற்காக அ.டொ. 2.65 மில்லியன் தொகை	எதிர்பார்த்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக மற்றும் ஒதுக்கப்பட்டிருந்த நிதியத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு	இந்த செயற்திட்டத்திற்காக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் CRM முறைமையை முன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்த முறைமையை	சமூர்த்தி உதவி நிகழ்ச்சித் திட்டம் அஸ்வெசும என மாற்றப்படல் மற்றும் அந்த உதவி வழங்குதல் நலன்புரி நலன்கள் சபை (WBB) மூலம் மேற்கொள்ளல் மற்றும் அந்த உதவிக் கொடுப்பனவு வாணிக வங்கிகளின்

அல்லது ரூபா 965.47 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமை தொடர்பாக எதுவித பயன்பாடும் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.

தேவையான நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

முன்னேற்றுவதற்கு முன்னர் காணப்படுகின்ற முறைமையை மதிப்பீடு செய்தல் மற்றும் முறைமைகளுக்கு தேவையான முன்னேற்றங்களுக் காக முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிரு ந்தது. அதன்படி, ஆய்வலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது டன், முன்னேற்றுவதற்கா க செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் படி செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந் தது. அதன்படி, குறிப்பிட்ட முறைமையை முன்னேற்றுதல் செயற்திட்டக் காலப் பகுதியில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகி ன்றது.

ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனால் CRM முறைமையை முன்னேற்றுவது அச் சந்தர்ப்பத்தில் தேவைப்படவில்லை. அதேபோல், தற்போது காணப்படுகின்ற Geogoviya முறைமை மதிப்பாய்வு மேற்கொண்டு முடிவடைந்திருக்க ாமையால் அந்த முறைமையை முன்னேற்றுவதும் தாமதம் அடைந்தது. அதன் காரணமாக மிகவும் விரைவாக நிலவுகின்ற தற்போதைய நிலைமை தொடரபாக இரண்டு முறைமைகளிலும் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றங்களை இனங்கண்டு அதற்குத் தேவையான ஏற்பாட்டுத் தொகைக்கான அறிவிக்கும் படி செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது . அதன்படி, அந்த நிறுவனம் இந்த உத்தேச முறைமையை முன்னேற்றுவதற்கா க மற்றும் அதற்கு தேவையான ஏற்பாட்டுத் தொகையினை இதுவரை

அறிவித்திருக்காமையால் 2024 ஆண்டில் அதற்கான செலவொன்று ஏற்பட்டிருக்கவில்லை.

(ஐ) ADB நன்கொடை மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் ஆபத்து ஏற்படக்கூடிய (மகளிர், சிறுவர் மற்றும் ஊனமுற்றோர்களுக்காக) மதிப்பீட்டுச் செலவு ரூபா 695 மில்லியன் தொகைக்கான அவசர உதவியின் கீழான நன்கொடையின் கீழ் காணப்படுகின்ற கருமங்கள் தொடர்பாக 2024 மார்ச் 15 திகதியில் உள்ளவாறு செயல் நடவடிக்கை திட்டத்தில் காணப்படுகின்ற முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (i) நிதி முன்னேற்றமாகிய ரூபா 182 மில்லியன் தொகை - மேற்படி - இணங்குகின்றேன். 2024 ஆண்டிறுதியில் அதன் நிதி முன்னேற்றம் ரூபா 310.39 மில்லியன்

	அல்லது மீளாய்வாண்டு இறுதி மதிப்பீட்டின் 27 சதவீதம் மாத்திரமே.			தொகையாக காணப்பட்டதுடன், அது மதிப்பீட்டின் 45 சதவீதம் ஆகும்.
(ii)	05 பிரதான செயற்பாடுகளுக்குரிய 12 உப செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.	- மேற்படி -	இணங்குகின்றேன். ஆரம்ப செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சில தொழில்பாடுகள் மகளிர், சிறவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. (இரத்துச் செய்யப்பட்டுள்ளது). புதிய தொழிற்பட்டுகளை இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டம் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் 2024.03.22 திகதிய NP/ADB/01/2022/ MOW/CS இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் இந்தத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.	திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கான அங்கீகாரம் இந்தத் திணைக்களம் NP/ADB/01/2022/ MOW/CS இலக்கம் கொண்ட 2024.03.22 திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி செயற்படுத்தும் நிறுவனங்கள் மூலம் அந்தக் கருமங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
(iii)	08 பிரதான தொழிற்பாடுகளுக்குரிய 24 உப தொழில்பாடுகள் தொடர்பாக எதுவித முன்னேற்றமும் கண்டிருக்கவில்	- மேற்படி -	திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, இந்த அலுவல்கள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும்.	

லை.

(ஆ)	விவசாய ஆலோசனை சேவைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் வழங்கியிருந்த அ.டொ. 0.06 மில்லியன் தொகை அல்லது ரூபா 21.86 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் தொடர்பாக எதுவித முன்னேற்றங்களும் அடைந்திருக்கவில்லை.	- மேற்படி	- இந்த அலுவல்கள் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	
(ஒ)	2023/2024 ஆண்டுகளுக்கான விவசாயம்சார் அறிவுறுத்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக (GAP) அ.டொ. 0.25 மில்லியன் தொகை அல்லது ரூபா 91.08 மில்லியனிற்கான நன்கொடைகள் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 57,353 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.	- மேற்படி	- இணங்குகின்றேன். இந்த தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் செயற்திட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	2024 ஆண்டு இறுதியில் ரூபா 4.448 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. அது மதிப்பீட்டில் 5% முன்னேற்றம் ஆகும்.

9.3 நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம்

2018 ஒக்டோபர் 18 இல் ஆரம்பிக்கப்பட்ட நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்துக்காக 6006-LK ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 22,500 மில்லியன் (ஐ.அ,டொலர் 75 மில்லியன்) கடனை வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 2 மில்லியன் ஆகும். இந் நிகழ்ச்சித்திட்டமானது 1 சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டிருந்துடன் 2023 திசெம்பர் 29 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமை பற்றிய சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன, அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக முனைப்பழிஅற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் 2022 ஆம் ஆண்டுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தார்.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கா மொத்தச் செலவு அரசாங்க நிதிகள்	2,013,863	2,084,725	703,654
வெளிநாட்டு நிதிகள்	1,085,318	903,231	31,750
மொத்தச் சொத்துக்கள்	2,077,867,337	2,798,775,254	1,938,874,927
மொத்தப் பொறுப்புக்கள்			
மொத்த நிதி			
வெளிநாட்டு நிதிகள்	739,191,183	104,947,864	(627,454,860)
ஊடாக உள்நாட்டு நிதிகள் ஊடாக	2,013,863	2,084,725	703,654

கூறப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதித்த காரணிகளுக்கு மேலதிகமாக, கடந்த 2 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து எழுப்பப்பட்ட சில முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையிட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதய நிலை
(அ)	மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 339 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 22% சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 73 மில்லியன் தொகை செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2023	அவதானிப்புடன் உடன்பட்டனர்.	ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும் குறித்துரைத்தவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்யாமல் மிகுதித் தொகையினை தீர்ப்பதனூடாக செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
(ஆ)	செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆகும். செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்தக் கடன் பயன்பாடானது ஐ.அ.டொலர் 8.95 மில்லியன் மாத்திரமே ஆகும். இது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட	2023	மேற்கூறியவாறு	மேற்கூறியவாறு	செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்யாமல் மிகுதித் தொகையினை தீர்ப்பதனூடாக செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

(இ)	செயற்திட்டமானது பயன்படுத்தப்படாத கடன் மீது 0.25% ஒப்படைப்புக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அதன் பிரகாரம், 2018 முதல் 2023 வரை நிதியளிப்பு முகவரிற்கு ரூபா 221 மில்லியன் (ஐ.அ.டொலர் 992,133) சிக்கனமற்ற ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.	2023	மேற்கூறியவாறு	ஒப்படைப்புக் கட்டணங்கள் வெளி வளங்கள் திணைக்களத்தால் கையாளப்படுவதால் எந்தக் கருத்துரையையும் தெரிவிக்க முடியாது.	செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்யாமல் மிகுதித் தொகையினை தீர்ப்பதனூடாக செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
(ஈ)	2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.	2023	அவதானிப்புடன் உடன்பட்டனர்.	குறித்துரைத்தவாறு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்யாமல் மிகுதித் தொகையினை தீர்பபதனூடாக செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

9.4 உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டுச் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு ஆக்கக்கூறு

2020 செப்தம்பர் 08 திகதி ஆரம்பிக்கப்பட்ட உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டுச் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு ஆக்கக்கூறிற்காக உலக வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்கங்கள் 6,346-LK, 6,371-LK, 6,228-LK, 8,878-LK இன் கீழ் ரூபா 10,491 மில்லியன் (56 மில்லியன் டொலர்கள்) இற்கான கடன் தொகையொன்று வழங்குவதற்கு இணங்கியிருந்ததுடன், இலங்கை அரச பங்களிப்பு ரூபா 2 மில்லியன் தொகையாக இருந்தது. செயற்திட்டம் 01 சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2023 மார்ச் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமைகள் தொடர்பான சில முக்கிய தகவல்கள் கீழே காண்பிக்கப்படுவதுடன், 2021, 2022 மற்றும் 2023 மூன்று வருடங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுகளுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பளியற்ற அபிப்பிராயம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஆண்டிற்கொன மொத்த செலவு			
அரசாங்க நிதியம்	952,849	1,161,069	----
வெளிநாட்டு நிதியம்	6,088,457,774	4,009,812,548	4,769,397,086
மொத்தச் சொத்துக்கள்	8,896,953,711	15,817,606,299	22,305,635,932
மொத்தப் பொறுப்புக்கள்			
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	8,899,443,437	13,909,071,267	20,395,505,743
உள்நாட்டு நிதியத்தின் மூலம்	952,848	2,113,918	2,113,918

அது தவிர செய்திட்டம் தொடர்பாக கடந்த 02 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைளின் மூலம் எழுந்திருந்த சில முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை
உணவுப் பாதுகாப்புத் தன்மையை வலுப்படுத்துவதற்காக விவசாய பயிர்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் என இனங்கண்டிருந்தது. எனினும், ஒட்டுமொத்த ஏற்பாடுகளின் 85 சதவீதம் அதாவது ரூபா 3,640 மில்லியன் தொகையொன்று கல்வியமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 264 மில்லியன் ஆகும். அது ஒட்டுமொத்த ஏற்பாடுகளில் 6 சதவீதமாக காணப்பட்டது.	2022	எதிர்ப்பார்த்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக, போசாக்கின்மைக்கு எதிராக நடவடிக்கைக்கு எடுப்பதற்காக மற்றும் பாடசாலைக்கு வருகை மற்றும் கல்விச் செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக நாடு பூராகவும் வரையறுக்கப்பட்ட அவதானம் செலுத்தக்கூடிய சிறுவர்களுக்கு போசாக்குள்ள சமனிலை உணவு வேளையொன்று வழங்குவதை உறுதிப்படுத்தல் மிகவும் முக்கிமானதாகும். 19.08 மில்லியன் அமெரிக்க டொலர் ஒன்று பயன்படுத்தப்பட்டு நாடு பூராகவும் தேவைப்பாடுள்ள 7,926 பாடசாலைகளின் 1,081,927 சிறுவர்களுக்காக பகல் உணவு வழங்கும் செய்திட்டத்தை செயற்படுத்துவதற்காக உதவி வழங்குவதற்காக CERC	2023 மார்ச் 31 திகதியில் செய்திட்டம் முடிவடையும் போதும் செயற்திட்டத்தின் பௌதீக கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்தின்
ஆக்கக்கூறு
தீர்மானித்திருந்தது.

9.5 சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம்

2017 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் 5915 எல்கே இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 10,949 மில்லியன் கடனை வழங்குவதற்கு இணங்கி கொண்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 19 மில்லியனாகும். செயற்திட்டம் ஒரு சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்டு 2023 யூன் 30 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செய்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே தரப்படுவதுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய 03 ஆண்டுகளுக்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தன.

ஆண்டு	2021 ரூபா மில்லியன்	2022 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
ஆண்டிற்கான முழு செலவுகள்			
அரசாங்க நிதி	3	3	3
வெளிநாட்டு நிதி	1,576	31	3,498
முழு சொத்துக்கள்	11,661	23,008	26,282
முழு பொறுப்புக்கள்			
முழு நிதி			
வெளிநாட்டு கடன் மூலம்	1,639	283	3,521
வெளிநாட்டு நிதி மூலம்	3	3	3

இதற்கு மேலதிகமாக செயற்திட்டம் கடந்த 03 ஆண்டுகளுக்காக சமர்ப்பித்த கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து தோன்றிய கணக்காய்வு அவதானிப்புக்களில் சில பின்வருமாறாகும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	தொடர்பு பட்ட ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள்	கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுத்த தவிர்த்தல் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை
(அ)	செயற்திட்டத்திற்கான செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 03 இன் (அமுல்ப்படுத்தும் ஒழுங்குவிதி) 26 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட	2023	செயற்திட்ட செய்பாட்டு அலகின் உடன்படிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்த	சமூர்த்தி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த செலவு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு	செயற்திட்ட செயற்பாட்டு அலகின் உடன்படிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை

	முகாமைத்துவ அலகினால் ஒன்றிணைந்த திரண்ட செலவினை கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் செலவு அறிக்கை MoSEW இடமிருந்து பெற்று ஒன்றிகைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது உலக வங்கியிடமிருந்து மீளப்பெற்றிருந்த ரூபா 2,689 மில்லியன் தொடர்பாக விண்ணப்பப்த்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		ல் வேண்டும்.	செயற்திட்ட முகாமைத:துவ அலகினால் (PMU) ஒன்றிணைந்த செலவு அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சமர்ப்பித்திலானது செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 03 இன் 26 மற்றும் 27 ஆம் பிரிவுகளுக்கு இணங்க இடம்பெற்றுளளதுடன் உலக வங்கி அதனை ஏற்றுக் கொண்டுள்ளது.	எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	செயற்திட்டத்தின் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ரூபா 16 மில்லியனான நிலையான சொத்துக்களின் பெறுமதியை திருப்திகரமாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.	2023	நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.	குறித்துக்கொள்ளப்பட்டது.	நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.
(இ)	செயற்திட்டத்தின் அறிக்கைகளுக்கு இணங்க விண்ணப்பபத்திரத்தினை கணினமயப்படுத்துவதற்காக 15 பிரதேச செயலகங்களுக்கு	2023	உரிய தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதனை செயற்திட்ட செயற்பாட்டு பிரிவு	குறித்துக்கொள்ளப்பட்டதுடன் விண்ணப்பபத்திரங்களை கணனிமயப்படுத்துதலானது இஸ்வெசும	உரிய தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்டடுள்ளது என செயற்திட்ட செயற்பாட:டு பிரிவினால்

	மொத்தமாக ரூபா 1.3 மில்லியன் உரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 13 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.2 மில்லியன் உரிய உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது என்பதனை சான்றுபடுத்துவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		சான்றுபடுத்துதல் வேண்டும்.	முறைமையினால் உறுதிப்படுத்தியதன பின்னர் உரிய பிரதேச செயலாத்தினால் மேற்கொளளப்பட்ட வேண்டுதல்களினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கும் கொடுப்பனவு செய்வதற்காக தேவையான நிதி SLIP இன் ஊடாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்பட்டது.	உறுதிப்படுத்தப்படவில்லை.
(ஈ)	தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பிற்கு இணங்க விலைப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்கு 13 பிரதேச செயலகங்களுக்கு 1.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 10 பிரதேச செயலகங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 716,634 மொத்த பெறுமதிக்கான வவுச்சர்கள் மற்றும் மூல ஆவணங்களின் தொடக்க பிரதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	2023	உரிய தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என்பதனை செயற்திட்ட செயற்பாட்டு பிரிவு சான்றுபடுத்துதல் வேண்டும்.	குறித்துக்கொள்ளப்பட்டது.	உரிய தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு செயற்திட்ட செயற்பாட்டு பிரிவு சான்றுபடுத்தியிருக்கவில்லை.
(உ)	2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி e-Wis உடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க ஒருங்கிணைந்த சமூக நலன்புரி	2023	செயற்திட்ட செயற்பாட்டு பிரிவின் உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்	அனைத்து கொடுப்பனவுகளும் TOR இற்கு இணங்க நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவின்	செயற்திட்ட செயற்பாட்டு பிரிவின் உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக

	முகாமைத்துவ முறைமையை தோற்றுவித்தல் 2023 ஏப்ரல் 10 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் இறுதித் திகதியில் உள்ளவாறு 12 மொடியூல்களில் 08 மொடியூல்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் நிதி செயலாற்றல் ரூபா 25 மில்லியனான மொத்த ஒப்பந்த பெறுமதியில் ரூபா 15 மில்லியன் அல்லது 60 சதவீதமாக இருந்ததுடன் அதற்கிணங்க செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.		வேண்டும்.	சிபாரிசிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது.	வில்லை.
(ஊ)	செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிதி அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்பட்டிருக்கவில்லை.	2021	சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் நிதிபபிரமாணங்களுடன் இணங்கியிருத்தல் அத்தியவசியமானதாகும்.	இரண்டு கடிதங்களின் மூலம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு தற்பொழுது தெரிவிக்கப்பட்டுளது.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

10. இடர் முகாமைத்துவ பிரிவு

10.1 தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்கான செயற்திட்டம்

2019 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்காக செயற்திட்டத்திற்காக ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் கடன் உடன்படிக்கை இலக்க எல் 0124 இன் கீழ் ரூபா 14,528 ஆன கடன் தொதகையை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், இலங்கை அரசின் பங்களிப்பானது ரூபா 3,868.08 மில்லியன் ஆகும். செயற்திட்டம் இரு சந்தர்ப்பங்களில் நீடிப்பு செய்யப்பட்டு 2025 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பில் முக்கியமான சில விடயங்கள் கீழே காணப்படுவதுடன், 2021, 2022 மற்றும் 2023 ஆகிய 3 வருடங்களுக்கு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முனைப்பழியற்ற அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

ஆண்டு	2021	2022	2023
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஆண்டின் மொத்த செலவினம்			
அரச நிதி	49	262	652
வெளிநாட்டு நிதி	145	754	2,281
மொத்த சொத்துக்கள்	1,599	2,658	5,983
மொத்த பொறுப்புகள்	456	263	141
மொத்த நிதியம்			
வெளிநாட்டு கடன் மூலம்	757	1,511	3,798
உள்நாட்டு நிதியம் மூலம்	436	698	1,349

செயற்திட்டத்திற்குரியதாக கடந்த 3 வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் உருவாகிய முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
(அ)	2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் செயற்திட்ட மேவுகைக் குழுக் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 01 குழு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.	2021, 2022	சுற்றறிக்கையில் உள்ள அறிவுரைகளுக்கமைய இணக்கங்கள் தேவைப்படுகின்றது.	பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மேவுகைக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு தவறியிருந்தது.	2024 ஆம் ஆண்டு முதல் 02 மேவுகைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

